# தேர்தல் ஆணைக்குழு

2023 வரவுசெலவுத் திட்ட குழுநிலை விவாதத்திற்கு சமர்ப்பிக்கப்படும்

# முன்னேற்ற அறிக்கை



# தேர்தல் ஆணைக்குழு

# 2023 வரவுசெலவுத் திட்ட குழுநிலை விவாதத்திற்கு சமர்ப்பிக்கப்படும் முன்னேற்ற அறிக்கை

**2023 வரவுசெலவுத் திட்ட குழுநிலை விவாதத்திற்கு சமர்ப்பிக்கப்படும் முன்னேற்ற அறிக்கை**

**தயாரிப்பு, கணினி பக்க வடிவமைப்பு மற்றும் திட்டமிடல்:**
சட்டம், விசாரணைகள் மற்றும் திட்டமிடல் பிரிவு

**வெளியீடு**
தேர்தல் ஆணைக்குழு, சரண மாவத்தை, இராஜகிரிய.

# உள்ளடக்கம்

**பகுதி I**

தவிசாளர் விடுக்கும் செய்தி ........ vi

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் விடுக்கும் செய்தி ........ viii

1. தேர்தல் திணைக்களம் ........ 1
2. தேர்தல் ஆணைக்குழு ........ 1
3. தேர்தல் ஆணைக்குழுவின் குறிக்கோள்களும் தத்துவங்களும் ........ 2
4. தேர்தல் ஆணைக்குழுவின் தொலைநோக்கு, பணித்திட்டம், பெறுமானங்கள், கவனயீர்ப்புப் பகுதிகள், மூலோபாயங்கள், குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் ........ 4
5. 1931 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை தேர்தல் ஆணைக்குழுவினால் அமுல்படுத்தப்படும் சட்டங்கள் ........ 8
6. தேர்தல் ஆணைக்குழுவின் நிருவாகக் கட்டமைப்பு ........ 10
7. தேர்தல் ஆணைக்குழுவின் கிளைகளும் அவற்றின் கடமைகளும் ........ 11

I. ஆணைக்குழு செயலகம் ........ 11

II. தேசிய தேர்தல்கள் கிளை ........ 11

II.I தகவல் தொழில்நுட்பப் பிரிவு ........ 12

III. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கிளை ........ 12

III.I விசேட கருத்திட்டப் பிரிவு ........ 13

IV. நிருவாகக் கிளை ........ 13

IV.I தாபனப் பிரிவு ........ 14

IV.II. போக்குவரத்துப் பிரிவு ........ 14

IV.III. பெறுகை மற்றும் சொத்து முகாமைத்துவப் பிரிவு ........ 14

V. நிதிக் கிளை ........ 15

VI. சட்டம், விசாரணை மற்றும் திட்டமிடல் கிளை ........ 15

VII. உள்ளக கணக்காய்வுக் கிளை ........ 16

VIII. மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்கள் ........ 17

8. தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட்குழு ........ 18

## பகுதி II


1. 2022 - 2025 மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்தல்.....21
2. வருடாந்த செயல் திட்டம்.....21
3. தேர்தல் ஆணைக்குழுக் கூட்டங்கள் .....22
4. தேர்தல் சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட தெரிகுழுவினால் வழங்கப்பட்டுள்ள விதப்புரைகள்.....24
5. அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்தலும் விண்ணப்பம் கோரலும் .....33
6. வாக்காளர்களைப் பதிவுசெய்தல்.....34
7. 2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு.....36
8. 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டம் .....38
9. தேருநர் இடாப்பு மீளாய்வு - 2022 .....40
10. 2022 மேலதிக குறைநிரப்பு தேருநர் இடாப்பைத் தயாரித்தல் .....47
11. 2022 (1) குறைநிரப்பு தேருநர் இடாப்பைத் தயாரித்தல் .....51
12. 2022 (2) குறைநிரப்பு தேருநர் இடாப்பைத் தயாரித்தல் .....52
13. 2022(3), 2022(1), 2023(2), 2023(3) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களைத் தயாரித்தல்...53
14. பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புதல் .....54
15. மாகாண சபைத் தேர்தல்.....54
16. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள்.....55
17. தகவல் தொழில்நுட்பப் பாவனை.....55
18. விசேட கருத்திட்டங்கள் .....60
    18.1 வாக்காளர் தின நினைவு வைபவம் .....61
    18.2 சர்வதேச ஜனநாயக தின நினைவு வைபவம் .....62
    18.3 அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை ஊக்குவித்தல்/பெண்களை வலுவூட்டுதல் .....62
    18.4 தேர்தல் செயன்முறைக்கு வலிமையிழந்த பிரஜைகளின் பங்கேற்பைப் பெற்றுக்கொள்ளல். .....63
19. சட்ட அலுவல்கள் .....67
20. தேர்தல் பிணக்குத் தீர்வு .....70
21. நிதிசார் கட்டுப்பாடு .....72
22. கணக்காய்வுத் தகவல்கள்.....72
23. கட்டுமானங்களும் புதுப்பித்தல்களும் (செலவு விடயம் 2001) .....73
24. வாகனங்களின் பாவனையும் பராமரிப்பும் .....73
25. 2022 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் பயிற்சிகள் .....73
26. வெளிநாட்டுப் பயிற்சிகள் .....75
27. செயலாற்றுகை அறிக்கை.....76
28. இடமாற்றல்கள் .....76
29. ஓய்வுறுத்தல்கள் .....77

30. தகவல் முகாமைத்துவ முறைமைகள் ........................................................................................77
31. பணிகளும் கடமைகளும் பற்றிய வேலை ஆய்வு ....................................................................77
32. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம்
தொடர்பான அலுவல்கள்.....................................................................................................................77
33. ஊடக ஒருங்கிணைப்பு அலுவல்கள்......................................................................................................78
34. ஆவணக் காப்பகம் .................................................................................................................................79
35. அறிவு முகாமைத்துவ அலகும் அரும்பொருட் காட்சியகமும் ...............................................79
36. தேர்தல் ஆணைக்குழுவின் வெளியீடுகள் ......................................................................................80

## தவிசாளர் விடுக்கும் செய்தி

ஆட்சியதிகாரத்தில் பங்கேற்பதற்கான மக்களின் உரிமையை முழுமையாக அடைந்து கொள்ளும் பொருட்டு மக்களின் இறைமை பாதுகாக்கப்படும் விதத்தில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடாத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு பாரியதொரு செயற்பொறுப்பை முன்னெடுக்கின்ற ஒரு பின்னணியில் இலங்கைப் பாராளுமன்றத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட குழுநிலை விவாதத்திற்காக சமர்ப்பிக்கப்படும், தேர்தல் ஆணைக்குழு 2022 ஆம் ஆண்டில் ஆற்றிய பணிகளின் முன்னேற்றத்தை இவ்வறிக்கையின் கண் காணலாம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவாறு தேர்தல்களையும் வாக்கெடுப்புகளையும் மக்கள் தீர்ப்புக்களையும் நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்களுக்கமைய சுதந்திரமாகவும் நீதியாகவும் நடாத்துவதும், வருடாந்த தேருநர் இடாப்பைத் தயாரிப்பதும், அதன் மீளாய்வுச் செயன்முறையை மேற்கொள்வதும் தேர்தல் ஆணைக்குழுவின் தத்துவங்கள் மற்றும் கடமைகளில் அடங்குகின்றபோதும், ஆணைக்குழுவின் கடமைகளும் பணிகளும் அத்தகைய நடவடிக்கைகளுடன் மாத்திரம் வரையறுக்கப் படுவதில்லையென இலங்கையின் அரசியலமைப்பு குறிப்பிடுகின்றது. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடாத்துவதற்கான பெரும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது. இச்சட்டதிட்டங்கள் யாவும் நாட்டின் சனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கான தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பொன்றாகக் கருதப்படுகிறது. அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பங்களிப்பை வழங்குவதற்கும் ஆணைக்குழு இவ்வாண்டில் உயர்ந்தபட்ச அளவில் இயலுமை பெற்றுள்ளதென்பதை ஈண்டு குறிப்பிட விரும்புகின்றேன்.

நாட்டில் ஏராளமான எதிர்பாரா நிகழ்வுகள் இடம்பெற்ற ஒரு காலப்பகுதியினுள் இவ்வாண்டில் எதிர்பார்த்த அனைத்து இலக்குகளையும் உரியவாறு எய்துவதற்கு தடங்கல்கள் ஏற்பட்டமை யாவரும் அறிந்ததே. நாட்டின் ஒட்டுமொத்த சமூக/பொருளாதார செயன்முறையின் மீது தாக்கம் செலுத்திய நிகழ்வுகளாக அவை அமைந்தபோதும், அத்தகைய தடங்கல்களுக்கு மத்தியிலும் தேர்தல் ஆணைக்குழு 2022-2025 கால பணிச்சட்டத்திற்கான பங்கேற்பு மூலோபாயத் திட்டமொன்றைத் தயாரித்து அதில் காட்டப்பட்ட மூலோபாய செயற்பாடுகளை அமுல்படுத்த ஆரம்பித்தல், பதினெட்டு வயதை எய்தியவுடன் தேருநர் இடாப்பில் பதிவுசெய்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்ட புதிய சட்டத்திற்கமைய 2022 வருடாந்த தேருநர் இடாப்பு மீளாய்வுச் செயன்முறையின் பணிகளை சிறப்பாக மேற்கொள்ளல், எதிர்வரும் தேர்தல்களுக்கான சட்ட ரீதியான செயற்பாடுகளில் அத்தியாவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய சட்ட மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், நாட்டின் பொது மக்களினாலும் தரப்புக் குழுக்களினாலும் நீண்டகாலமாக முன்மொழியப்பட்ட தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்தல் சம்பந்தமான சட்டமூலத்தை அமைச்சரவை அங்கீகாரம் பெறுவதற்காக கௌரவ சனாதிபதி அவர்களுக்கு

ஆற்றுப்படுத்துதல், தொழில்நுட்பத்தை மக்கள் நலனுக்காக ஈடுபடுத்திக்கொண்டு தேர்தலுடன் சம்பந்தப்பட்ட கருமங்களுக்கான எளிய மற்றும் வசதியான முறைமைகளை அறிமுகப்படுத்தல், ஆணைக்குழுவின் அலுவலர்களின் இயல்திறன் விருத்தியையும் பௌதிக வளங்களையும் முன்னேற்றுதல் முதலான நடவடிக்கைகளின் மூலம் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்ள முடிந்ததென்பதை தயக்கமின்றி குறிப்பிட விரும்புகின்றேன். அதேபோல், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை உறுதிப்படுத்துவதற்காக தரப்புக் குழுக்களான வலதுகுறைந்தோர் சமுதாய, இளைஞர் மற்றும் மகளிர் ஒழுங்கமைப்புகளுடன் ஒன்றிணைந்த ஏராளமான நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மற்றும் செயலாளர் உள்பட தேர்தல் ஆணைக்குழுவின் அனைத்து அலுவலர்களும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் அனைத்து அலுவலர்களும் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைக்கு மதியியிலும் ஆணைக்குழுவின் தொலைநோக்கை/பணித்திட்டத்தை அடைந்துகொள்வதற்காக தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளும் அலுவலர்களினால் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்ட பணிகளும் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பெரும் அர்ப்பணிப்பின் ஊடாக இவ்வுயர் முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடிந்ததென்பதை அவர்களுக்கு மதிப்பளிக்குமுகமாக இங்கு குறிப்பிடுவதுடன் அது குறித்து அவர்கள் அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு இவ்வெற்றியை அடைந்துகொள்வதற்காக ஆணைக்குழு உறுப்பினர்கள் வழங்கிய கூட்டான முயற்சிகளையும் பணிகளையும் பெரிதும் போற்றுகின்றேன். அத்தோடு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள்/அரசாங்க அதிபர்கள் உள்ளிட்ட ஆணைக்குழுவின் அலுவல்களுடன் சம்பந்தப்பட்ட அரச அலுவலர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் கண்காணிப்பு ஒழுங்கமைப்புக்களின் பிரதிநிதிகள் வழங்கிய ஒத்துழைப்பும் மதிப்பிடப்பட வேண்டும். மேலும், மிகவும் குறுகிய ஒரு காலப்பகுதியினுள் தேர்தல் ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கமைய இவ்வறிக்கையைத் தயாரிப்பதற்கு தேவைப்படும் தகவல்களையும் நிழற்படங்களையும் வழங்கி உதவிய அனைத்து பிரிவுத் தலைவர்களுக்கும், இவ்வறிக்கையை தயாரித்த சட்டம், விசாரணைகள் மற்றும் திட்டமிடல் பிரிவின் பணியாட்குழுவினருக்கும் இவ்வறிக்கையின் மொழிபெயர்ப்புப் பணியை சிரமேற்கொண்ட ஆணைக்குழுவின் மொழிபெயர்ப்பாளர்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

**சட்டத்தரணி நிமல் ஜீ புஞ்சிஹேவா**
தவிசாளர்
தேர்தல் ஆணைக்குழு

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் விடுக்கும் செய்தி

“சர்வஜன வாக்குரிமையைப் பாதுகாக்கும் ஒரு ஜனநாயக நாடு” என்ற தொலைநோக்கை அடைந்துகொள்ளும் பொருட்டு அனைத்து விதமான ஜனநாயக மூலக் கோட்பாடுகளையும் கட்டிக்காத்து, பிரஜைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றவாறு, சுதந்திரமானதும் நீதியானதும் நம்பத்தகுந்ததுமான தேர்தல் செயன்முறையொன்றை நடாத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு அரும் பணியாற்றுகின்றது. இவ்வாறான ஒரு பின்புலத்தில் இலங்கைப் பாராளுமன்றத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட குழுநிலை விவாதத்திற்கு சமர்ப்பிக்கப்படும் 2022 ஆம் ஆண்டின் தேர்தல் ஆணைக்குழுவினால் ஆற்றப்பட்ட பணிகளின் முன்னேற்றத்தை இவ்வறிக்கை எடுத்தியம்புகின்றது.

தேர்தல் ஆணைக்குழு நியதிச்சட்ட ரீதியாக ஒப்படைக்கப்பட்டுள்ள சட்டப் பணிச்சட்டத்தின் அடிப்படையில் செயலாற்றி, குறித்த சட்டச் சட்டத்தின் இடைவெளியை மேலும் விரிவுபடுத்துவதற்கு முயற்சிப்பதன் ஊடாக ஜனநாயகத்தை மேலும் உறுதிப்படுத்தும் பொருட்டு பரந்தளவிலான பணிகளை ஆற்றுவதற்குத் தேவையான பாரிய செயற் பொறுப்பொன்றை தேர்தல் ஆணைக்குழு ஆற்றி வருகின்றது. குறித்த செயற்பொறுப்பை நிறைவேற்றும்போது தேர்தல் ஆணைக்குழுவுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் திறத்தவர்களதும் கருத்துக்களையும் யோசனைகளையும் பெற்றுக்கொண்டு, பங்கேற்பு மூலோபாயத்தின் ஊடாக தேர்தல் ஆணைக்குழுவின் இலக்குகளை அடைந்துகொள்வதற்குத் தேவையான பூர்வாங்கப் பணிகளை மேற்கொள்வதற்கு ஆற்றல் கிடைத்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 103(2) உறுப்புரைக்கமைய சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடாத்துவது ஆணைக்குழுவின் முக்கிய செயற்பொறுப்பாக விளங்கியபோதும், அதனைத் தாண்டி குறித்த சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடாத்துவதற்கு உறுதிபூணுமுகமாக மேலும் தேவைப்படக்கூடிய சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு கடந்த ஆண்டில் தேர்தல் ஆணைக்குழு பாரிய முயற்சியெடுத்தது. தேருநர்களைப் பதிவுசெய்யும் புதிய சட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள முடிந்ததையும், தேர்தல் செலவுக் கட்டுப்பாட்டுக்கான சட்டமூலத்தை அமைச்சரமைக்கு சமர்ப்பிக்க முடிந்ததையும் குறித்த துறையில் அடைந்த முன்னேற்றங்களாக அடையாளம் காணலாம். அதேபோல், தேர்தல் மற்றும் வாக்கெடுப்புக் கட்டமைப்பிலும் சட்டதிட்டங்களிலும் மறுசீரமைப்புகளை அடையாளம் காண்பதற்கும், அது சம்பந்தமாக தேவையான திருத்தங்களை முன்வைப்பதற்குமான பாராளுமன்ற தெரிகுழு நியமிக்கப்பட்டுள்ளமை மேற்குறித்த மறுசீரமைப்புக்கு பெரும் உந்துதலொன்றாக அமையும்.

இடையூறுகளுக்கு மத்தியிலும் நவீன தொழில்நுட்பத்துடன் இற்றைப்படுத்தி 2021 இல் ஆரம்பித்த தேருநர் இடாப்பில் இயங்கலை முறை ஊடாக பதிவுசெய்யும் முறையை முன்னெடுத்துச் சென்று கடந்த ஆண்டில் சந்தித்த பலவீனங்களை தவிர்த்து மேலும் வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு 2022 ஆம் ஆண்டில் முடிந்தது. கடந்த காலப்பகுதியில் நாட்டில் எழுந்த சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமை ஏனைய அனைத்து துறைகள்

மீதும் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் நேரடியாக தாக்கம் செலுத்தியதுடன், குறித்த அனைத்து சவால்களுக்கும் வெற்றிகரமாக முகங்கொடுத்து தமது நோக்கங்களையும் இலக்குகளையும் அடைந்துகொள்வதற்காக 2023-2025 காலப்பகுதிக்கான பங்கேற்பு மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்து அதன்படி தேர்தல் ஆணைக்குழுவின் பணிகளை திசைமுகப்படுத்த முடிந்தமையும் நாம் அடைந்த ஒரு வெற்றியாகும்.

அனைத்து சவால்களுக்கு மத்தியிலும் தயங்காமல் இலக்குகளை நோக்கி வழிநடாத்த என்றும் பக்கபலமாக அமைந்த தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட அதன் உறுப்பினர்களையும் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களின் அனைத்து அலுவலர்களையும் இங்கு பெரிதும் போற்ற விரும்புகின்றேன். அதேபோல், அனைத்து மாவட்டச் செயலாளர்களும் தேர்தல் ஆணைக்குழுவின் பணிகளிலும் தொடர்ந்தும் செயலாற்றும் அனைத்து அமைச்சுக்கள் மூலமும் திணைக்களங்கள் மூலமும் கிடைத்த ஒத்துழைப்பையும் நினைவூட்ட விரும்புகின்றேன். அனைத்து அரச அலுவலர்களையும் சிவில் அமைப்புக்களையும் அரசியல் கட்சிகளையும் கண்காணிப்பு அமைப்புகளையும் அரச சார்ப்ற அமைப்புக்களையும் அனைத்து ஊடக நிறுவனங்களையும் இவ்வேளை நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

இவ்வறிக்கையைத் தயாரிப்பதற்கு முன்வந்து உழைத்த சட்டம், விசாரணை மற்றும் திட்டமிடல் பிரிவின் பணியாட்குழுவினர் அனைவருக்கும், அதற்கவசியமான தகவல்களை வழங்கி உதவிய தலைமை அலுவலகத்தின் அனைத்து பிரிவுத் தலைவர்கள் உள்ளிட்ட அலுவலர்களையும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்
தேர்தல் ஆணைக்குழு

## 01. தேர்தல் திணைக்களம்

நாட்டின் ஆட்சி அலுவல்களில் பங்குபற்றுவதற்கு அதிகளவு வாய்ப்பை உள்நாட்டு மக்களுக்கு வழங்க வேண்டுமென 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுந்த பெரும் ஆர்ப்பாட்டங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் புதிய யாப்பொன்றை உருவாக்குமுகமாக பிரித்தானிய முடியினால் 1944 ஆம் ஆண்டில் சோல்பரி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. சோல்பரி ஆணைக்குழு வாக்காளர்களைப் பதிவுசெய்வதற்கும் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற்குமான சட்டங்களை உருவாக்கியதுடன் 1946 செப்தெம்பர் 26 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தலுக்கான அரச கட்டளையைப் பிறப்பித்தது. உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தலை நடாத்துவதற்காக 1946 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி கட்டளைச்சட்டம் முன்வைக்கப்பட்டது. 1946 முதல் 1955 வரையான காலப்பகுதியில் வாக்காளர்களைப் பதிவுசெய்வதற்கும் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற்கும் ஆணையாளரொருவரின் கீழ் உள்ளூராட்சித் தேர்தல் திணைக்களம் செயற்பட்டது. இவ்வாறு தனித்தனியாக காணப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் திணைக்களம், உள்ளூராட்சி தேர்தல் திணைக்களம் என்பவற்றை ஒன்றிணைத்து 1955 அக்டோபர் மாதம் 01 ஆம் திகதி தேர்தல் திணைக்களம் தாபிக்கப்பட்டது.

## 02. தேர்தல் ஆணைக்குழு

2001 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 03 ஆம் திகதி அரசியலமைப்புக்கான 17 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டதுடன், அத்திருத்தத்திற்கு அமைய அரசியலமைப்புச் சபையின் விதப்புரையின் பேரில் சனாதிபதியினால் தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும். எனினும், நியமனங்கள் தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக எதிர்பார்த்தவாறு தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படவில்லை. அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட 17 ஆவது திருத்தத்திற்கு அமைய தேர்தல் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படும் வரை அப்பதவிகளை வகித்த ஐந்தாவது தேர்தல் ஆணையாளருக்கு தேர்தல் ஆணைக்குழுவின் கடமை அலுவல்களை நிறைவேற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. 2010.09.09 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தின் மூலம் தேர்தல் ஆணைக்குழுவின் இணைப்பாக்கம் மூன்று(3) உறுப்பினர்கள் வரை குறைக்கப்பட்டது. அதேபோல், தேர்தல் ஆணைக்குழு தாபிக்கப்படும் வரை ஆணைக்குழுவின் தத்துவங்களையும் கடமைகளும் அமுலாக்கும் பொறுப்பு தேர்தல் ஆணையாளரினால் நிறைவேற்றப்பட வேண்டும். எனினும், அதுவரையிலும் தேர்தல் ஆணைக்குழு தாபிக்கப்படவில்லை.

2015 ஆம் ஆண்டின் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்திற்கமைய சுயாதீன ஆணைக்குழுக்களைத் தாபிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அதற்கமைய அதுவரை காணப்பட்ட தேர்தல் திணைக்களம் இரத்துச்செய்யப்பட்டு அரசியலமைப்புச் சபையின் பரிந்துரையின் பேரில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் தவிசாளர் உள்பட மூன்று உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல் ஆணைக்குழு 2015.11.13 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. அந்த ஆணைக்குழுவின் கூட்ட நடப்பெண்ணும் மூன்று(3) உறுப்பினர்களைக் கொண்டதாக இருந்தது. ஐந்து(5) வருடங்களுக்கு அவ்வாணைக்குழு செயற்பட்டது. 2018.02.10 ஆம் திகதி உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தலும் (ஒரு சபை தவிர) 2019.10.11 ஆம் திகதி எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலும் 2019.11.16 ஆம் திகதி சனாதிபதித் தேர்தலும் 2020.08.05 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தலும் அவ்வாணைக்குழுவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் நடாத்தப்பட்டது.

2020 அக்டோபர் மாதம் 29 ஆம் திகதி கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தத்தின் மூலம் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐந்து (5) வரை அதிகரிக்கப்பட்டது. அதற்கமைய 2020.12.10 ஆம் திகதி பாராளுமன்றச் சபையின் பரிந்துரையின் பேரில் இரண்டாவது தேர்தல் ஆணைக்குழு மேதகு ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்டது. அது, தவிசாளர் உள்பட ஐந்து(5)

உறுப்பினர்களைக் கொண்டதாகும். அந்த ஆணைக்குழுவின் கூட்ட நடப்பெண், மூன்று(3) உறுப்பினர்களாகும்.

சட்டத்தரணி திரு. நிமல் ஜீ.புஞ்சிஹேவா அவர்கள் தவிசாளராகவும், பொதுத் திறைசேரியின் முன்னாள் பிரதிச் செயலாளரொருவரான திரு. எஸ்.பி.திவாரத்ன, முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் திரு. எம்.எம்.மொஹமட், முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு.கே.பீ.பீ.பத்திரண, மனித உரிமைகள் செயற்பாட்டாளரொருவரான திரு. ஜீவன் தியாகராஜா ஆகியோர் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டனர். திரு. ஜீவன் தியாகராஜா அவர்கள் 2021.10.10 ஆம் திகதி வடமாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டமையால், அவ்வெற்றிடத்திற்கு சிரேட்ட நிருவாக அலுவலரொருவரான முன்னாள் வடமாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்கள் 2021.10.28 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.

## 03. தேர்தல் ஆணைக்குழுவின் குறிக்கோள்களும் தத்துவங்களும்

அரசியலமைப்பின் 103(2) ஆம் உறுப்புரைக்கமைய சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களையும் மக்கள் தீர்ப்புக்களையும் நடாத்துதல் ஆணைக்குழுவின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். அத்தோடு செயல்வலுப்பெறும் தேர்தல் சட்டங்களுக்கமைய தேர்தல்களை நடாத்துவதற்கும், வருடாந்த தேருநர் இடாப்பை தயாரிப்பதற்கும் மீளாய்வு செய்வதற்கும் ஆணைக்குழுவுக்கு தத்துவமுள்ளது. ஆணைக்குழுவின் அலுவல்கள் அந்த தத்துவங்களுக்கும் கடமைகளுக்கும் வரையறுக்கப்படவில்லையென அரசியலமைப்பின் 104ஆ (1) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்புடைய சட்ட ஒழுங்குவிதிகளுக்கமைய தேர்தல்களை நடாத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள தேர்தல்கள் திணைக்களத்தை விட கூடுதலான ஒரு விசேட பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப் பட்டுள்ளது. அதனுடன் தொடர்புடைய அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் ஊடாக முதன்மைச் சட்டவாக்கத்திற்கு விசேட ஏற்பாடுகள் உட்சேர்க்கப்பட்டுள்ளமையால், தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரமும் பலமும் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவை அமைக்கும்போது ஆணைக்குழுவுக்கு விசேட தத்துவங்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசியலமைப்பின் 104 அ உறுப்புரையின் கீழ் நீதிமுறை நியாயாதிக்கத்தின் கீழ்,

1. ஆணைக்குழு எடுக்கும் முடிவுகள், ஏற்பாடுகள் அல்லது செயற்பாடுகள் இறுதியானதும் அறுதியானதுமாக இருத்தல் மற்றும்
2. தேர்தல் ஆணைக்குழு உறுப்பினரொருவர் அல்லது அலுவலரொருவர் தேர்தலொன்றை நடாத்துவதுடன் தொடர்புடைய யாதேனுமொரு சட்டத்தின் கீழ் நல்லெண்ணத்துடன் மேற்கொண்ட யாதேனுமொரு செயல் சம்பந்தமாக சிவில் வழக்கொன்றை அல்லது வழக்கு நடவடிக்கையொன்றை தாக்கல் செய்ய முடியாமை

போன்ற விசேட விடுபாட்டுரிமைகள் வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய விசேட விடுபாட்டுரிமைகள் 126 ஆவது உறுப்புரையின் கீழ் அடிப்படை உரிமை மீறல் சம்பந்தமான மேன்முறையீட்டு நீதிமுறை நியாயாதிக்கம், 130 ஆவது உறுப்புரையின் கீழ் சனாதிபதித் தேர்தல், தேர்தல் மனுக்கள் முதலியன சம்பந்தமாக காணப்படும் மேன்முறையீட்டு நீதிமுறை நியாயாதிக்கம், 144 ஆவது உறுப்புரையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் பதவியொன்றுக்கு தெரிவுசெய்யப்படுவதற்குரிய மனுக்களை விசாரிப்பதற்கான மேன்முறையீட்டு நீதிமுறை நியாயாதிக்கத்தின் கீழேயே வழங்கப்பட்டுள்ளன. மேலும், தேர்தல் செயன்முறையை செயற்படுத்தும்போது சட்டங்களை வினைப்படுத்தலும் பாதுகாத்தலும் தனது அலுவல்கள் சம்பந்தமாக ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் என்பன தவிர ஏனைய பொறுப்புக்க்கான கடப்பாட்டை தேர்தல் ஆணைக்குழு கொண்டிருப்பதில்லை என்பது ஒரு சிறப்பம்சமாகும். இது தவிர, அரச சொத்துக்களின்

துஷ்பிரயோகத்தைத் தடுத்தல் சம்பந்தமான விசேட அதிகாரம் 104ஆ(4) (அ) உறுப்புரையின் கீழ் வழங்கப்பட்டுள்ளதுடன் 104(5)(அ) உறுப்புரைக்கமைய தேர்தல் காலப்பகுதியில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதை உறுதிப்படுத்துவதற்காக ஊடக நிறுவனங்களுக்கு ஊடக வழிகாட்டிநெறிகளை விதித்துரைப்பதற்கும் அது தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. 104இ உறுப்புரையின் கீழ் பொலிஸாரை ஈடுபடுத்திக் கொள்வதற்கும், 104ஈ உறுப்புரையின் கீழ் ஆயுதப் படைகளை ஈடுபடுத்திக் கொள்வதற்கும் ஆணைக்குழுவுக்கு விசேட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 04. தேர்தல் ஆணைக்குழுவின் தொலைநோக்கு, பணித்திட்டம், பெறுமானங்கள், கவனயீர்ப்புப் பகுதிகள், மூலோபாயங்கள், குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள்

**தொலைநோக்கு**

"சர்வஜன வாக்குரிமையைப் பாதுகாக்கும் ஒரு ஜனநாயக நாடு"

**பணித்திட்டம்**

"மக்கள் இறைமை, சர்வஜன வாக்குரிமை மற்றும் அதனோடு தொடர்புடைய சனநாயக மூலக் கோட்பாடுகள் என்பவற்றைப் பாதுகாத்து, பிரசைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற விதத்தில் ஏற்புடையவாறு அனைத்துத் தரப்புக்களையும் அறிவுறுத்துகின்ற சுதந்திரமானதும், நீதியானதும் நம்பத் தகுந்ததுமான தேர்தல் செயன்முறையொன்றை வினைத்திறனும் விளைத்திறனும் கொண்டதாக மேற்கொள்ளல்"

### பெறுமானங்கள்

- **நேர்மை (உறுதி)**

  தேர்தல் ஆணைக்குழு மற்றும் அதன் அலுவலர்களின் நேர்மை, சிறந்த நடத்தை மற்றும் உறுதியான கொள்கைகளைப் பேணி வரல்.

- **வெளிப்படைத்தன்மை**

  தேர்தல் ஆணைக்குழு மற்றும் அதன் அலுவலர்கள் உண்மையாகவும், நீதியாகவும் மற்றும் திறந்த மனதுடனும் அனைத்து நடவடிக்கைகளின்போதும் செயலாற்றுதல்.

- **திறந்த தன்மை**

  தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர் எவரும் ஒளிவுமறைவின்றி கதைத்தல் மற்றும் செயலாற்றுதல்.

- **அர்ப்பணிப்பு**

  தேர்தல் ஆணைக்குழுவின் அலுவல்களின்போது அதன் தெலைநோக்கு, பணித்திட்டம், எதிர்பார்ப்புக்கள் மற்றும் நோக்கங்களுக்கு முழு மனதுடன் இணக்கப்பாட்டுடன் செயலாற்றுதலும் முன்வைக்கப்படும் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் தயக்கமின்றி முகங்கொடுத்தலும்.

- **பொறுப்புக்கான கடப்பாடு**

  கடமை அலுவல்களின்போது தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்கள் தார்மீக ரீதியிலான பொறுப்புக்கூறலுக்கான கடப்பாட்டைக் கொண்டுள்ளமை.

- **வகைகூறல்**

  தேர்தல் ஆணைக்குழு மற்றும் அதன் அலுவலர்கள் தமது அனைத்து நடவடிக்கைகளும் சம்பந்தமாக பொறுப்புக்கூறல், அந்த நடவடிக்கைகள் தொடர்பாக பொறுப்புக்கூறுவதற்கான கடப்பாடு, தாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் பெறுபேறுகளை ஒளிவுமறைவின்றி வெளியிடுதல்.

- **பக்கச்சார்பின்மை**

  தேர்தல் ஆணைக்குழு மற்றும் அதன் அலுவலர்கள் ஆளொருவர் அல்லது குழுவொன்றுக்கு கடப்படாதிருத்தலும் அவ்வாறான அழுத்தங்களுக்கு உள்ளாகாமையும் பக்கம் சாராமையும்.

- **குழுவுணர்வும் குழுவொன்றாக செயற்படுதலும்**

  தேர்தல் ஆணைக்குழுவின் உயரதிகாரி உள்ளிட்ட அலுவலர்கள் அனைவரும் சரியான மனப்பாங்குடன் இணைந்து பணியாற்றுவதற்கான உணர்வுடையவர்களாகயிருத்தல்.

## கவனயீர்ப்புப் பகுதிகள்

- **விழிப்புணர்வூட்டலும் புரிந்துணர்வை மேம்படுத்தலும்**

  முழு தேர்தல் செயன்முறை குறித்து பொது மக்களை அறிவுறுத்துவது யுகத்தின் தேவையென தேர்தல் ஆணைக்குழு பெரிதும் நம்புகின்றது. குறிப்பாக சர்வஜன வாக்குரிமையை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்வதன் மூலம் நாட்டின் ஆட்சிக்கு தமது பொறுப்பை சாதுரியமான விதத்தில் நிறைவேற்றும் பொருட்டு வாக்காளர்களை அணிதிரட்டுவதை நோக்காகக்கொண்ட பரந்ததொரு கல்வியைப் பெற்றுக்கொடுப்பதன் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் ஊடாக மக்களின் இறைமை மிகவும் பொருள் பொதிந்ததாகும் என்பது ஆணைக்குழுவின் எதிர்பார்ப்பாகும்.

- **சட்ட மறுசீரமைப்புகள்**

  முழுதுமளாவிய தேர்தல் செயன்முறையில் ஏற்படுத்தப்பட வேண்டிய சட்ட மறுசீரமைப்புகள் குறித்து ஆணைக்குழு கடந்தாண்டு முழுவதும் தீவிர முயற்சி எடுத்ததென்பதைக் குறிப்பிட வேண்டும். அதன்படி, பாராளுமன்ற விசேட தெரி குழுவொன்றை நியமித்துக்கொள்வதற்காக ஆணைக்குழு சுறுசுறுப்பாக இயங்கி சட்ட மறுசீரமைப்புகளுக்கான பல்வேறு பிரேரணைகளை குழுவின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது. குறித்த பிரேரணைகளில் கணிசமானவற்றுக்கு பாராளுமன்ற விசேட தெரிகுழுவின் விதப்புரைகள் கிடைக்கின்றமை குறித்து ஆணைக்குழு பெரிதும் மகிழ்ச்சியடைவதைப் போன்றே, அவற்றை அமுல்படுத்துவதற்கு எடுக்கப்படக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் நிறைவேற்றுவதற்காக துரித நிகழ்ச்சித்திட்டமொன்று ஏலவே முடுக்கிவிடப்பட்டுள்ளது. அதனூடாக மக்களின் இறைமையை யதார்த்தமாக மலரச்செய்யும் பொருட்டு மக்களின் உரிமைகளைக் காத்து, சாதுரியமான முறையில் சர்வஜன வாக்குரிமையை அமுல்படுத்துவதன் ஊடாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் செயன்முறையைப் பலப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. 2021-2015 மூலோபாயத் திட்டத்தின் சட்ட மறுசீரமைப்புச் செயன்முறை முற்றிலும் இப்பிரேரணைகளை அமுல்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படுகிறது.

- **நிறுவனம் சார்ந்த அபிவிருத்தி**

  இந்த மூலோபாயத் திட்டத்தில் கவனயீர்ப்புப் பகுதிகளின் ஊடாக நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் புது வழியை மிகவும் பயனுறுதியடையச் செய்வதற்காக நிறுவனக் கட்டமைப்பைப் பலப்படுத்துவது இன்றியமையாத ஒரு விடயமாகும். அதற்கு அவசியமான பௌதிக வளங்களை உரிய முறையில் கையாண்டு நிறுவனம் வசமுள்ள மனிதவளத்தை உயர் இயல்திறன் கொண்டதாக நெறிப்படுத்தி நிறுவனத்தின் பலத்தை அதிகரிப்பதன் ஊடாக நிறுவனத்தின் வினைத்திறனையும் விளைத்திறனையும் உறுதிப்படுத்துவதற்கு ஆணைக்குழு விசேட கவனம் செலுத்துகின்றது. ஆணைக்குழுவின் தொலைநோக்கு, பணித்திட்டம், நோக்கங்கள் என்பவற்றை பேண்தகு அடிப்படையில் அடைந்துகொள்வதற்கு நிறுவனத்தின் பௌதி,

மனித, நிதி மற்றும் தொழில்நுட்ப வளங்களை சிறப்பாக முகாமைசெய்வது இன்றியமையாத ஒரு மூலோபாயமென்று ஆணைக்குழு நம்புகின்றது.

- **தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளல்**

  வாக்காளர்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு நிறுவனத்தின் அலுவல்களை மக்களின் எதிர்பார்ப்புகளை செயல்வலுப்படுத்துமாறு மிகவும் எளிதாகக் கையாண்டு, ஒழுங்கமைப்பதற்கு நவீன தொழில்நுட்பத்தின் கருவிகளைப் பயன்படுத்துவதை பெரிதும் விஸ்தரிப்பதற்கு ஆணைக்குழு ஏலவே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தேர்தல் செயன்முறை குறித்து மக்களை அறிவுறுத்துவதற்கும் விழிப்பூட்டுவதற்கும் தொழில்நுட்பத்தை உயர்ந்தபட்சம் ஈடுபடுத்துவதற்கான ஒரு விசேட வேலைத்திட்டம் பயன்படுத்தப்படுகிறது.

## மூலோபாயங்கள்

- நிறுவனம் சார்ந்த அபிவிருத்தி.
- பணியாட்குழுவின் ஆற்றல் விருத்தி.
- நிதிசார் ஊக்குவிப்பு.
- வலையமைப்பாக்கம்.

## குறிக்கோள்கள்

- பிரசைகள், வாக்காளர்கள் ஆகிய இரு திறத்தவர்களும் வாக்குரிமையும் சனநாயக உரிமைகளும் பற்றி போதியளவு விழிப்புணர்வைப் பெற்றுள்ளனர்.
- தகைமை பெற்ற அனைத்துப் பிரசைகளும் தேர்தல்களின்போது அச்சமின்றியும் சுதந்திரமாகவும் நம்பிக்கையுடனும் வாக்களிக்கின்றனர்.
- மக்களின் இறைமையைப் பாதுகாப்பதற்காக தேர்தல் ஆணைக்குழு போதியளவு சட்ட ரீதியாக பலப்படுத்தப்பட்டுள்ளது.
- தேர்தல்களில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுக்கும் சமமானதும் நியாயமானதுமான வாய்ப்புகள் உள்ளன.
- ஒரு சுயாதீன நிறுவனம் என்ற வகையில் தேர்தல் ஆணைக்குழு மீதான பிரசைகளின் நம்பிக்கை நீடுறுதியானதாக உள்ளது.
- பயன்கூர் அடிப்படையில் இயங்குவதற்கு தேர்தல் ஆணைக்குழு அனைத்து வளங்களினாலும் (மனித, பௌதிக, நிதி) முழுமையடைந்துள்ளது.
- தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்கள் தமது பணிகளை பயனுறுதிவாய்ந்த விதத்தில் நிறைவேற்றுவதற்கான நிபுணத்துவத்தைக் பெற்றுள்ளனர்.
- தேர்தல் ஆணைக்குழு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பயனுறுதிவாய்ந்த தேர்தல் முகாமைத்துவ நிறுவனமொன்றாக இயங்குகிறது.

## நோக்கங்கள்

- சிறப்பாக திட்டமிடப்பட்ட வாக்காளர்களை அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல்.
- வயதுவந்தோருக்கான வாக்குரிமையின் முக்கியத்துவம் குறித்து பாடசாலை மாணவர்களை அறிவுறுத்துதல்.
- தேர்தல் முறைகளும் தேர்தல் நடவடிக்கைமுறைகளும் பற்றிய பாடத்தை ஊக்குவிப்பதற்காக பல்கலைக்கழகங்களை தொடர்புபடுத்திக்கொள்ளல்.
- பிரதிநிதித்துவ ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக பெண்களையும் இளைஞர்களையும் அணிதிரட்டுதல்.
- வாக்குரிமையும் உரிய முறையில் வாக்கு அடையாளமிடலும் பற்றி வெகுஜனத் தொடர்புசாதனங்கள் ஊடாக வாக்காளர்களை அறிவுறுத்துதல்.
- சட்ட ஏற்பாடுகளுக்கமைய தேருநர் இடாப்பு மீளாய்வை மேற்கொள்ளலும் இற்றைப்படுத்தலும்.
- தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் செயற்பாடுகளை அவதானிப்பதற்காக பிரஜைகளுக்குத் தேவையான வசதிகளை அளித்தல்.
- தேர்தல்களை நடாத்துதல்.
- தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு வசதியளித்தல்.
- அரசியல் கட்சிகளை ஏற்றங்கீகரித்தல்.
- சட்ட மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்காக கொள்கைவகுப்பாளர்களுக்கு மதியுரை வழங்குதல்.
- புதிய சட்ட மறுசீரமைப்புகள் குறித்து வாக்காளர்களை அறிவுறுத்துதல்.
- போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவருக்கும் சம வாய்ப்பளித்தல்.
- தேர்தல் ஆணைக்குழு பற்றிய நம்பகத்தன்மையைப் பேணுதல்.
- தேர்தல் ஆணைக்குழுவின் மூலோபாயத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு போதுமான அளவு வளங்களை வழங்குதல்.
- தேர்தல் ஆணைக்குழுவின் இயல்திறனை விருத்திசெய்தல்.
- நடைமுறையிலுள்ள தேர்தல் முகாமைத்துவப் பொறிமுறையை இலக்கமிடல்.
- முன்னேறிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட்குழுவினர் அனைவருக்கும் பயிற்சியளித்தல்.
- பங்கீடுபாட்டாளர்கள் அனைவரையும் நவீன தொழில்நுட்பத்துடன் இயைபுபடுத்துதல்.

## 5. 1931 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை தேர்தல் ஆணைக்குழுவினால் அமுல்படுத்தப்படும் சட்டங்கள்

- **சனாதிபதித் தேர்தல்**
  - 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்
  - 1988 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் 1988 மே 24
  - 1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் 1988 அக்டோபர் 21
  - 2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் 2004 நவெம்பர் 18
  - 2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் 2011 மே 25

- **பாராளுமன்றத் தேர்தல்**
  - 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் -1981 சனவரி 22
  - 1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் -1988 மே 24
  - 1988 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் -1988 ஆகஸ்ட் 16
  - 1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் -1988 அக்டோபர் 21
  - 1988 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் -1988 திசெம்பர் 17
  - 2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் -2004 நவெம்பர் 18
  - 2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் -2009 அக்டோபர் 16
  - 2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் -2011 மே 25

- **மாகாண சபைத் தேர்தல்**
  - 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் - -1988 சனவரி 27
  - 1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் -1988 அக்டோபர் 21
  - 1988 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 1988 திசெம்பர் 17
  - 1990 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 1990 யூலை 06
  - 1993 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 1993 பெப்புருவரி 18
  - 2004 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 2004 பெப்புருவரி 03
  - 2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 2004 நவெம்பர் 18
  - 2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 2011 மே 25
  - 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 2017 செப்டெம்பர் 22

- **உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்**

- உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டம் (262 ஆம் அத்தியாயம்)
- 1990 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- 1990 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- 2002 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் - 2017 ஆகஸ்ட் 31

- **மக்கள் தீர்ப்பு**


  - 1981 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, மக்கள் தீர்ப்புச் சட்டம் - 1981 பெப்புருவரி 27
  - 1988 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, மக்கள் தீர்ப்பு (திருத்தச்) சட்டம் - 1988 மே 24

- **தேருநர்களைப் பதிவு செய்தல்**

  - 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டம் -1980 அக்டோபர் 24
  - 2017 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் 2017 யூலை 21
  - 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டம் -2021 அக்டோபர் 13

## 6. தேர்தல் ஆணைக்குழுவின் நிருவாகக் கட்டமைப்பு

தேர்தல் ஆணைக்குழு, தலைமை அலுவலகத்தையும் 26 மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களையும் உள்ளடக்கியதாகும். அதற்கமைய தமது நியதிச்சட்ட, நிருவாக மற்றும் அபிவிருத்தி அலுவல்களைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் சம்பந்தமாக பிரதான விடயங்களை உள்ளடக்குகின்றவாறு கிளைகள்/பிரிவுகள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு கிளையினாலும் பிரிவினாலும் ஆற்றப்பட வேண்டிய பணிகள் இந்த நிருவாகக் கட்டமைப்பில் அடங்கியுள்ளது.



## 7. தேர்தல் ஆணைக்குழுவின் கிளைகளும் அவற்றின் கடமைகளும்

### I. ஆணைக்குழு செயலகம்

- தேர்தல் ஆணைக்குழுவின் நிருவாகப் பணிகள்.
- நியதிச்சட்டப் பணிகளை ஒருங்கிணைப்புச் செய்தலும் நெறிப்படுத்தலும்.
- தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களின் தாபன அலுவல்கள்.
- தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட்குழு அங்கத்தவர்களின் ஆட்சேர்ப்பு, இடமாற்றம், விடுவிப்பு. தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திலும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களிலும் பணிபுரியும் நாடளாவிய சேவைகளைச் சேர்ந்த 65 அலுவலர்களின் நியமனம், பதவிஉயர்வு, இடமாற்றல், ஓய்வுறுத்தல் தொடர்பான அலுவல்கள்.
- ஆணைக்குழுக் கூட்டங்களும் அறிக்கைகளைத் தயாரித்தலும்.
- பதவிநிலை அலுவலர்களின் தாபன அலுவல்கள்.
- பாராளுமன்றம், சனாதிபதி செயலகம், பிரதம அமைச்சர் அலுவலகம் ஆகிய நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு அலுவல்கள்.
- சுயாதீன ஆணைக்குழுக்கள், அமைச்சுக்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு.
- பதவிநிலை அலுவலர்களின் வருடாந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகை தொடர்பான அலுவல்கள்.

### II. தேசிய தேர்தல்கள் கிளை

- சனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் மற்றும் மக்கள் தீர்ப்புக்களை நடாத்துவதற்கான அலுவல்களை நெறிப்படுத்துவதற்கும் அத்தகைய தேர்தல்களுக்கான அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திற்கும் உதவுதல்.
- 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்திற்கமைய வருடாந்த தேருநர் இடாப்பு மீளாய்வுக்கும் 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க பதிவுசெய்தல் (திருத்தச்) கட்டத்தின்படி குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களைத் தயாரிப்பதற்குரிய அனைத்து அலுவல்களையும் மேற்கொள்ளலும், பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுதலும், தேருநர் இடாப்பு தொடர்பான வேறு அலுவல்களை ஒழுங்குபடுத்தலும் அமுல்படுத்தலும்.
- பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பான பூர்வாங்க அலுவல்கள்.
- தேருநர் இடாப்பு மற்றும் தேர்தல் செயன்முறை தொடர்பாக பிரசைகளை அறிவுறுத்துதலும் வாக்காளர் தினத்துடன் தொடர்புடைய அலுவல்களை ஒருங்கிணைப்புச் செய்தலும்.

- வலிமையிழந்தோர் சமூகத்தை தேர்தல் செயற்பாடுகளில் முனைப்புடன் தொடர்புபடுத்திக்கொள்வதற்கான அலுவல்களும் விளிம்புநிலையிலுள்ள மக்கட் பிரிவினரின் பதிவு தொடர்பான அலுவல்களும்.

### II. I. தகவல் தொழில்நுட்பப் பிரிவு

- தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிறுவனத்தின் அலுவல்களை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கும் பங்கீடுபாட்டாளர்களுக்குத் தேவைப்படும் தகவல் தொழில்நுட்ப சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும், தகவல் தொழில்நுட்பக் கற்கை, திட்டமிடல், கருத்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அனுமதிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பக் கருத்திட்டங்களை நிறுவுதலும் பேணி வருதலும்.
- புதிய தொழில்நுட்பப் பாதுகாப்பு முறைகளைக் கையாண்டு தேர்தல் ஆணைக்குழுவுக்குரிய தகவல் தொழில்நுட்ப முறைமைகளையும் துணையுறுப்புக்களையும் பாதுகாத்துப் பேணி வருதல்.
- மையப்படுத்தப்பட்ட தேருநர் இடாப்பு தரவுத் தொகுதியை முன்னேற்றலும் பேணி வருதலும்.
- தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் நிருவாகமும் தகவல்களை இற்றைப்படுத்தலும், இ-சேவைகளை வழங்குதலும்.
- தரவுகள் மையத்தையும் அனர்த்த முகாமைத்துவ மையத்தையும் பேணி வருதல்.
- கணினி வலையமைப்பையும் VPN வலையமைப்பையும் பேணி வருதல்.
- தகவல் தொழில்நுட்ப அலுவல்களை உரியவாறு நிறைவேற்றிக்கொள்வதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்களைப் பயிற்றுவித்தல்.
- சமூக வலையமைப்புத் தகவல் முறைமைகளைப் பேணி வருதல்.
- உத்தியோகபூர்வ மின்னஞ்சல் (e-mail) வலையமைப்பைப் பேணி வருதல்.
- தகவல் தொழில்நுட்பப் பாவனைக்கான வழிகாட்டிநெறிக் கோவையில் அடங்கியுள்ள விடயங்கள் குறித்து அலுவலர்களுக்கு அறிவுறுத்தலும் சம்பந்தப்பட்ட தகவல்களை இற்றைப்படுத்தலும்.
- தேர்தல் பெறுபேறுகளைத் தயாரிக்கும் அலுவல்களுக்கு தொழில்நுட்பத்தை ஈடுபடுத்திக்கொள்ளல்.

## III. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கிளை

- உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல்களை நடாத்துவதுடன் தொடர்புடைய அலுவல்களும் சம்பந்தப்பட்ட அறிக்கைகளைத் தயாரித்தலும்.
- மாகாண சபைத் தேர்தல்களை நடாத்துவதுடன் தொடர்புடைய அலுவல்களும் சம்பந்தப்பட்ட அறிக்கைகளைத் தயாரித்தலும்.

- உள்ளூர் அதிகார சபை உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதுடன் தொடர்பான ஒருங்கிணைப்பு அலுவல்களும் மாகாண சபை உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதுடன் தொடர்பான அலுவல்களும்.
- உள்ளூர் அதிகார சபை வட்டாரங்களின் எல்லை நிருணயம் தொடர்பான அலுவல்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் சட்டத்தில் கொண்டுவரப்படும் திருத்தங்கள் தொடர்பான அலுவல்கள்.
- வெளிநாட்டு தேர்தல் முகாமைத்துவ நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு அலுவல்கள்.
- உள்நாட்டு தேர்தல் கண்காணிப்பு ஒழுங்கமைப்புக்களுடனான ஒருங்கிணைப்பு அலுவல்கள்.
- அரச சார்பற்ற ஒழுங்கமைப்புக்களுடனான ஒருங்கிணைப்பு அலுவல்கள்.
- இளைஞர்களை தேர்தல் செயன்முறையில் முனைப்புடன் பங்கேற்கச் செய்வதுடன் தொடர்பான அலுவல்கள்.

## III. I. விசேட கருத்திட்டப் பிரிவு

- அரச சார்பற்ற ஒழுங்கமைப்புக்களுடனான ஒருங்கிணைப்பு.
- மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கான மகளிர் பிரதிநிதித்துவத்தைப் பலப்படுத்துவதுடன் தொடர்பான விழிப்புணர்வூட்டல்.
- இளம் பங்கீடுபாட்டாளர் குழுக்களுடனான ஒருங்கிணைப்பும் விழிப்புணர்வூட்டலும்.
- வலிமையிழந்த பங்கீடுபாட்டாளர் குழுக்களுடனான ஒருங்கிணைப்பும் விழிப்புணர்வூட்டலும்.
- மக்கள் பங்கீடுபாட்டாளர் குழுக்களுடனான ஒருங்கிணைப்பும் விழிப்புணர்வூட்டலும்.
- சமூக ஊடக ஒருங்கிணைப்பும் அது தொடர்பான அலுவல்களும்.
- தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஏற்புடைய சருவதேச தின நினைவு வைபவங்களை ஒழுங்குசெய்தல்.

## IV. நிருவாகக் கிளை

- தேர்தல் ஆணைக்குழுவின் வள முகாமைத்துவம்.
- வருடாந்தம் நிருவாக அறிக்கையையும் செயலாற்றுகை அறிக்கையையும் தயாரித்தல்.
- அலுவலர்களின் வெளிநாட்டு உத்தியோகபூர்வ கருத்தரங்குகளும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் தொடர்பான அலுவல்கள்.

- ஆக்கபூர்வமான அணுகுமுறையொன்றின் ஊடாக திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு விருத்தித் திட்டங்களைத் தயாரித்தல்.
- பணியாட்குழுவின் உள்நாட்டுப் பயிற்சிகள் மற்றும் திறன் விருத்தி தொடர்பான அலுவல்கள்.
- மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் நலனோம்புகை அலுவல்களை மேற்பார்வை செய்தல்.
- பதவிநிலை அலுவலர்களின் கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்தலும், மாவட்டச் செயலாளர்களுடனான கலந்துரையாடல்களும் அவை தொடர்பான அலுவல்களும்.
- நிருமாண மற்றும் பராமரிப்பு அலுவல்கள்.
- மொழிக் கொள்கையை அமுலாக்குதல்.
- பால்நிலை சமத்துவத்தை அமுல்படுத்தலும் தேர்தல் செயன்முறையின்போது மகளிர் பிரதிநிதித்துவத்தைப் பலப்படுத்தலும்.
- அஞ்சல் தொடர்பான அலுவல்கள்.

## IV. I. தாபனப் பிரிவு

- தேர்தல் ஆணைக்குழுவில் பணி புரியும் பதவிநிலை சாராத அனைத்து அலுவலர்களதும் ஊழியர்களதும் பெயர்வழிக் கோப்புக்களை இற்றைப்படுத்தி பேணி வருதல்.
- பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவைகளுடன் தொடர்பான அலுவல்கள்
- அலுவலக ஊழியர்களின் நலனோம்புகை தொடர்பான அலுவல்கள்.
- பதவிநிலை சாராத பணியாட்குழுவினரின் ஆட்சேர்ப்பு, இடமாற்றல், ஓய்வுறுத்தல் தொடர்பான அலுவல்கள்.
- லீவு முகாமைத்துவம்.

## IV. II. போக்குவரத்துப் பிரிவு

- ஆணைக்குழுவின் வாகனங்களின் நிருவாகம், பராமரிப்பு மற்றும் கடமை அலுவல்களுக்கு போக்குவரத்து வசதியளித்தல்.

## IV. III. பெறுகை மற்றும் சொத்து முகாமைத்துவப் பிரிவு

- பெறுகை அலுவல்கள்.
- களஞ்சியசாலை முகாமைத்துவம்.
- வருடாந்த பொருளிருப்புக் கணக்கெடுப்பு.
- சொத்து முகாமைத்துவம்.
- தொடர்பாடல் கருவிகள் உள்ளிட்ட இயந்திரங்களதும் உபகரணங்களதும் பராமரிப்பு.

- தொலைபேசி, மின், நீர் சிட்டைகளை செலுத்தித் தீர்த்தலும் ஏனைய தொடர்புடைய அலுவல்களும்.

## V. நிதிக் கிளை

- தலைமை அலுவலகம் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் நிதிசார் அலுவல்களை மேற்பார்வை செய்தலும் கணக்குகள் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குதலும்.
- வருமானங்கள் சேகரிப்பு.
- அனைத்து கொடுப்பனவு அலுவல்கள்.
- உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளை வழிநடாத்தல்.
- வருடாந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- அரச அலுவலர்களின் முற்பணம் "B" கணக்கு தொடர்பான அலுவல்கள்.
- பொது நிருவாகமும் தேர்தல்களுக்கான நிதிஒதுக்கீடும் பணி முற்பணக் கட்டுப்பாடும்.
- தேர்தல் செலவுகளை மதிப்பீடுசெய்தல்/செலவு அறிக்கைகளை தயாரித்தல்.
- வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கை தயாரித்தல் தொடர்பான அலுவல்கள்.
- பொது வைப்புக் கணக்குகள் தொடர்பான அலுவல்கள்.
- நிலையான சொத்துக்களின் நிருவாகம் தொடர்பான அலுவல்கள்.
- சம்பளக் கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம் (Payroll) தொடர்பான அலுவல்கள்.
- சிகாஸ் (CIGAS) நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான அலுவல்கள்.
- ITMIS நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான அலுவல்கள்.
- கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல், வரவுசெலவுத் திட்ட குழுநிலை விவாதத்திற்குரிய அலுவல்கள் மற்றும் அரச கணக்குகள் குழு தொடர்பான அலுவல்கள்.
- கணக்கு மற்றும் நிதிக் கட்டுப்பாட்டு அலுவல்கள் தொடர்பாக பணியாட் குழுவினரைப் பயிற்றுவித்தல்.

## VI. சட்டம், விசாரணை மற்றும் திட்டமிடல் கிளை

- தேர்தல் ஆணைக்குழுவின் சட்ட அலுவல்கள் தொடர்பில் செயலாற்றுதல்.
- தேர்தல் சட்டவாக்கப் பணிகளின் ஒருங்கிணைப்பு.
- அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்தல் தொடர்பான அலுவல்கள்.
- அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பட்டியலை வருடாந்தம் தயாரித்தலும் அந்தக் கட்சிகளுக்கு ஏற்புடைய திருத்தங்களை இற்றைப்படுத்தலும்.
- அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் உத்தியோகத்தர் சபை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை வருடாந்தம் பெற்றுக்கொள்ளலும் வருடாந்த கணக்கறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளலும்.

- கட்சிச் செயலாளர் கூட்டங்களை நடாத்துதல் தொடர்பான அலுவல்களை ஒழுங்குசெய்தல்.
- அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு ஏற்புடைய கட்சிச் சின்னங்களையும் கட்சிகளுக்கு குறித்தொதுக்கப்பெறாத சின்னங்களையும் சட்ட ஏற்பாடுகளுக்கமைய வர்த்தமானியில் பிரசுரித்தல்.
- தேர்தல் பிணக்கு முகாமைத்துவம் தொடர்பான அலுவல்கள்.
- மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்தலும் முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கைகளும்.
- தேர்தல் ஆணைக்குழுவின் வருடாந்த செயல் திட்டத்தைத் தயாரித்தலும் அதன் முன்னேற்ற மீளாய்வு அலுவல்களும்.
- ஆணைக்குழுவின் பணிகளுக்கு ஏற்புடைய ஆராய்ச்சிகளை நடாத்துதலும் மேற்பார்வை செய்தலும் தகவல்களையும் தரவுகளையும் முகாமைசெய்தலும்.
- அறிவு முகாமைத்துவக் கூறு, சுவடிக்கூடம் மற்றும் வெளியீடுகளை வெளியிடுவதற்குரிய பணிகளும் வெளியீடுகளை வெளியிடும் விற்பனைக் கருமபீடத்தைப் பேணிச்செல்லலும்.
- தேர்தல் ஆணைக்குழுவின் வெளியீடுகளை/பருவ சஞ்சிகைகளை வெளியிடுதல் தொடர்பான அலுவல்கள்.
- ஊடக அலுவல்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.

## VII. உள்ளக கணக்காய்வுக் கிளை

- தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தினதும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களினதும் கவனயீர்ப்புப் பகுதிகளை இனங்காணலும், அத்தகைய கவனயீர்ப்புப் பகுதிகளுக்குரிய உள்ளக கணக்காய்வை மேற்கொள்ளலும் அறிக்கைகளை தயாரித்து சமர்ப்பித்தலும்.
- உள்ளக கணக்காய்வு மற்றும் வெளியக கணக்காய்வு அறிக்கைகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களை சீர்செய்தல் பற்றி கவனம் செலுத்தலும் தொடராய்வை மேற்கொள்ளலும்.
- தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தின் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் நிதிசார் அலுவல்கள் சம்பந்தமாகவும் நடப்பிலுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை மதிப்பீடுசெய்தலும் அதன் மூலம் எழக்கூடிய குறைபாடுகளையும் பலவீனங்களையும் தடுத்தலும்.
- உள்ளக பரிசோதனையின் முறையாந்தன்மையையும் அளவறிதல் சம்பந்தமான தொடராய்வையும் சுயாதீன மதிப்பீட்டையும் மேற்கொண்டு மிகவும் பயனுறு விதத்தில் பேணி அரச வளங்களை சிறப்பான முகாமைத்துவத்திற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- தேர்தல் காலப்பகுதியில் தேர்தல் சட்ட மீறல்கள் குறித்து விசாரணைசெய்தல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவினால் ஒப்படைக்கப்படும் விசேட கடமைகள்.

- தேர்தல் காலப்பகுதியில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு மையத்துடன் இணைந்து விசாரணைகளை மேற்கொள்ளல்.

## VIII. மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்கள்

- வருடாந்த தேருநர் இடாப்பு மீளாய்வுடன் தொடர்பான மாவட்ட மட்டத்திலான அலுவல்களை மேற்கொள்ளல்
- தேருநர் இடாப்பு பிரித்தெடுப்புக்களை விநியோகித்தல்.
- தேர்தலை நடாத்துவதுடன் தொடர்பான அலுவல்களை ஏற்பாடுசெய்தலும் வாக்கெடுப்பை நடாத்துவதுடன் தொடர்புடைய அலுவல்களும்.
- உள்ளூர் அதிகார சபை உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புதலுடன் தொடர்பான அலுவல்கள்.
- தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகளை/ தகவல்களை வழங்குதல்.
- ஜனநாயகம்/ சர்வஜன வாக்குரிமை/ மாணவர் மற்றும் இளைஞர் பாராளுமன்றம்/ மகளிர், இளைஞர், வலிமையிழந்த குழுக்கள் தொடர்பான விழிப்புணர்வூட்டல்களை ஒழுங்குசெய்தலும் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் வேறு நிறுவனங்களுக்கு அதற்கான வளப் பங்களிப்பை பெற்றுக்கொடுத்தலும் மூலோபாயத் திட்டத்திற்குரிய மாவட்ட செயற்பாடுகளை அமுல்படுத்தலும்.
- நீதிமன்ற உத்தரவின் பேரில் சட்டமுறை நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் ஆவணங்களை சமர்ப்பித்தல்.
- வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாக தலைமை அலுவலகத்திற்கு தகவல்களை வழங்குதல்.
- மாவட்டத்தில் தகவலுக்கான உரிமைச்சட்டத்தின் கீழ் தகவல் அலுவலராக செயற்படல்.

## 8. தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட்குழு

தேர்தல் ஆணைக்குழுவின் முழு பணியாட்குழு, கீழ்க்காணும் பதவிகளை வகிக்கும் அலுவலர்களைக் கொண்டமைந்ததாகும்: தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட ஐந்து(5) உறுப்பினர்கள் தவிர, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், செயலாளர் உள்ளிட்ட தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட்குழு, இலங்கை நிருவாக சேவை (இ.நி.சே.) அலுவலர்கள், இலங்கை கணக்காளர் சேவை (இ.க.சே.) அலுவலர்கள், இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை (இ.த.தொ.தொ.சே.) அலுவலர்கள், இலங்கை திட்டமிடல் சேவை (இ.தி.சே.) அலுவலர்கள், பணிப்பாளர் (சட்டம்) மற்றும் சட்ட அலுவலர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், அரச முகாமைத்துவ சேவையின் (அ.மு.சே.) அதியுயர் தர அலுவலர்கள் ஆகிய பதவிநிலை அலுவலர்களும் பதவிநிலை அல்லாத பணியாட்குழுவில் அரச முகாமைத்துவ சேவை அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர் சேவை அலுவலர்கள், தகவல் தொழில்நுட்ப உதவியாளர்கள், ஆவண உதவியாளர்கள், அலுவலகப் பணி உதவியாளர்கள் மற்றும் சாரதிகள் உள்ளடங்குவர். அதற்கமைய 2022.09.30 அன்றுள்ளவாறான தேர்தல் ஆணணக்குழுவின் மொத்த பணியாட்குழுவின் அமைப்பு பின்வருமாறு:-

| பதவி | அனுமதித்த எண்ணிக்கை | 2022.09.30 அன்றுள்ளவாறு பணிபுரிவோர் எண்ணிக்கை |
|---|---|---|
| பதவிநிலை அலுவலர் (இ.நி.சே., இ.க.சே., இ.த.தொ.தொ.சே., இ.தி.சே., பணிப்பாளர் (சட்டம்), சட்ட அலுவலர், இணைப்புச் செயலாளர், மொழிபெயர்ப்பாளர், அ.மு.சே. அதியுயர் தர அலுவலர் உள்ளிட்ட) | 77 | 59 |
| முகாமைத்துவ சேவை அலுவலர் | 390 | 361 |
| அபிவிருத்தி அலுவலர் | 27 | 27 |
| இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | 14 | 11 |
| ஆவண உதவியாளர் | 51 | 46 |
| வரவேற்பாளர் | 01 | 01 |
| அலுவலகப் பணி உதவியாளர் சேவை | 126 | 112 |
| அலுவலகப் பணி உதவியாளர் சேவை - அ.நி.சு. 25/2014 | 46 | 46 |
| சாரதி | 52 | 46 |
| வாகன சுத்திகரிப்பாளர் | 01 | 01 |
| மின் தொழில்நுட்பவலர் | 01 | - |
| நீர்க்குழாய் தொழில்நுட்பவலர் | 01 | - |
| **மொத்தம்** | **787** | **710** |

## பகுதி II

# முன்னேற்றம் 2022

# 1. 2022 - 2025 மூலோபாயத் திட்டத்தை தயாரித்தல்

இலங்கையின் இரண்டாவது தேர்தல் ஆணைக்குழுவும் 2022-2025 காலச் சட்டகத்திற்கான மூலோபாயத் திட்டமொன்றைத் தயாரிப்பதன் முக்கியத்துவத்தையும் தேவையையும் உணர்ந்து அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பித்தது. அதன் அடிப்படையில் முதலாவது மூலோபாயத் திட்டம் (2017-2021) தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இடையீட்டு மதிப்பீட்டு அறிக்கையின் தகவல்களும் அனுபவங்களும் இரண்டாவது மூலோபாயத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. முதலாவது மூலோபாயத் திட்டத்தைத் தயாரிக்கும்போது நிபுணத்துவ உதவி வழங்கிய இரு உள்நாட்டு மதியுரைஞர்களின் உதவியை இத்திட்டத்திற்கும் பெற்றுக்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழு முடிவு செய்தது. தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளருடனும் உறுப்பினர்களுடனும் குறித்த இரு மதியுரைஞர்களும் மேற்கொண்ட ஆரம்பக் கலந்துரையாடலின்போது உடன்பட்டவாறு மதியுரைக் குழுவொன்றையும் திட்டமிடல் குழுவொன்றையும் நிறுவி, உத்தியோகத்தர் மட்டத்தில் சில ஆரம்பக் கலந்துரையாடல்களை நடாத்தி, இன்றைய நிலைமை மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட்டது. தேர்தல் ஆணைக்குழுவுடனும் அதன் சிரேட்ட அதிகாரிகளுடனும் இடம்பெற்ற கலந்துரையாடலிகளின்போது தேர்தல் ஆணைக்குழுவின் தொலைநோக்கு, பணித்திட்டக்கூற்று, கவனயீர்ப்புப் பகுதிகள், மூலோபாயங்கள், பெறுமானங்கள், குறிக்கோள்கள் வேளைக்கேற்பவும் காலப் பொருத்தமுடையதாகவும் ஏற்ற திருத்தங்களை மேற்கொள்ள முன்மொழியப்பட்டது. இது தவிர அனைத்து மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர்களுடனும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுடனும் 25 மாவட்டங்களையும் உள்ளடக்குகின்றவாறு பங்கீடுபாட்டாளர் குழுக்களான அரசியல் கட்சிகள், கண்காணிப்பு ஒழுங்கமைப்புக்கள், தேர்தல் ஆணைக்குழுவின் ஓய்வுபெற்ற அலுவலர்கள், அரச அலுவலர்கள், மாவட்டச் செயலாளர்கள், மகளிர், இளைஞர் மற்றும் வலிமையிழந்தோர் குழுக்கள் உள்ளிட்ட அனைத்து பங்கீடுபாட்டாளர் குழுக்களுக்கும் கூட்டங்களையும் கலந்துரையாடல்களையும் நடாத்தி, அவர்களின் கருத்துக்களும் யோசனைகளும் பெறப்பட்டது. சில திறத்தவர்களிடமிருந்து எழுத்திலான தகவல்கள் பெறப்பட்டன. அதன் அடிப்படையில் அக்குழுக்களிடமிருந்து இரண்டாவது திட்டத்திற்கான செயற்பாடுகள் அடையாளம் காணப்பட்டன. முன்வைக்கப்பட்ட அத்தகைய யோசனைகள் யாவற்றையும் இணைத்து முன்னுரிமை அடிப்படையில் வரிசைப்படுத்தி மீண்டும் அது பற்றி கலந்துரையாடி முன்னைய திட்டத்தில் குறிப்பிடப்பட்ட மேலும் அமுல்படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகளும் புதிய செயற்பாடுகளும் அடையாளம் காணப்பட்டன. இச் செயலமர்வுகளைத் தொடர்ந்து கவனயீர்ப்புப் பகுதிகள், மூலோபாயங்கள், குறிக்ருோள்கள், நோக்கங்களின் அடிப்படையில் இவ்வாறு அடையாளம் காணப்பட்ட செயற்பாடுகள் தொகுக்கப்பட்டது. அவற்றை அமுல்படுத்துவது சம்பந்தமாக பிரிவுகளாக அலுவலர்களுக்கு குறிப்பான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டு காலச்சட்டகங்கள் தயார் செய்யப்பட்டன. தேர்தல் ஆணைக்குழுவுக்கு இந்த பங்கேற்பு மூலோபாயத் திட்டத்தைத் தயாரிக்கும்போது அடிப்படை பெறுகை எண்ணக்கருக்கள் உகந்த விதத்தில் பயன்படுத்தப்பட்டன.

தேர்தல் ஆணைக்குழுவின் 2022-2025 காலத்திற்காக தயாரிக்கப்பட்ட பங்கேற்பு மூலோபாயத் திட்டம், 2022.09.15 ஆம் திகதி உலக ஜனநாயக தினக் கொண்டாட்டங்களுக்கு இணையாக வைபவ ரீதியாக வெளியிடப்பட்டது. அதன்படி, இவ்வாண்டின் நான்காம் காலாண்டு முதல் அதில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளின் அமுலாக்கம் ஆரம்பமானது.

## 2. வருடாந்த செயல் திட்டம்

தேர்தல் ஆணைக்குழுவின் ஒவ்வொரு பிரிவினாலும் அமுல்படுத்தப்படும் செயற்பாடுகள் அடங்கிய வருடாந்த செயல் திட்டத்தைத் தயாரித்தல், வருடாந்த செயல் திட்டம் சம்பந்தமாக காலாண்டு அடிப்படையில் முன்னேற்ற மீளாய்வை மேற்கொண்டு முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல், அவ்வறிக்கைகளை நிதி அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தல். இந்த ஆண்டிலும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டு செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றத்தை பரிசீலித்தல் மற்றும் உரிய இலக்குகளை அடைந்துகொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## 3. தேர்தல் ஆணைக்குழுக் கூட்டங்கள்

தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள பணிகளும் கடமைகளும் தொடர்பில் சமர்ப்பிக்கப்படும் ஆணைக்குழுப் பத்திரங்கள் குறித்து கலந்துரையாடுவதற்கும் முடிவெடுப்பதற்கும் ஆணைக்குழுக் கூட்டங்கள் தேவைக்கேற்ப நடாத்தப்படுகின்றன. இதற்கமைய 2022 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் 08 கூட்டங்களும், இரண்டாவது காலாண்டில் 07 கூட்டங்களும், மூன்றாவது காலாண்டில் 06 கூட்டங்களும் என்ற அடிப்படையில் 21 கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இக்காலப்பகுதியில் கொவிட் 19 பெருந்தொற்று நிலைமையின் கீழ் செயலாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டதாலும் அலுவலகங்கள் மூடப்பட்டிருந்ததன் காரணமாகவும் நடாத்தப்படும் கூட்டங்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டது. எனினும், அத்தியாவசியமான வேளைகளில் கூட்டங்கள் நடாத்தப்பட்டமையால், அலுவலக நாட்கள் மட்டுப்படுத்தப்பட்டமை கடமை அலுவல்களுக்கு தடங்கலாக அமையவில்லை.

**தேர்தல் சட்ட மறுசீரமைப்புக்கள் குறித்த விசேட கலந்துரையாடல்கள்**

தேர்தல் மற்றும் வாக்கெடுப்புக் கட்டமைப்பிலும் சட்டதிட்டங்களிலும் மறுசீரமைப்புகளை அடையாளம் காண்பதற்கும் அது சம்பந்தமாக தேவைப்படும் திருத்தங்களை முன்வைப்பதற்கும் பாராளுமன்ற விசேட செயற்குழுவினால் 2022.02.10, 2022.02.22, 2022.02.24, 2022.03.08, 2022.03.10, 2022.04.07, 2022.06.08, 2022.06.15 ஆகிய தினங்களில் நடாத்தப்பட்ட கூட்டங்களில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரும் உறுப்பினர்கள் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

| | | |
|---|---|---|
| கௌரவ சபாநாயகருடன் | நாட்டில் நிலவும் நெருக்கடியான நிலைவரம் சம்பந்தமாக. | 2022.04.20 |
| மல்வத்து பார்ஷவயே மகாநாயக்க தேருடன் | தேர்தல் சட்ட மறுசீரமைப்பு சம்பந்தமாக. | 2022.07.28 |
| முஸ்லிம் சமய உலமா சபையுடன் | தேர்தல் சட்ட மறுசீரமைப்பு சம்பந்தமாக. | 2022.09.13 |
| கௌரவ பிரதம அமைச்சருடன் | தேர்தல் சட்ட மறுசீரமைப்புகளும் உள்ளூர் அதிகாரசபைகளுக்கான தேர்தல்களை நடாத்துதலும் சம்பந்தமாக. | 2022.09.29 |
| ஓமல்பே சோபித்த நாயக்க தேரர் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழு | நாட்டின் தற்போதைய நிலைவரம் சம்பந்தமாக. | 2022.06.09 |
| 'யுக்திய உதெசா காந்தாவோ' (நீதிக்கான மகளிர்) அமைப்பு | நாட்டின் தற்போதைய நிலைவரமும் தேர்தல் சட்ட மறுசீரமைப்புக்களும் சம்பந்தமாக. | 2022.06.10 |
| பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அலஹப்பெரும அவர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழு | நாட்டின் தற்போதைய நிலைவரமும் தேர்தல் சட்ட மறுசீரமைப்புக்களும் சம்பந்தமாக. | 2022.06.13 |

| | | |
|---|---|---|
| பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலீ சம்பிக்க ரணவக்க அவர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழு | நாட்டின் தற்போதைய நிலைவரமும் தேர்தல் சட்ட மறுசீரமைப்புக்களும் சம்பந்தமாக. | 2022.06.13 |
| வலிமையிழந்தோர் சங்கங்களின் பிரதிநிதிகள் குழு | தேர்தல்களின்போது வாக்களிப்பதை வசதிப்படுத்துதல் சம்பந்தமாக. | 2022.08.08 |
| இளைஞர் பாராளுமன்றத்தின் பிரதம அமைச்சரும் பிரதிநிதிகள் குழுவும் | இளைஞர் பாராளுமன்றத்தினால் நடாத்துவதற்கு அவசியமான நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமாக. | 2022.08.13 |

இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் 2022.01.24 ஆம் திகதியன்று தேர்தல் ஆணைக்குழுவைச் சந்தித்தபோது



இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் 2022.03.08 ஆம் திகதியன்று தேர்தல் ஆணைக்குழுவைச் சந்தித்தபோது.



தேர்தல் ஆணைக்குழு, UN Women பிரதிநிதிகளுடன் நடாத்திய விசேட கலந்துரையாடல்



தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும் மதத் தலைவர்களுக்கும் இடையில் 2022.06.09 ஆம் திகதியன்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடல்



## 4. தேர்தல் சட்ட மறுசீரமைப்புக்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட தெரி குழுவினால் விதந்துரைக்கப்பட்ட பிரேரணைகள்

இன்றைய தேர்தல் சட்டங்களை காலப்பொருத்தமுடையவாறு திருத்துவதற்கான தேவை நீண்டகாலமாக திறத்தவர்களினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது சம்பந்தமாக கவனம் செலுத்திய தேர்தல் ஆணைக்குழு, குறித்த சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளும் தேவை குறித்து கௌரவ பிரதம அமைச்சருடன் நடாத்திய பேச்சுவார்த்தையின்போது அறிவுறுத்தப்பட்டது. அதற்குப் பதிலளித்த கௌரவ பிரதம அமைச்சர், தேர்தல் சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதற்கான பாராளுமன்ற தெரி குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளார். இக்குழுவின் அமைப்பு பின்வருமாறு:

- கௌரவ தினேஸ் குணவர்தன (குழுவின் தவிசாளர்)
- கௌரவ நிமல் சிறிபால த சில்வா
- கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல்.பீரிஸ்
- கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னஆரச்சி
- கௌரவ டக்ளஸ் தேவானந்தா
- கௌரவ விமல் வீரவங்ச
- கௌரவ பெசில் ரோஹண ராஜபக்ஷ (2022.06.09 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து கேட்டுவிலகினார்)
- கௌரவ எம்.யூ.எம்.அலி சப்ரி
- கௌரவ ஜீவன் தொண்டமான்
- கௌரவ ரஊப் ஹக்கீம்
- கௌரவ அநுர திசாநாயக்க
- கௌரவ கபீர் ஹஷீம்
- கௌரவ ஆர்.எம்.ரஞ்சித் மத்தும பண்டார
- கௌரவ மனோ கணேசன்
- கௌரவ எம்.ஏ.சுமந்திரன்
- கௌரவ மதுர விதானகே
- கௌரவ சாகர காரியவசம்

இத்தெரிகுழுவினால் விதந்துரைக்கப்பட்ட பிரேரணைகளின் பொழிப்பொன்று கீழ் தரப்பட்டுள்ளது:-

### 1. தேர்தல் முறைகள்

#### (அ) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள்

2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்திற்கமைய 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளூர் அதிகாரசபைத் தேர்தலின் மூலம் இரண்டு மடங்கால் அதிகரித்த விகிதாசார பிரதிநிதித்துவத்தின் கீழ் தெரிவுசெய்யப்படும் உள்ளூர் அதிகாரசபை பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டுமென குழுவுக்கு சமரப்பிக்கப்பட்ட பெரும்பாலான கருத்துக்கள் தெரிவித்தன. குழுவின் கவனத்தை ஈர்த்த மற்றைய விடயம் யாதெனில், நிலையான மற்றும் வினைத்திறனான உள்ளூர் அதிகார சபையொன்றின் சட்டத் தேவைப்பாடாகும்.

சிறுபான்மைக் கட்சிகளும் அக்கறையுள்ள சமூகங்களும் இன்றைய தேர்தல் முறைமையில் மேற்கொள்ளப்படும் உத்தேச மாற்றங்கள் சம்பந்தமாக தமது கவனத்தைச் செலுத்தியதுடன், உத்தேச முறைமையில் சமூகங்களுக்கும் பிரதிநிதித்துவம் செய்யப்படாத திறத்தவர்களுக்கும் நியாயாமான ஒரு பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துமாறு குழுவைக் கோரினர்.

குழுவினால் தேர்தல் ஆணைக்குழுவினதும் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் முறைமை பற்றிய மீளாய்வுக் குழுவினதும் அறிக்கைகள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட சிபார்சுகளுடன் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து இது சம்பந்தமாக கிடைத்த முறைப்பாடுகளும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

உள்ளூர் அதிகாரசபைகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்ற விடயம் சம்பந்தமாக குழுவின் அனைத்து உறுப்பினர்களும் ஒருப்பாட்டை வெளியிடுகின்றனர்.

மேலும் கலந்துரையாடிய பின், அங்கத்தவர்களில் பெரும்பாலானவர்களின் பின்வரும் அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தனர்:-

- 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தலின்போது முதல் தடவையாக அமுல்படுத்தப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட இன்றைய உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் முறை (தொகுதிவாரி மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவ முறைகளைக் கொண்ட) தேவையான திருத்தங்களுடன் மேலும் தொடர்வது உகந்தது.
- தனியுறுப்பினர் தொகுதி முறை (60%) மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவத்திற்காக (40$) தற்போதுள்ள விகிதாசாரத்தை தொடர்ந்தும் பயன்படுத்தல்.
- விகிதாசார பிரதிநிதித்துவ உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு தொங்கு ஆசனங்கள் (Overhang seats) நீக்கப்பட வேண்டும்.
- ஒவ்வோர் உள்ளூர் அதிகாரசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை உறுதியாக நிர்ணயிக்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் சதவீதத்தை (cut off) நிர்ணயிக்க வேண்டிய தேவையில்லை.
- ஸ்திரத்தன்மை பற்றிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வெற்றியீட்டிய கட்சிக்கு மிகை (போனஸ்) ஆசனங்களை வழங்குவதற்கு கொள்கை அளவில் குழு உடன்பட்டது. மிகை ஆசனங்கள் பின்வருமாறு பகிரப்படும்:
  - 19 அல்லது அதற்குக் குறைவான உறுப்பினர்களைக் கொண்ட உள்ளூர் அதிகாரசபையொன்றில் வெற்றியீட்டிய கட்சிக்கு ஒரு மிகை ஆசனத்தை ஒதுக்குதல். 20 முதல் 39 வரையான எண்ணிக்கைகொண்ட உள்ளூர் அதிகாரசபையொன்றுக்கு இரண்டு மிகை ஆசனங்களும், 40 அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான உறுப்பினர்களைக் கொண்ட உள்ளூர் அதிகாரசபையொன்றுக்கு 03 மிகை ஆசனங்களும் ஒதுக்கப்படும்.
  - அதனைத்தொடர்ந்து கணக்கிடப்பட்ட உறுப்பினர் ஒதுக்கீடு விகிதாசார பிரதிநிதித்துவ கணக்கெடுப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதால், மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை மாற்றமின்றி உள்ளது.

**(ஆ) மாகாண சபைத் தேர்தல்**

- குழு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பு நிலவிய முறையின் (விகிதாசார பிரதிநிதித்துவ முறை) கீழ் நடாத்துவதற்கு உடன்படுமாயின், 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் நீக்கப்பட்ட

அட்டவணைகளும் படிவங்களும் அடங்கலான முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகள் ஏற்ற சட்டங்களை ஆக்குவதன் மூலம் மீள அமுல்படுத்தப்பட வேண்டும் என்பது சட்டமா அதிபரின் அபிப்பிராயமாகும்.

- 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு காணப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்தலை நடாத்துவதற்கு குழு உடன்பட்டது. அடிப்படையில் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தில் குறிப்பிடப்பட்ட விகிதாசாரத்தின் அடிப்படையில் தேவையான எல்லை நிருணயத்துடன்கூடிய கலப்பு முறையொன்றுக்கான சட்டமூலம் ஆக்கப்படும் வரை விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் மாகாண சபைத் தேர்தல் நடாத்தப்படுவதை இயலச்செய்யும் விதத்தில் ஏற்ற சட்டங்களை ஆக்குவதற்கு குழு விதந்துரைத்தது.
- மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதற்காக உத்தேச சட்டங்களை அமைச்சரவை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென குழு மேலும் விதந்துரைக்கின்றது.

**(இ) பாராளுமன்றத் தேர்தல்**

- மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 ஆக இருக்க வேண்டுமென்பது குழுவின் அபிப்பிராயமாக இருந்தது.
- எதிர்காலத்தில் (70%) வட்டாரங்கள்: 30% விகிதாசார பிரதிநிதித்துவம்: 65% வட்டாரங்கள்: 35% விகிதாசார பிரதிநிதித்துவம் அல்லது 60% வட்டாரங்கள்: 40% விகிதாசார பிரதிநிதித்துவம் கொண்ட) கலப்பு முறையொன்று பாராளுமன்றத் தேர்தலுக்காக அறிமுகப்படுத்த குழு பிரேரிக்கின்றது.
- இந்த யோசனையை அமுல்படுத்துவதற்கு ஏற்புடைய யாப்புத் திருத்தங்களுடன் ஏற்புடைய சட்டங்களைக் கொண்டு வர வேண்டும்.
- தேசியப் பட்டியலைப் பேண வேண்டும்.
  பாராளுமன்றத் தேர்தல் முறையில் கொண்டுவரப்படும் ஏதேனுமொரு மாற்றத்தின் மூலம் சிறுபான்மைச் சமூகங்களின் பிரதிநிதித்துவத்திற்கு பெரிதும் பாதிப்பொன்று ஏற்படலாமென்ற அபிப்பிராயத்தை குழுவின் சில உறுப்பினர்கள் கொண்டிருந்தனர்.

**(இ) எல்லை நிர்ணயம்**

- மாவட்டங்களுக்காக தனியுறுப்பினர் தொகுதிகளில் (Constituency Single-member) எல்லை நிர்ணயத்தை மேற்கொள்ள வேண்டும்.
- விசேட தொகுதிகளுக்கு/ மாவட்டங்களுக்கு பல்லின பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு பல் உறுப்பினர் தொகுதி (Constituency Multimember) முறையை அறிமுகப்படுத்த வேண்டும்.

**2. பெண்களின் பிரதிநிதித்துவம்**

தற்கால இலங்கை அரசியலில் காணக்கூடிய மிகவும் பாரதூரமான ஒரு பிரச்சினை யாதெனில், அரசியலில் ஈடுபடக்கூடிய பெண்களின் எண்ணிக்கை போதியதாக இருக்காமையாகும். இலங்கையின் சனத்தொகையில் நூற்றுக்கு ஐம்பத்திரண்டு சதவீதம் பெண்களைக் கொண்டதாக இருந்தபோதும், அரசியல் நிறுவனங்களில் அவர்களின் பிரதிநிதித்துவம் மிகவும் தாழ்ந்த மட்டத்திலுள்ளது. 2019 ஆம் ஆண்டில் இருந்த பாராளுமன்ற அரசியலில் 213 உறுப்பினர்கள் தெரிந்தனுப்பப்படும்போது, அத்தேர்தலில் 12 பெண் உறுப்பினர்கள் மாத்திரமே தெரிந்தனுப்பப்பட்டனர்.

பெண்களுக்கு 25% ஆசன பங்கீட்டுக்கான (கோட்டா) ஏற்பாடுகளைச் செய்யும் 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 7 ஆம் பிரிவிற்கமைய உள்ளூர் அதிகாரத்திற்காக பெண்களின் உட்பிரவேசம் தொடர்பில்

போதிய வாய்ப்புகள் உருவாக்கப்படவில்லை. பெண் அரசியல் பங்கேற்புக்கான சட்ட சட்டகத்தினுள் அவர்களை அரசியல் கட்சிகளுக்கு உள்வாங்குவதற்குப் போதிய வாய்ப்புகள் உருவாக்கப்படாததுடன், ஒழுங்குறுத்தப்படாத தேர்தல் பரப்பீட்டுக்கான செலவுகளும் விருப்பு முறை பெண் வேட்பாளர்கள் மீது மேலும் தடங்கல்களை ஏற்படுத்துகின்றது.

ஆகையால், உள்ளூர் அதிகாரசபைகளுக்கு தற்போது காணப்படும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பெண்களுக்கு ஆகக்குறைந்தது 25% பங்கீட்டை (கோட்டா) ஒதுக்குதல் சம்பந்தமான கட்டாய ஏற்பாடுகளை அவ்வாறே தக்கவைத்துக்கொள்வதற்கு செயற்குழுவினால் விதந்துரைக்கப்படுகிறது. தேர்தல் செயன்முறையில் தமக்கு தேர்தல் செயற்பாட்டில் அரசியல் ஸ்திரப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்கு பெண்களுக்கு வாய்ப்பளித்து, வேட்புமனுப் பட்டியலில் பெண்களுக்கு தொகுதி மட்டத்தில் 20% பங்கீட்டை (கோட்டா) ஒதுக்கீடு செய்வதை கட்டாயப்படுத்துவதற்கு அவசியமான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு செயற்குழுவினால் மேலும் விதந்துரைக்கப்படுவதுடன், அனைத்து தேர்தல்களின்போதும் இந்த ஏற்பாடு கட்டாயமாக்கப்பட வேண்டும்.

மேலதிக பட்டியலில் (விகிதாசார பிரதிநிதித்துவப் பட்டியல்) பெண்களுக்கு 50% கோட்டா முறை மாற்றமின்றி காணப்பட வேண்டும்.

கட்சிச் செயலாளரொருவரினால் பாராளுமன்றத் தேர்தலின்போது தேசியப் பட்டியலுக்கு பெயர்குறிப்பிடப்படும் ஒவ்வொரு மூன்றாவது வேட்பாளருக்கும் பெண் ஒருவர் இருப்பதைக் கட்டாயமாக்குவதற்கு அவசியமான சட்டங்களை ஆக்க வேண்டுமென்றும் செயற்குழுவினால் விதந்துரைக்கப்படுகின்றது.

### 3. இளைஞர்களின் பிரதிநிதித்துவம்

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் மற்றும் மாகாண சபைத் தேர்தல் வேட்புமனுப் பத்திரங்களில் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்திற்காக 25% பங்கீட்டை (கோட்டா) ஒதுக்கீடு செய்வதைக் கட்டாயமாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டுமென செயற்குழுவினால் விதந்துரைக்கப்படுகின்றது. 35 வயதுக்குக் குறைந்த ஆண்கள், பெண்கள் ஆகிய இரு சாராரும் இளைஞர் பிரதிநிதித்துவத்தில் உட்படுத்தப்பட வேண்டும்.

### 4. அரசியல் கட்சிகளை ஏற்றங்கீகரித்தல்

அரசியல் கட்சிகளை ஏற்றங்கீகரித்தல் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை செயற்குழுவினால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதை அடுத்து, வாக்காளர்களின் ஏற்பின் அடிப்படையில் அரசியல் கட்சிகள் ஏற்றங்கீகரிக்கப்பட வேண்டுமென விதந்துரைக்கப்படுகிறது.

அதன் அடிப்படையில், பின்வரும் முறை பின்பற்றப்படல் வேண்டும்:-

I. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் அமைப்பெதுவும் 'பதிவு செய்யப்பட்ட ஓர் அரசியல் கட்சியாக' கணிக்கப்படுவதுடன், பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சியொன்றுக்கு கட்சிச் சின்னமொன்று மாத்திரம் வழங்கப்படும்.

II. தேர்தல்களில் போட்டியிடுவதன் மூலமும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட பின்னரும் அதன் நடவடிக்கைகள் சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழு திருப்தியடைந்த பின்னர் அத்தகைய கட்சி 'அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியாக' பதிவு செய்யப்படும்.

III. நடைமுறையிலுள்ள சட்டங்களின் கீழ் கூட்டணிகளை ஏற்றங்கீகரிப்பதற்கு செயற்குழுவினதும் தேர்தல் ஆணைக்குழுவினதும் இணக்கம் வெளியிடப்பட்டது.

IV. மேற்கூறிய பிரேரணைகளை அமுல்படுத்துவதற்கு அவசியமான சட்டங்கள் ஆக்கப்பட வேண்டும்.

## 5. ஊடகங்கள்

### (அ) ஊடக வழிகாட்டிநெறிகள்*

அரசியலமைப்பின் 104 ஆ(5)(அ) உறுப்புரைக்கு (திருத்தப்பட்டவாறு) அமைய அரசாங்கத்திற்குச் சொந்தமான ஊடகங்களுக்கும் தனியார் ஊடகங்களுக்கும் ஒருங்கே வழிகாட்டிநெறிகளை வெளியிடுவதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு தத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டிநெறிகளுக்கு அமைய செயலாற்றாத அரசுடைமையான ஊடகங்கள் அவ்வாறு செயலாற்றாமையின் அடிப்படையில் வகைகூறுவதற்கு உள்ளாக்கப்படலாம் என்றபோதும், வழிகாட்டிநெறிகளுக்கு அமைவாக செயலாற்றுவதாக உறுதிசெய்வதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு தனியார் ஊடகங்களுக்கு ஒரு பொறுப்பு மாத்திரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆகையால், தனியார் ஊடகங்களினால் இந்த வழிகாட்டிகள் மீறப்படும்போது தேர்தல் ஆணைக்குழுவுக்கு எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்க முடியாது. மேலும் மேலும், அரசியலமைப்பின் 104ஆ (5)(இ)(iii) உறுப்புரையின் பிரகாரம் இந்த வழிகாட்டிநெறிகள் பாராளுமன்றத்தின் அனுமதிக்காக பெற்றுக்கொள்வதற்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

பாராளுமன்ற அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த வழிகாட்டிநெறிகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் குறித்த வழிகாட்டிநெறிகள் காலத்திற்குக் காலம் மேற்பார்வை செய்வதற்காக பயன்கூர் பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டுமென்றும் செயற்குழு மேலும் விதந்துரைக்கின்றது.

தனியார் ஊடகங்கள், ஊடகங்களுக்கு அமைவாக செயலாற்றுவதை உறுதிப்படுத்துமுகமாக தேர்தல் ஆணைக்குழுவைப் பலப்படுத்துவதற்கு அரசியலமைப்புத் திருத்தங்களுடன் தேவையான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென மேலும் விதந்துரைக்கின்றது.

*(*தேர்தல் ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புகளையும் முடிவுகளையும் அடிப்படையாகக்கொண்டு)*

### (ஆ) இலத்திரனியல் ஊடகங்கள் மூலமான அரசியல் பரப்புரைகள்

இலத்திரனியல் ஊடகங்களினால் அறவிடப்படும் அதிகப்படியான கட்டணங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் அரசியல் பரப்புரைகளை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு வேட்பாளருக்கும் சமவாய்ப்பை அளிப்பதற்குப் பொருத்தமான முறைமையொன்றை அமுல்படுத்த வேண்டுமென குழு பரிந்துரைக்கின்றது.

### (இ) தேர்தல் சட்டங்களை மீறி சமூக ஊடகத் தளங்களினால் மேற்கொள்ளப்படும் தவறான தகவல் பரப்புரை, தவறான தகவல் அர்த்தப்படுத்துகை மற்றும் தேர்தல் பரப்புரைகள்

தேர்தல் சட்டங்களை மீறி சமூக ஊடகத் தளங்களினால் மேற்கொள்ளப்படும் தேர்தல் பரப்புரைகள், தவறான பொருள்கோடல், போலியான தகவல் பரப்புரை ஆகியவற்றைத் தடுக்கும் வகையில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென குழு விதந்துரைக்கின்றது.

## 6. தேர்தல் பரப்புரைகள்*

### (அ) தேர்தல் செலவுகள் மீதான கட்டுப்பாடு

'தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டங்களை ஆக்குதல்' என்ற தலைப்பில் 2021.11.16 ஆம் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தை 2021.11.29 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பரிசீலனை செய்து, தற்போதைய தேவையை விரைவாக பூர்த்தி செய்யும் வகையில் தேர்தல் செலவுகள் மீதான கட்டுப்பாடு தொடர்பான தற்போதைய சட்டவிதிகளைத் திருத்துவதற்கான சட்டமூலத்தின் வரைவை இறுதி செய்ய சட்ட வரைஞருக்கு அறிவுறுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி அமைச்சரவை முடிவை அவதானித்த குழு, தேர்தல் செலவுகள் மீதான கட்டுப்பாட்டுக்கான சட்டத்தை இயற்றுவதற்கு மேலதிக நடவடிக்கைகளை எடுக்குமாறு விதந்துரைக்கின்றது.

### (ஆ) நடத்தைக்கோவை

தேர்தல் காலப்பகுதியில் அனைத்து அரசியல் கட்சிகள்/ சுயேச்சைக் குழுக்கள்/ வேட்பாளர்கள் நடத்தைக்கோவைக்கு இணங்கி செயற்பட கட்டாயப்படுத்தவும், அத்தகைய சட்டத்தை மீறுவதை தேர்தல் குற்றமாகக் கருதவும் தேவையான சட்டம் இயற்றப்பட வேண்டும் என்றும் விதந்துரைக்கின்றது.

### (இ) தேர்தல் பரப்புரைக்காக அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கான பணிப்புரைகள்

தேர்தல் பரப்புரை அல்லது அரசியல் நோக்கங்களுக்காக பகிரங்க அலுவலர்களை பணிக்கமர்த்துவதையும், அரச வளங்கள், அரச சொத்துக்கள், அரச வாகனங்கள், கட்டிடங்கள் அல்லது உத்தியோகபூர்வ அதிகாரங்களைப் பயன்படுத்துவதையும் தடுக்கும் தேர்தல் ஆணைக்குழு, வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு இணங்க ஒரு பயன்கூர் பொறிமுறையை உருவாக்க வேண்டும் என்றும், அத்தகைய வழிகாட்டல்ளை மீறுதல் ஒரு தேர்தல் குற்றமாகும் எனவும் குழு விதந்துரைக்கின்றது.

### (ஈ) தேர்தல் பரப்புரை தொடர்பான சட்டம்

தற்போதைய தேவைகளைப் பூர்த்திசெய்யும் விதத்தில் நியாயமான பரப்புரை முறைகள் மற்றும் சட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும் என்று குழு விதந்துரைக்கின்றது.

(*தேர்தல் ஆணைக்குழுவின் அவதானிப்புகள் மற்றும் காண்புகளின் அடிப்படையில்)

## 7. வாக்களிக்கும் உரிமை

### (அ) முன்கூட்டியே வாக்களிக்கும் உரிமையும் சிறப்பு வாக்கெடுப்பு நிலையங்களை நிறுவுதலும்

தேர்தல் ஆணைக்குழு, அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய முன்வரிசை அமைப்புக்களின் கருத்துக்களைப் பரிசீலித்த குழு சுகாதார சேவை, விமான நிலையங்கள், நெடுஞ்சாலைகள், நீர்வழங்கல், மின்சாரம், சுங்கம் மற்றும் கண்காணிப்பு அமைப்புக்களின் பிரதிநிதிகள் போன்ற அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் ஊழியர்களை அனுமதிக்கும் வகையில் தற்போதுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் திருத்தப்பட வேண்டும் என்று விதந்துரைக்கின்றது. வாக்கெடுப்பு தினத்தன்று வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் செல்ல முடியாதவர்கள் மற்றும் தபால்மூலம் வாக்களிக்க தகைமை பெறாதவர்கள் மற்றும் முதலீட்டு வலயங்கள், ஊடக நிறுவனங்கள், மருந்தகங்கள், சுற்றுலாத்துறை

ஹோட்டல்கள், உணவகங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகள், வீட்டு வேலைக்காரர்கள் போன்ற ஊழியர்கள் முதலியோர் பதிவுசெய்யப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து வெகு தொலைவில் வசித்தல், வாக்குப்பதிவு நாளில் பணிபுரிகின்றவர்களுக்கும் தமது வாக்கை அளிப்பதற்காக தேர்தல் மாவட்டத்தில் மாற்று வாக்கெடுப்பு நிலையங்களை அமைத்தல் மற்றும் மருத்துவமனைகள், தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்கள் மற்றும் நீண்டகால பராமரிப்பு வசதிகளில் இருப்பவர்கள் மற்றும் மறியற் கைதிகள் ஆகியோர் தமது வாக்கை அளிப்பதற்காக நடமாடும் வாக்கெடுப்பு நிலையங்களை அமைக்கக்கூடியவாறான சட்டதிட்டங்களில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமென விதந்துரைக்கின்றது..

**(ஆ) வலிமையிழந்தோருக்கான வாக்களிக்கும் உரிமை**

வலிமையிழந்தோர் வாக்களிக்க மருத்துவ சான்றிதழ் வழங்குவதை கட்டாயமாக்கும் சட்ட ஏற்பாடுகளை நீக்கி, அவர்கள் நடமாடும் வாக்கெடுப்பு நிலையங்கள் மூலம் வாக்களிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் விதந்துரைக்கப்படுகின்றது.

விழிப்புலனற்றோருக்கு பிரெய்லி முறையைப் பயன்படுத்தி வாக்களிக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் மேலும் விதந்துரைக்கப்படுகின்றது.

**(இ) மின்னணு வாக்குப் பதிவு முறையை அறிமுகப்படுத்தல்**

தேர்தல்களின்போது ஆள்பலத்திற்காக தேர்தல் ஆணைக்குழு அதிகளவில் செலவிடுவதைக் குறைக்கவும், தேர்தல் முடிவுகளை வெளியிடுவதில் ஏற்படும் தாமதங்களைத் தடுக்கவும், வாக்குச்சீட்டின் இரகசியம் மற்றும் தேர்தல் செயன்முறை மீதான பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதுகாக்கும் நோக்குடன் மின்னணு வாக்குப்பதிவு முறையை அறிமுகப்படுத்தும் தேவை எழுந்துள்ளது.

ஆகையால், பெரும்பாலான தெற்காசிய நாடுகளில் அமுலிலுள்ள தேர்தல்களில் மின்னணு வாக்குப்பதிவு முறையை அறிமுகப்படுத்த விதந்துரைக்கப்படுகின்றது.

**8. நியமன முறை**

**(அ) வேட்புமனுக்களை கையளிக்கும் சந்தர்ப்பத்தில்/திகதியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்தல்களைச் சமர்ப்பித்தல்**

வேட்புமனுக்களை கையளிக்கும் தருணத்தில்/ திகதியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்தல்களைச் சமர்ப்பிப்பது ஒரு வேட்பாளர் தேர்தலில் போட்டியிடத் தகைமை பெறுவதற்கு ஒரு கட்டாய அளவுகோலாக இருக்க வேண்டும். வேட்பாளர்கள் மற்றும் தெரிந்தனுப்பப்பட்ட உறுப்பினர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்த பயன்படுத்தப்படும் மாதிரி தற்போதைய தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் புதுப்பிக்கப்பட வேண்டும் என்றும் குழு விதந்துரைக்கின்றது.

**(ஆ) வைப்புப் பணம்**

அனைத்து அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் வைப்புத் தொகைகளை செலுத்துவதுடன், நாட்டில் நிலவும் நிதி நிலைமைக்கு ஏற்ப தற்போதுள்ள வைப்புப் பணத்தொகை கணிசமான அளவில் திருத்தப்பட வேண்டும் என்று குழு விதந்துரைக்கின்றது.

**(இ) வேட்புமனுக்களை நிராகரித்தல்**

வேட்புமனுப் பட்டியலிலுள்ள தொழில்நுட்பக் குறைபாடுகளைச் சரிசெய்ய ஒரு நாள் (24 மணி நேரம்) கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று குழு விதந்துரைக்கின்றது. வாக்குச்சீட்டின் நீளத்தைக் குறைக்கவும் அதன் மூலம் தேர்தல் செயற்பாட்டில் ஏற்படும்

செலவைக் குறைக்கவும் இது உதவும். வேட்புமனுப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வேட்பாளர்களுக்குப் பதிலாக, ஒரு பெண் வேட்பாளர் உள்பட மேலதிக நியமனப் பட்டியல் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று குழு விதந்துரைக்கின்றது.

மேலும் வேட்புமனுக்களை நிராகரிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அக்குழு விதந்துரைக்கின்றது.

## 9. தேர்தல் செயன்முறை

### (அ) தேர்தலுக்கு செலவிடப்படும் காலம்

பொருளாதாரத்தில் ஏற்படும் எதிர்மறையான தாக்கங்களைத் தணிக்க, வாக்கெடுப்பு நடாத்துவதற்கான முழு செயன்முறைக்கும் செலவிடப்படும் நீண்டகாலத்தை குறைக்க வேண்டும் என்று குழு விதந்துரைக்கின்றது.

### (ஆ) தேர்தல் செயற்பாட்டில் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு

அடுத்த 5-10 ஆண்டுகளில் தேர்தல் செயற்பாட்டில் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு அதிகரிக்கும் என்பதுடன், அந்தந்த அதிகாரிகளுடன் ஒத்துழைத்து பொருத்தமான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் அதனை ஒழுங்குபடுத்த வேண்டுமென குழு விதந்துரைக்கின்றது.

### (இ) வாக்கெடுப்பு நிலையங்களில் அல்லது பிரதேச செயலக அலுவலகங்களில் வாக்கெண்ணல்.

கடந்த 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தலின்போது பின்பற்றப்பட்ட, அளிக்கப்பட்ட வாக்குகளை உரிய வாக்கெடுப்பு நிலையத்திலோ அல்லது பிரதேச செயலக அலுவலகத்திலோ எண்ணும் முறையானது, முடிவுகளை விரைவாக அறிவிக்கும் வகையில் மிகவும் வினைத்திறனானதாகவும் செலவுகளை குறைக்கக்கூடியதாகவும் இருக்குமென குழு கருதுகின்றது.

ஆகையால், இந்த முறையைத் தொடரவும், ஏனைய தேர்தல்களிலும் பின்பற்றவும் குழு விதந்துரைக்கின்றது.

## 10. தேர்தல் நியாய சபை (தீர்ப்பாயம்)

தேர்தல் முறைப்பாடுகள் குறித்து விசாரிக்கவும், நீதிமன்ற முறைக்கு வெளியே பிணக்குகளைத் தீர்க்கவும், தேர்தல் நியாய சபையை அமைக்குமாறும், அவர்களின் பாரபட்சமற்ற தன்மைக்கு உத்தரவாதமளிக்கும் வகையில் பாதுகாப்பளிக்குமாறும் விதந்துரைக்கப்படுகின்றது.

தேர்தல் குற்றங்கள் தொடர்பில் வழக்குத் தாக்கல்செய்யும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட வேண்டுமென்றும் விதந்துரைக்கின்றது.

## 11. தேர்தல் பிரகடனம் செய்யப்பட்ட பின்னர் உள்ளூர் அதிகாரசபைகளுக்கும் மாகாண சபைகளுக்கும் தெரிந்தனுப்பப்பட்டுள்ள பிரதிநிதிகள் பதவிவகித்தலும் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளை மேலும் அமுல்படுத்துதலும் நிறைவேற்றுதலும்.

தேர்தல் முடியும் வரை உள்ளூர் அதிகாரசபைகள் மற்றும் மாகாண சபைகளின் அதிகாரங்களை ஆணையாளர்/செயலாளர் மற்றும் மாகாண செயலாளர் ஆகியோருக்கு வழங்க விதந்துரைக்கப்படுகின்றது.

12. **வருடாந்த வரவுசெலவுத் திட்டத்திற்கு உள்ளூர் அதிகாரசபையின் அங்கீகாரம் வழங்கப்படாமை.**
வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தை அங்கீகரிக்கத் தவறியதன் விளைவாக உள்ளூர் அதிகாரசபையொன்றின் தலைவர் நீக்கப்படும் பட்சத்தில், உள்ளூர் அதிகாரசபையின் தவிசாளர் அல்லது ஆளுங்கட்சி உறுப்பினர் எவரையும் அதன் தலைவராக நியமிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் சட்டத்தில் உட்சேர்க்கப்பட வேண்டுமென விதந்துரைக்கப்படுகின்றது.

13. **உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு வெளிக்கள அலுவலர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள மட்டுப்பாடு**
தேர்தல் நடைபெறுவதற்கு குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்கு முன்பதாக வேட்புமனு கோரும் உள்ளூர் அதிகாரசபை பிரதேசத்தில் பணியாற்றுவதை நிறுத்தாத வெளிக்கள அலுவலர்கள், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தலில் போட்டியிடுவதற்கு தகுதியற்றவர்களாக்கப்படுவது நியாயப்படுத்த முடியாததும் ஜனநாயகமற்றதும் என்பதை குழு அவதானித்துள்ளது.

ஆகையால், வெளிக்கள அலுவலர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள இம்மட்டுப்பாட்டை நீக்குமாறு விதந்துரைக்கப்படுகின்றது.

14. **தேசியப் பட்டியல்**
தேசியப் பட்டியல் ஒரு மூடிய பட்டியலாக இருக்க வேண்டும் என்றும், புலமைசான்றோர், நிபுணர்கள் மற்றும் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றிராத கட்சிகளுக்கு மட்டுமே தேசியப் பட்டியல் உறுப்பினர்களாக நியமனம் பெறுவதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்றும் குழு விதந்துரைக்கின்றது. தேசியப் பட்டியலுக்கான நியமனம் ஒரு தவணைக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும், தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் அவர்களுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்றும் குழு மேலும் விதந்துரைக்கின்றது.

தேசியப் பட்டியலில் ஒதுக்கப்பட்டுள்ள பெண்களுக்கான கட்டாய இட ஒதுக்கீடு ஏற்கனவே விதப்புரை 2 இன் கீழ் பெண்களின் பிரதிநிதித்துவத்தை ஊக்குவித்தல் எனும் தலைப்பின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளது.

15. **எல்லை நிர்ணயம்**

**தனி எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்றை நிறுவுதல்.**
ஒவ்வொரு கருமத்திற்கும் வெவ்வேறு குழுக்களை நியமிக்காமல் அவ்வப்போது எல்லை நிருணயத்தை மீளாய்வுசெய்து திருத்தம் செய்யப்பட வேண்டிய நிரந்தரக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

ஆகையால், தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் பின்னர் தெரிவுசெய்யப்பட்ட சபைகளுக்கு ஏற்புடைய அனைத்து எல்லை நிர்ணயப் பணிகளையும் மேற்கொள்ளக்கூடிய சட்டபூர்வ அதிகார சபையாக தனி எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு குழு விதந்துரைக்கின்றது.

மக்கள் தொகை, புவியியற் காரணிகள் மற்றும் சிதறி வாழும் சமூகங்களின் நலன்கள் உள்ளிட்ட சமூக நலன்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தற்போதைய கட்டமைப்பிலுள்ள முரண்பாடுகளை நீக்குவதற்கு தேர்தல் மாவட்ட எல்லை நிர்ணயம் புதிதாக வரையறுக்கப்பட வேண்டும் என்று குழு விதந்துரைக்கின்றது.

## 5. அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்தலும் விண்ணப்பம் கோரலும்

ஒரு நாட்டை ஆட்சிசெய்வதற்கு பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கும் குறித்த பிரதிநிதிகளை அரசியல் சூழலுக்கு இயைபாக்குவதற்கும் அரசியல் கட்சி முறை அளப்பரிய பங்காற்றுகின்றது. ஆகையால், பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் அரசியல் கட்சிகளின் வகிபாகம் மிக முக்கியமானதாக உள்ளது. ஓர் அரசியல் கட்சி என்பது குறித்த ஒரு கொள்கையின் அடிப்படையில் ஆட்சியதிகாரத்தை அடைந்துகொள்வதற்கு முயற்சி செய்யும் ஓர் அரசியல் அமைப்பாகும். இந்த அரசியல் செயற்பாட்டு அமைப்புக்களை தேர்தல் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக தேர்தல் ஆணைக்குழுவில் பதிவுசெய்வதற்கான சட்ட ஏற்பாடுகள் 1981 இன் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் ஏழாவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய அரசியல் செயற்பாட்டு அமைப்பொன்றை தேர்தல் ஆணைக்குழுவில் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியாகப் பதிவுசெய்வதற்கான எழுத்திலான ஒரு கோரிக்கையை முன்வைக்குமாறு அறிவித்து ஆண்டுதோறும் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்பு பகிரங்க அறிவித்தலொன்று தேர்தல் ஆணைக்குழுவினால் பிரசுரிக்கப்படும். குறித்த செயற்பாட்டு அமைப்பு அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட உரிய காலப்பகுதியினுள் தமது கோரிக்கையை முன்வைக்க வேண்டுமென்பதோடு இச்செயன்முறை, யாதேனுமொரு தேர்தலுக்கான திகதி குறிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், அத்தேர்தல் காலப்பகுதி முடிவடையும் வரை இடைநிறுத்தப்படும்.

அரசியல் செயற்பாட்டு அமைப்பை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக கணிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பிக்க வேண்டுமென்பதோடு, அவ்விண்ணப்பத்துடன் தேர்தல் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட தேர்தல் சின்னங்களில் தாம் தெரிவுசெய்யும் ஒரு சின்னம், கட்சி யாப்பு, கட்டாயமாக முக்கிய பதவியொன்றுக்கு பெண் பிரதிநிதித்துவமொன்றேனும் உட்சேர்க்கப்பட்ட கட்சி உத்தியோகத்தர்களின் பட்டியல், கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றுக்கள், கட்சியின் நிகழ்கால கொள்கைப் பிரகடனம் ஆகிய தகவல்களுடன் இக்கோரிக்கையைச் சமர்ப்பிக்கும் திகதிக்கு குறைந்தபட்சம் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கட்டாயமாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டிருந்ததற்காக இரு வேட்பாளர்களில் குறைந்தபட்சம் ஒரு வேட்பாளர் அக்கோரிக்கையை சமர்ப்பித்த திகதிக்கு முன்னர் நடாத்தப்பட்ட பாராளுமன்த் தேர்தலில் வெற்றியீட்டியுள்ளமை அல்லது வெவ்வேறு ஐந்து மாகாண சபைகளுக்கு பெயர்குறிக்கப்பட்ட குறைந்தபட்சம் ஐந்து வேட்பாளர்களில் மூவர் இக்கோரிக்கையை சமர்ப்பித்த திகதிக்கு முன்னர் நடாத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தலில் வெற்றியீட்டியுள்ளமை ஆகிய தகவல்களை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பதோடு, அது சம்பந்தமாக ஆணைக்குழு திருப்தியடைதலும் வேண்டும்.

இது சம்பந்தமாக பூரண விபரங்களை உள்ளடக்கி 1987 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8(9) உப பிரிவின் கீழான அறிவித்தலொன்று

2263/23 ஆம் இலக்க, 2022.01.21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசித்தப்படுத்தப்பட்டுள்ளது. 1987 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் நோக்கத்திற்காக அரசியல் கட்சிகளுக்கு அனுமதிக்கப்பட்ட சின்னங்கள் 2263/24 ஆம் இலக்க, 2022.01.21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசித்தப்படுத்தப்பட்டுள்ளதோடு, அவ்வறிவித்தல் 2267/2 ஆம் இலக்க, 2022.02.14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கோரல் 2022.01.24 ஆம் திகதியில் ஆரம்பித்து 2022.02.25 ஆம் திகதியுடன் முடிவடைந்ததுடன், 2022 ஆம் ஆண்டிற்காக பதிவுசெய்துகொள்வதற்கு 80 அரசியல் அமைப்புக்கள் விண்ணப்பித்திருந்தன. அது பற்றிய தகவல்கள் வருமாறு:-

- கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை - 80
- தாமதித்து ஒப்படைத்ததன் பேரில் நிராகரிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை - 04
- அடிப்படை தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்படாமை காரணமாக நிராகரிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை - 34
- வாபஸ் பெறப்பட்டவற்றின் எண்ணிக்கை - 03
- நேர்முகப் பரீட்சை முதலாம் கட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்டவற்றின் எண்ணிக்கை - 39
- நேர்முகப் பரீட்சை கட்டத்தின் பின்பு நிராகரிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை - 26
- நேர்முகப் பரீட்சை இரண்டாம் கட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்டவற்றின் எண்ணிக்கை - 13

தேர்தல் ஆணைக்குழுவினால் 79 அரசியல் கட்சிகள் ஏலவே அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 2263/22 ஆம் இலக்க, 2022 ஜனவரி 21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் அது பற்றிய தகவல்கள் விபரங்கள் பிரசித்தப்படுத்தப்பட்டுள்ளதுடன் தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்திலும் (www.elections.gov.lk) பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## 6. வாக்காளர்களைப் பதிவு செய்தல்

தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அனைத்து பிரஜைகளுக்கும் இனம், மதம், மொழி சாதி, குலம், கல்வித் தகைமை, சொத்துரிமை, பிறந்த இடம், பாலினம், சமூக நிலைமை ஆகிய எந்தவொரு விடயம் தொடர்பிலும் முக்கியத்துவம் காண்பிக்கப்படாமல் நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்பதற்கான உரிமை மற்றும் அதற்கான மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்துகொள்வதற்கான உரிமையை சர்வசன வாக்குரிமை ஊடாகவே பெற்றுக்கொள்ள முடியும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் மூன்றாவது உறுப்புரையில் சர்வஜன வாக்குரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதில் “இறைமை அதிகாரம் மக்களுக்குரியதெனவும் அதை பிறருக்கு வழங்க முடியாதெனவும் பாராதீனப்படுத்த முடியாதெனவும் அந்த இறைமை

அதிகாரத்தில் ஆட்சி அதிகாரம், அடிப்படை உரிமைகள், வாக்குரிமை ஆகிய அம்சங்கள் உள்ளடக்கப்படுவதாகவும்" குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய நாட்டின் பிரஜைகளுக்கு சனாதிபதித் தேர்தலொன்றின்போது, பாராளுமன்றத் தேர்தலொன்றின்போது, மக்கள் தீர்பொன்றின்போது, மாகாண சபைத் தேர்தலொன்றின்போது, மற்றும் உள்ளூர் அதிகார சபைத் தேர்தலொன்றின்போது தமது வாக்குரிமையைப் பயன்படுத்த முடியும். மேற்குறிப்பிடப்பட்ட தேர்தல்களின்போது வாக்களிப்பதற்காக பிரஜைகள் குறித்த தேர்தலுக்காக செல்லுபடியாகும் தேருநர் இடாப்பில் பதிந்திருத்தல் கட்டாயமாகும்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் மற்றும் 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் மற்றும் 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு (திருத்த) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தேர்தல் ஆணைக்குழுவினால் இந்த அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- **வாக்காளரொருவராக தேருநர் இடாப்பில் பதிவுசெய்து கொள்வதற்கு தேவைப்படும் அடிப்படை தகைமைகள்**
  - இலங்கை பிரஜையாகவிருத்தல்.
  - தேருநர் இடாப்பில் பதிவு செய்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் தினமான பெப்புருவரி மாதம் முதலாம் திகதியன்று 18 வயதை பூர்த்திசெய்திருத்தல் (அதற்கமைய 2022 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பில் பதிவுசெய்து கொள்வதற்கு 2004.01.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பிறந்த நபர்களுக்கே முடியுமாகவிருக்கும்.
  - தேருநர் இடாப்பில் பதிவு செய்து கொள்வதற்கு கோரப்படும் முகவரியில் சாதாரணமாக வசித்தல்.

**வாக்காளரொருவராக தேருநர் இடாப்பில் பதிவுசெய்து கொள்வதற்கான தகைமையீனங்கள்**

- செயல்வலுப்பெரும் சட்டமொன்றின் கீழ் சித்தசுவாதீனம் அற்றவரென நீதிமன்றமொன்றினால் தீர்மானிக்கப்பட்டிருத்தல்.
- இரண்டு வருட காலம் சிறையில் அடைக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்படும் தவறொன்றுக்காக நீதிமன்றத்தினபால் குற்றவாளியாக்கப்பட்டு 06 மாதங்கள் அல்லது அதனிலும் அதிக காலம் சிறையில் அடைக்கப்பட்டிருத்தல் அல்லது சிறையில் அடைக்கப்பட்டு அதன் பின்னர் 07 வருடங்கள் கழிந்திராமை.
- இலஞ்ச குற்றச்சாட்டொன்றுக்காக குற்றவாளியாக்கப்பட்டு 07 வருடங்கள் கழிந்திராமை.
- தேர்தல் சட்டங்களை மீறியமை காரணமாக நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டிருத்தல்.

- பொது நிறுவனங்களின் ஊழல் தடுப்பு கட்டளைச் சட்டத்தின்கீழ் குற்றவாளியாக்கப்பட்டிருத்தல்.
- மேற்குறிப்பிடப்பட்ட தகைமையீனங்கள் உட்பட அரசியல் அமைப்பின் 89 உறுப்புரையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குரிமையை இழக்கச் செய்யும் தகைமையீனங்களுக்கு உட்படாத நபராகவிருத்தல் வேண்டும்.

## 7. 2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு

- 2021 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பை தயாரிக்கும் பணிகள் மாவட்ட மட்டத்தில் நிறைவுசெய்யப்பட்டு 2022.01.07 ஆம் திகதி நாட்டின் அனைத்து தேர்தல் மாவட்டங்களினதும் பதிவு / உதவிப் பதிவு அலுவலர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமாக 2022.01.07 ஆம் திகதிய, 2261∴71 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் செய்திப் பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் அறிவித்தல்களை வெளியிடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் போன்றே மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களிலும் நாட்டின் அனைத்து கிராம அலுவலர் அலுவலகங்களிலும் பொதுமக்களுக்காக காட்சிப்படுத்தப்பட்டது.

- 2021 ஆண்டில் பதிவுசெய்துகொள்ளப்பட்ட மொத்த எண்ணிக்கை 16,575,646 ஆகும். அதற்கமைய 2020 ஆம் ஆண்டில் மற்றும் 2021 ஆம் ஆண்டில் ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்கள் / நிருவாக மாவட்ட மட்டத்தின் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| தேர்தல் மாவட்டத்தின் இலக்கம் மற்றும் பெயர் | 2021 | 2020 |
|---|---|---|
| 01 - கொழும்பு | 1,735,315 | 1,724,061 |
| 02 - கம்பஹா | 1,814,507 | 1,804,102 |
| 03 - களுத்துறை | 985,948 | 981,364 |
| 04 - கண்டி | 1,151,796 | 1,140,168 |
| 05 - மாத்தளை | 416,249 | 413,096 |
| 06 - நுவரெலியா | 586,089 | 583,566 |
| 07 - காலி | 879,992 | 876,391 |
| 08 - மாத்தறை | 667,904 | 664,030 |
| 09 - அம்பாந்தோட்டை | 503,184 | 499,586 |
| 10 - யாழ்ப்பாணம் | 572,446 | 563,193 |
| 11 - வன்னி | 293,682 | 290,172 |
| 12 - மட்டக்களப்பு | 427,125 | 419,345 |
| 13 - திகாமடுல்ல | 529,045 | 523,148 |
| 14 - திருகோணமலை | 297,946 | 293,607 |
| 15 - குருநாகல் | 1,375,457 | 1,360,627 |
| 16 - புத்தளம் | 637,009 | 628,640 |

| | | |
|---|---|---|
| 17 - அனுராதபுரம் | 710,248 | 701,827 |
| 18 - பொலன்னறுவை | 339,428 | 336,701 |
| 19 - பதுளை | 680,892 | 675,924 |
| 20 - மொணராகலை | 381,252 | 377,688 |
| 21 - இரத்தினபுரி | 895,944 | 888,722 |
| 22 - கேகாலை | 694,188 | 690,101 |
| மொத்தம் | **16,575,646** | **16,436,059** |

- வருடாந்த தேருநர் இடாப்பைத் தயாரித்து அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 98 ஆவது உறுப்புரையின் (8) ஆம் உப உறுப்புரையின் கீழான கட்டளைப் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதற்காக 2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் அந்தந்த தேர்தல் மாவட்டங்களுக்கான பதிவுசெய்துகொள்ளப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவுசெய்யப்பட வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 2022.02.10 ஆம் திகதிய 2266/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. அந்த தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| **தேர்தல் மாவட்டத்தின் பெயர்** | **ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட முடியுமான உறுப்பினர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| 01 - கொழும்பு | 19 |
| 02 - கம்பஹா | 18 |
| 03 - களுத்துறை | 10 |
| 04 - கண்டி | 12 |
| 05 - மாத்தளை | 5 |
| 06 - நுவரெலியா | 8 |
| 07 - காலி | 9 |
| 08 - மாத்தறை | 7 |
| 09 - அம்பாந்தோட்டை | 7 |
| 10 - யாழ்ப்பாணம் | 7 |
| 11 - வன்னி | 6 |
| 12 - மட்டக்களப்பு | 5 |
| 13 - திகாமடுல்ல | 7 |
| 14 - திருகோணமலை | 4 |
| 15 - குருநாகல் | 15 |
| 16 - புத்தளம் | 8 |
| 17 - அனுராதபுரம் | 9 |
| 18 - பொலன்னறுவை | 5 |
| 19 - பதுளை | 9 |
| 20 - மொணராகலை | 6 |
| 21 - இரத்தினபுரி | 11 |
| 22 - கேகாலை | 9 |
| மொத்தம் | **196** |

## 8. 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டம்

இது, 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் திருத்தச் சட்டம் என்றழைக்கப்படுவதுடன், 2022 பெப்புருவரி மாதம 01 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறுகின்றது. இந்த திருத்தத்தின் ஊடாக முதன்மைச் சட்டவாக்கத்தின் இலக்கம் 03, இலக்கம் 04, இலக்கம் 12, இலக்கம் 13, இலக்கம் 29 மற்றும் அட்டவணை திருத்தியமைக்கப்பட்டதுடன் இலக்கம் 20அ மற்றும் 24அ பிரிவுகள் புதிதாக உட்சேர்க்கப்பட்டுள்ளன.

வருடாந்தம் தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்துதலுக்கு மேலதிகமாக நான்கு மாதங்களுக்கொரு முறை 18 வயதை பூர்த்தி செய்யும் ஆட்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்ட குறைநிரப்பு இடாப்பைத் தயாரிப்பதற்கும் அந்த செயற்பாட்டை தொடர்ச்சியாக மேற்கொண்டு தேர்தலொன்றுக்கு முன்னர் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேருநர் இடாப்புக்கு மேலதிகமாக அதன் ஒரு பகுதியாக இந்த குறைநிரப்பு இடாப்பை கருதுவதற்கும் 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தினூடாக வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் அடிப்படை திருத்தம் என்னவெனில், அச்சட்டத்தில் "தகைமைபெறும்" திகதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள "ஏதேனுமொரு ஆண்டின் யூன் மாதம் முதலாம் திகதி" என்பதற்கு பதிலாக பெப்புருவரி மாதம் 01 ஆம் திகதி எனத் திருத்தியமைக்கப்பட்டிருப்பதாகும். இதற்கமைய தகைமைபெறும் திகதி மற்றும் குறைநிரப்பு இடாப்பு தயாரிக்கப்படும் காலப்பகுதிகளாவன.

- **ஏதேனுமொரு ஆண்டின் பெப்புருவரி மாதம் 01 ஆம் திகதி முதல் மே மாதம் 31 ஆம் திகதி (02.01 முதல் 05.31)**
- **யூன் மாதம் 01 ஆம் திகதி முதல் செப்தெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை (06.01 முதல் 09.30 வரை)**
- **ஒக்தோபர் மாதம் 01 ஆம் திகதி முதல் சனவரி மாதம் 01.31 ஆம் திகதி வரை (10.01 முதல் 01.31 வரை) எனும் காலப்பகுதிகளாகும்.**

மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் 18 வயதை பூர்த்திசெய்யும் ஆட்கள் 18 வயதை பூர்த்திசெய்து இரு வாரங்களுக்குள் அவர் வசிக்கும் தேர்தல் மாவட்டத்தில் பதிவு அலுவலருக்கு பிறப்புச் சான்றிதழ் அல்லது தேசிய அடையாள அட்டையின் பிரதியுடன் வாக்காளராக பதிவுசெய்வதற்கான கோரிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

இக்காலப்பகுதிக்குரிய குறைநிரப்பு இடாப்புக்கள் ஒவ்வொரு மாவட்டத்தினதும் அனைத்து பதிவு அலுவலர்களும் இரு வாரங்களுக்குள் வர்த்தமானி அறவித்தலொன்றினூடாக மற்றும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளிவரும் செய்திப் பத்திரிகைகளில்

அறிவித்தலொன்றாக வெளியிட்டு குறித்த குறைநிரப்பு இடாப்புக்களை பதிவு அலுவலர் அலுவலகதிதில் அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள அந்த மாவட்டத்தின் பிரிதொரு இடத்தில் நியாயமான காலப்பகுதியொன்றுக்குள் பரிசீலிப்பதற்கான வாய்ப்பு நிலவுவதாகவும் அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விடுக்கப்பட்ட திகதி முதல் 10 நாட்களுக்குள் தமது பெயரை உட்சேர்த்துக்கொள்வதற்கான உரிமையுண்டென தெரிவிக்கும் ஆட்களுக்கு பதிவு அலுவலரிடம் கோரிக்கையொன்றை முன்வைக்க முடியும்.

அத்தோடு குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்க்கப்பட்டுள்ள பெயரொன்று தொடர்பாக ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டுமாயின் அறிவித்தல் திகதி முதல் 10 நாட்களுக்குள் பதிவு அலுவலருக்கு அந்த ஆட்சேபனையை சமர்ப்பித்தல் வேண்டும். இந்த உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனை தொடர்பான நடைமுறை பற்றி 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 14(6) முதல் 14(16) வரை மற்றும் 15 ஆம் பிரிவுகளில் ஏற்பாடுகளை தேவையான திருத்தங்களுடன் ஏற்புடையதாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

இந்த உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் இந்த குறைநிரப்பு இடாப்பை பதிவு அலுவலர் அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும். அத்தாட்சிப்படுத்திய குறைநிரப்பு இடாப்பை தேருநர் இடாப்பின் இணைப்பொன்றாக உட்சேர்த்தல் வேண்டும். இதற்கமைய தேர்தலொன்றை பிரகடனப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட குறைநிரப்பு இடாப்பு குறித்த தேர்தலுக்கான தேருநர் இடாப்பின் ஒரு பகுதியாகக் கருதப்படுவதனால் 18 வயதை பூர்த்தி செய்த ஆட்களுக்கு 18 வயதை பூர்த்தி செய்யப்பட்டு 04 மாத காலங்களுக்குள் தேருநர் இடாப்பில் தனது பெயரை உட்சேர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றது. இதனால் தேர்தலொன்றின்போது வாக்களிப்பதற்காக 18 வயது பூர்த்தியடைந்து பல வருடங்கள் காத்திருக்க வேண்டியதில்லை.

இங்கு விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டியது என்னவெனில், குறைநிரப்பு இடாப்பில் பெயர்களை உட்சேர்த்துக் கொள்வதற்கான கோரிக்கைகளை குறித்த காலப்பகுதியினுள் 18 வயதை பூர்த்திசெய்த ஆட்கள் மாத்திரமே முன்வைக்க முடியுமென்பதோடு, ஏனைய ஏதேனுமொரு காரணத்தினால் பிரதான தேருநர் இடாப்பில் தமது பெயரை உட்சேர்த்துக் கொள்ள முடியாத ஆட்களுக்கு குறைநிரப்பு இடாப்பில் பெயரை உட்சேர்த்துக் கொள்வதற்கான கோரிக்கைகளை முன்வைக்க முடியாது.

தேருநர்களைப் பதிவுசெய்தல் சம்பந்தமாக எழும் சிக்கல்கள், எதிர்பாராத விடயங்கள் சம்பந்தமாக தீர்மானித்தல் அல்லது மாற்றிமைப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை வெளியிடுவதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 9. தேருநர் இடாப்பு மீளாய்வு - 2022

2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்கமைய 2022 பெப்புருவரி மாதம் 01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் 2022 ஆம் ஆண்டிற்கான பிரதான தேருநர் இடாப்புக்காக தேருநர் கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- **2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வுச் செயன்முறைக்கமைய பிரதான இடாப்பை தயாரித்தல்.**

இந்த அலுவல்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கமைய மாவட்டத்தின் பதிவு அலுவலரின் வழிநடாத்தலின் கீழ் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன், களத்தில் வாக்காளர்களை கணக்கெடுக்கும் பணிகளைக் கணக்கெடுப்பு அலுவலர்களாக கிராம அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

பொதுவாக தேருநர் இடாப் மீளாய்வின்போது அனைத்து வீடுகளுக்கும் வாக்காளர்களைக் கணக்கெடுக்கும் படிவமொன்று (BC படிவம்) விநியோகிக்கப்பட்டு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டாலும் COVID-19 தொற்றுநோய் நிலைமை 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலும் நிலவியமை காரணமாக பிரஜைகள் மற்றும் அலுவலர்களின் பாதுகாப்பு கருதி 2022 தேருநர் இடாப்பு மீளாய்வின்போது அவ்வாறு வாக்காளர்களைக் கணக்கெடுப்பதற்காக அனைத்து வீடுகளுக்கும் படிவங்களை விநியோகிப்பதனை மேற்கொள்ளாதிருப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய 2021 ஆம் ஆண்டில் மேற்கொண்ட விதத்தில் 2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பிலிருந்து நீக்கப்படும் மற்றும் புதிதாக உட்சேர்க்கப்படும் பெயர்களின் அடிப்படையில் மாத்திரம் வாக்காளர்களைக் கணக்கெடுப்பதற்காக 2022/ER எனும் விசேட படிவமொன்று அறிமுகம் செய்யப்பட்டது.

- **வதிவிடம் மாற்றப்படுவதன் காரணமாக புதிய பதிவு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய விதம்**

சாதாரண வதிவு 2022 பெப்புருவரி மாதம் 01 ஆம் திகதி அன்று ஏற்பட்டிருப்பின் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பின் புதிய முகவரியொன்றின் கீழ் பதிவு செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொண்டுள்ள ஆட்கள் தற்போது வசிக்கும் முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலரை சந்தித்து 2022/ER படிவமொன்றைப் பெற்று பூரணப்படுத்தி கையளித்தல் வேண்டும். இந்த படிவத்தை www.elections.gov.lk இணையத்தளத்தினூடாகவும் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும் இந்த படிவத்தில் முன்னைய பதிவு தொடர்பான விபரங்களை குறிப்பிடுவதற்கான நிரலில் அந்த விபரங்களை கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும். ஆயினும் முன்னைய

வதிவிடத்திலிருந்து விலகிச சென்றமை தொடர்பாக கிராம அலுவரால் வழங்கப்படும் கடிதத்தை சமர்ப்பித்தல் கட்டாயமில்லை.

- **2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்படாத ஆட்கள் 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட வேண்டிய விதம்**

  2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்படாத ஆட்கள் 2022 ஆம் ஆண்டில் பதிவுசெய்கொள்வதற்காக தற்போது வசிக்கம் கிராமத்தின் கிராம அலுவலரை சந்தித்து 2022/ER கடிவமொன்றைப் பெற்றுக்கொள்ளல் அல்லது www.elections.gov.lk பதிவிறக்கம் செய்து அந்த படிவத்தை உரிய பிரகாரம் பூரணப்படுத்தி கிராம அலுவலரிடம் கையளித்தல் வேண்டும். இந்த படிவத்தில் அவர் இறுதியாக தேருநர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்டிருந்த முகவரியின் விபரங்களை குறிப்பிடுதல் வேண்டும்.

- **2022.02.01 ஆம் திகதியன்று 18 வயதை பூர்த்தி செய்த ஆட்களை தேருநர் இடாப்பில் பதிவுசெய்தல்.**

  20004.01.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பிறந்த ஆட்கள் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்கான தகைமைகளைப் பெறுகின்றனர். அதற்கமைய இந்த ஆண்டில் 18 வயதை பூர்த்தி செய்த நபர்கள் 2022/ER படிவங்களைப் பூரணப்படுத்தி பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றுடன் கிராம அலுவலரிடம் கையளித்தல் வேண்டும்.

- தேருநர் இடாப்பு மீளாய்வு தொடர்பான அறிவுறுத்தல் சுற்றறிக்கை மாவட்ட பதிவு அலுவலர்களான மாவட்ட செயலாளர்களுக்கும் உதவிப் பதிவு அலுவலர்களான மாவட்ட பிரதி, உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும் மீளாய்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் வெளியிடப்பட்டது. வாக்காளர்களைக் கணக்கெடுக்கும் சட்ட ரீதியான மற்றும் நடைமுறை ரீதியிலான விடயங்கள் சம்பந்தமாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்தல் வரையிலான எதிர்கால செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டிய கால அட்டவணைப் பற்றிய திட்டமும் வழங்கப்பட்டுள்ளது.

- தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கமைய உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சரின் செயலாளலினால் ரேருநர் இடாப்பு மீளாய்வு பணிகளுக்கான களக்கணக்கெடுப்பை மேற்கொள்ளும் காலப்பகுதியினுள் கிராம அலுவலர்களின் இடமாற்றல்களை இடைநிறுத்தல் மற்றும் அக்காலப்பகுதியினுள் கிராம அலுவலர்களின் அலுவலக தினங்களை வரையறுத்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள் அனைத்து மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களால் ஒப்படைக்கப்படும் அவசர மற்றும் அத்தியாவசிய கடமைகளை நிறைவேற்றுவதன்கீழ் 2021.02.01 ஆம் திகதி முதல் 2022.06.01 ஆம் திகதி வரை கிராம அலுவலர்கள் வாரத்தில் செவ்வாய், வியாழன் மற்றும் சனி ஆகிய கிழமைகளில் முற்பகல் அலுவலகத்தில் தரித்திருத்தல் வேண்டுமென்பதோடு, எஞ்சிய தினங்களில் களத்தில் கணக்கெடுப்புக்களை மேற்கொள்வதற்காக விடுவிப்பதற்கு

அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அத்தோடு, அக்காலப்பகுதியினுள் கிராம அலுவலர்களின் இடமாற்றல்களை மேற்கொள்ளாதிருப்பதற்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

- 2022 பெப்புருவரி மாதம் மீளாய்வு பணிகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் கொவிட்19 காரணமாக மீளாய்வு தொடர்பான அறிவித்தல்களை வீடுவீடாகச் சென்று விநியோகிக்க முடியாதிருந்தமை கிராம அலுவலர்கள் அவர்களுடைய படிகள் தொடர்பான சிக்கல்களை முன்வைத்து மேற்கொண்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் போன்ற காரணங்களினால் 2022 ஆம் ஆண்டின் மீளாய்வு பணிகளுக்கு ஆரம்பத்திலேயே பெரும் இடையூறுகள் ஏற்பட்டன. இது சம்பந்தமாக 2022.02.15 ஆம் திகதி உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளரது தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலுக்கு தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்துடன் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (தேசிய தேர்தல்கள்) பங்குபற்றியதுடன் கிராம அலுவலர்களின் தொழிற்சங்க பிரதிநிதிகளும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர். கிராம அலுவலர்களின் படிகள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவினால் தாபன பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் சம்பந்தமாக கிராம அலுவலர் தொழிற்சங்க பிரதிநிதிகள் தமது இணக்கப்பாட்டை தெரிவித்தனர். அதற்கமைய 2022 மீளாய்வு பணிகள் சம்பந்தமாக வீடுவீடாக அறிவித்தல்களை விநியோகித்தல் மற்றும் உறுதிப்படுத்தலை மேற்கொள்ளாதிருத்தல் மற்றும் படிகள் தொடர்பான அடிப்படை இணக்கப்பாட்டின் கீழ் தொழிற்சங்க நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு குறித்த தொழிற்சங்க பிரதிநிதிகள் இணக்கப்பாட்டை தெரிவித்தனர். வாக்காளர்களைக் கணக்கெடுக்கம் பணிகளின் ஆரம்பத்திலேயே கிராம அலுவலர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளின் காரணமாக திட்டமிட்டதன் பிரகாரம் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தடைகள் ஏற்பட்டன.

- சகல வீடுகளுக்கும் பகிர்ந்தளிப்பதற்காக 6,500,000 மீளாய்வு பற்றிய அறிவுறுத்தல் சம்மந்தமான அறிவித்தல்கள் அச்சிடப்பட்டிருந்ததுடன், கிராம அலுவலர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக அவற்றை அவர்கள் ஊடாக விநியோகிக்க முடியவில்லை. இதற்காக வேறு மாறு நடவடிக்கைகள் மீது ஆணைக்குழுவின் கவனம் ஈர்க்கப்பட்டது. பாடசாலை மாணவர்கள் மூலமாக அவர்களது பெற்றோர்ளுக்கு அறிவூட்டுவதற்கு கல்வி அமைச்சின் உதவி கோரப்பட்டது. அதற்காக கல்வி அமைச்சின் செயலாளரது இணக்கப்பாடு இலக்கம் ED/09/02/04/08/09 மற்றும் 2022.03.21 ஆம் திகதிய சுற்றறிக்கையூடாக அனைத்து அதிபர்கள் உள்ளிட்ட மாகாண, வலய, கோட்ட கல்வி பிரதானிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. இது தவிர ஏனைய மாற்று வழிகள் ஊடாகவும் மீளாய்வு பற்றிய அறிவித்தல்களை வீடுகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

- தினமும் மேற்கொள்ளப்படும் மின் துண்டிப்பு காரணமாக 2022.04.04 ஆம் திகதி முதல் 2022.04.18 ஆம் திகதி வரை தலைமை அலுவலகத்தின் கணனி தரவு மையம் தற்காலிகமாக செயலிழக்கச் செய்யப்பட்டது. நாட்டில் நிலவிய குழப்ப நிலைமை,

ஊரடங்குச் சட்டம் விதிக்கப்பட்டமை, தலைமை அலுவலகத்தின் மின் பறிப்பாக்கி இயந்திரத்திற்குத் தேவையான டீசலைப் பெற்றுக்கொள்வதில் நிலவிய சிரமங்கள் ஆகிய காரணங்களினால் 2022.05.09 முதல் 2022.05.23 வரை மீண்டும் கணனி தரவு மையத்தை செயலிழக்கச் செய்ய வேண்டியேற்பட்டது. இதனால் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கு தரவுகளை கணனி மயப்படுத்துவதில் கடும் இடையூறுகள் ஏற்பட்டன. மேலே குறிப்பிடப்பட்ட இடையூறுகளின் காரணமாக திட்டமிட்ட பிரகாரம் மீளாய்வுடன் தொடர்பான சில அலுவல்களை இடைநிறுத்துவதற்கும், மீளாய்வு அட்டவணையை திருத்தியமைக்கவும் வேண்டியேற்பட்டது.

- கிராம அலுவலர்களிடமிருந்து கணக்கெடுப்புப் படிவங்களைக் கையேற்பதனை 2022.03.11 ஆம் திகதியுடன் நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதனை 2022 யூன் மாதம் வரை நீடிக்க வெண்டியேற்பட்டது. அத்தோடு தேருநர் இடாப்பிலிருந்து நீக்கப்படும் பெயர்கள் ("அ") மற்றும் உட்சேர்க்கப்படும் பெயர்கள் ("ஆ") பெயர்ப் பட்டியல் வரைவுகளை கிராம அலுவலர் அலுவலகங்களுக்கு அனுப்பி உட்சேர்க்கப்படாத ஆட்களை மேலும் உட்சேர்த்துக்கொள்வதற்காக திட்டமிடப்பட்ட அலுவல்களை கைவிட வேண்டியேற்பட்டது.

- அத்தோடு "அ" "ஆ" பெயர்ப் பட்டியல்களை 2022.05.17 ஆம் திகதி முதல் காட்சிப்படுத்துவதற்கு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதனை 2022.06.15 ஆம் திகதி வரை ஒத்திவைக்க நேரிட்டது.

- **தேருநர் இடாப்பிலிருந்து நீக்கப்படும் பெயர்கள் ("அ") மற்றும் உட்சேர்க்கப்படும் பெயர்கள் ("ஆ") பட்டியல்களைப் காட்சிப்படுத்தல், உரிமைக் கோரிக்கைகளை மற்றும் ஆட்சேபனைகளை சமர்ப்பித்தல்.**

  2021 தேருநர் இடாப்பில் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளவர்களில் இறப்பெய்திய அல்லது வதிவிடத்தை விட்டுச் சென்றுள்ள அல்லது ஏனைய காரணங்களின் அடிப்படையில் அல்லது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளாத ஆட்களின் அதாவது 2022 ஆம் ஆண்டில் நீக்குவதற்கு பரிந்துரை செய்யப்படும் நபர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள "அ" பட்டியல் மற்றும் 2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பெயர்கள் உள்ளடக்கப்படாத ஆனாலும் 18 வயதைப் பூர்த்திசெய்தல் அல்லது வதிவிட மாற்றம் அல்லது வேறு காரணமொன்றின் அடிப்படையில் அல்லது 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்புக்கு புதிதாக பெயர்களை உட்சேர்ப்பதற்கான உரிமையைப் பெற்றுக்கொள்ளும் ஆட்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும் "ஆ" பட்டியல் காட்சிப்படுத்தல் 2022.06.15 ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்டது. இது சம்பந்தமாக இலக்கம்: 2284/19 மற்றும் 2022.06.15 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் மற்றும் செய்திப் பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன.

- **2021 ஆம் ஆண்டின் இடாப்பு (அல்லது ஒரு பகுதி) மற்றும் "அ" பட்டியல்கள் மற்றும் "ஆ" பட்டியல்களை காட்சிப்படுத்தும் இடங்கள்**

| காட்சிப்படுத்தப்படும் இடம் | காட்சிப்படுத்தப்படும் தேருநர் இடாப்பு மற்றும் பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகள் |
|---|---|
| ஒவ்வொரு மாவட்டச் செயலகங்கள் / மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் | குறித்த தேர்தல் மாவட்டத்தின் (மாவட்டத்தின்) 2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பின் முழுப் பிரதி மற்றும் அதனுடன் தொடர்புடைய 2022 ஆம் ஆண்டின் "அ" மற்றும் "ஆ" பட்டியல்களின் பிரதிகள் |
| ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் | குறித்த பிரதேச செயலகப் பிரிவின் அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்களும் குறிப்பிடப்பட்டிருக்கும் 2021 ஆம் அண்டின் தேருநர் இடாப்புப் பகுதியின் பிரதியொன்று மற்றும் அதனுடன் தொடர்பான 2022 ஆம் ஆண்டின் "அ" மற்றும் "ஆ" பட்டியல்களின் பிரதிகள் |
| ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபைகள் | குறித்த உள்ளூர் அதிகார சபைகளின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்களும் குறிப்பிடப்பட்டிருக்கும் 2021 ஆம் அண்டின் தேருநர் இடாப்புப் பகுதியின் பிரதியொன்று மற்றும் அதனுடன் தொடர்பான 2022 ஆம் ஆண்டின் "அ" மற்றும் "ஆ" பட்டியல்களின் பிரதிகள் |
| ஒவ்வொரு கிராம அலுவலர் அலுவலகம் | குறித்த கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்களும் குறிப்பிடப்பட்டிருக்கும் 2021 ஆம் அண்டின் தேருநர் இடாப்புப் பகுதியின் பிரதியொன்று மற்றும் அதனுடன் தொடர்பான 2022 ஆம் ஆண்டின் "அ" மற்றும் "ஆ" பட்டியல்களின் பிரதிகள் |

- ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் உரிய அந்த தேருநர் இடாப்பில் தனது பெயர் அல்லது வேறு நபரொருவரின் பெயரை உட்சேர்த்துக்கொள்வதற்கு தகைமையைப் பெற்றுக்கொள்ளும் ஆனாலும் தனது பெயர் தேருநர் இடாப்பிலிருந்து மற்றும் "ஆ" பட்டியலிருந்து நீக்கப்பட்டு அல்லது "அ" பட்டியலில் உட்சேர்க்கப்பட்டிருக்கும் ஒருவரால் தனது பெயர் அல்லது வேறு ஒருவரின் பெயரை இடாப்பில் உட்சேர்த்துக்கொள்வதற்கு அல்லது வைத்திருப்பதற்கு அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப தாம் அல்லது தன் சார்பில் வேறொருவர் உரிமை கோருவாராயின் அவ்வாறு உரிமை கோருபவர்கள் அது பற்றி மேலே குறிப்பிடப்பட்ட தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள "அ" மற்றும் "ஆ" படிவத்திற்கிணங்க அறிவித்தல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் 2022 யூன் 15 ஆம் திகதி வெளியிடப்பட்டதுடன் அன்றைய திகதி முதல் 4 வாரங்களுக்குள் அதாவது 2022.07.12 அம் திகதிக்கு முன்னர் இதற்கான அனைத்து விண்ணப்பங்களும் ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களினதும் பதிவு அலுவலருக்கு கிடைக்கப்பெற வேண்டுமென பிரசித்தப்படுத்தப்பட்டது.
- தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பில் அல்லது "ஆ" பட்டியலில் தனது பெயர் உட்சேர்க்கப்பட்டுள்ள ஒருவருக்கு தனது பெயர் அல்லது அந்தப் பெயர்ப் பட்டியலில் அல்லது "ஆ" பட்டியலில் பெயர் உட்சேர்க்கப்பட்டுள்ள வேறு ஒருவரின் பெயர் அந்த

இடாப்பில் உட்சேர்க்கப்பட்டிருத்தல் சம்பந்தமாக அல்லது அந்த இடாப்பில் பெயரை உட்சேர்த்துக்கொள்வதற்கு அல்லது வைத்துக்கொள்வதற்கு ஆட்சேபனையைத் தெரிவிக்க முடியும். அவ்வாறு தெரிவிக்கும் ஆட்சேபனைகளை மேலுள்ள சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் "இ" படிவத்திற்கிணங்க இரண்டு பிரதிகளில் தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இடாப்பில் பெயரை உட்சேர்த்தல் சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆட்சேபனைகளும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதி அதாவது 2022 யூன் மாதம் 15 ஆம் திகதி முதல் 4 வாரங்களுக்குள் அதாவது 2022.07.12 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் பதிவு அலுவலருக்கு கிடைக்கப்பெற வேண்டுமென பிரசித்தப்படுத்தப்பட்டது.

- உரிமைக் கோரிக்கையை முன்வைக்கும் ஒருவரின் பெயரை தேருநர் இடாப்பில் உட்சேர்த்தல் சம்பந்தமாக தெரிவிக்கப்படும் அனைத்து ஆட்சேபனைகளும் உரிமைக் கோரிக்கையை முன்வைப்பவர்களின் பெயர்ப் பட்டியல் அடங்கிய அறிவித்தல் மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்ட திகதி முதல் 14 நாட்களுக்குள் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பிரகாரம் "ஈ" படிவத்திற்கிணங்க இரண்டு பிரதிகளில் தயாரித்து பதிவு அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இந்த அறிவித்தலை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் 2022 யூலை மாதம் 01 ஆம் திகதி மற்றும் 2022 யூலை மாதம் 19 ஆம் திகதி பிரசித்தப்படுத்தப்பட்டது.
- உரிமைக் கோரிக்கைகளை முன்வைப்பதற்கான "அ" "ஆ" படிவங்கள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைப்பதற்கான "இ" "ஈ" படிவங்களை மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூர் அதிகார சபை அலுவலகங்கள் மற்றும் கிராம அலுவலர் அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டது.
- 2022.06.15 ஆம் திகதி ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்கள் / மாவட்ட மட்டத்தில் காட்சிப்படுத்தப்பட்ட "அ" "ஆ" பட்டியல்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களின் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| **தேர்தல் மாவட்டத்தின் பெயர்** | **தேருநர் இடாப்பில் நீக்கப்பட்ட ("அ") எண்ணிக்கை** | **தேருநர் இடாப்பில் உட்சேர்க்கப்படவுள்ள ("ஆ") எண்ணிக்கை** |
|---|---:|---:|
| 01 - கொழும்பு | 30,029 | 34,436 |
| 02 - கம்பஹா | 41,121 | 50,056 |
| 03 - களுத்துறை | 21,826 | 25,888 |
| 04 - கண்டி | 23,043 | 30,035 |
| 05 - மாத்தளை | 8,687 | 11,243 |
| 06 - நுவரெலியா | 9,005 | 11,963 |
| 07 - காலி | 18,305 | 21,304 |
| 08 - மாத்தறை | 12,491 | 16,590 |

| | | |
|---|---|---|
| 09 - அம்பாந்தோட்டை | 8,557 | 10,841 |
| 10 - யாழ்ப்பாணம் | 7,806 | 12,656 |
| 11 - கிளிநொச்சி | 961 | 2,371 |
| 12 - மன்னார் | 2,301 | 3,952 |
| 13 - வவுனியா | 1,889 | 3,605 |
| 14 - முல்லைத்தீவு | 2,199 | 3,595 |
| 15 - மட்டக்களப்பு | 9,764 | 16,146 |
| 16 - திகாமடுல்ல | 11,235 | 17,100 |
| 17 - திருகோணமலை | 7,709 | 12,397 |
| 18 - குருநாகல் | 25,369 | 34,753 |
| 19 - புத்தளம் | 13,730 | 20,286 |
| 20 - அனுராதபுரம் | 10,851 | 19,126 |
| 21 - பொலன்னறுவை | 6,066 | 8,665 |
| 22 - பதுளை | 11,840 | 15,874 |
| 23 - மொனராகலை | 5,956 | 9,445 |
| 24 - இரத்தினபுரி | 15,685 | 20,991 |
| 25 - கேகாலை | 12,466 | 14,284 |
| மொத்தம் | 318,891 | 427,602 |

- **உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் தாமதமான கோரிக்கைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல்.**

  "அ" "ஆ" நிரற்படுத்தப்பட்ட எண்ணிக்கை மற்றும் உரிமைக் கோரிக்கைகளை கையேற்பதற்கான காலப் பகுதியின் இறுதியில் கிடைக்கப்பெற்றுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை தொடர்பில் கவனத்தைச் செலுத்திய தேர்தல் ஆணைக்குழு வீடு வீடாகச் சென்று வாக்காளர்களைக் கணக்கெடுக்காமையினால் ஏற்பட முடியுமான பிழைகளை சரி செய்வதற்காக ஏதேனுமொரு விதத்தில் விடுபட்டுள்ள தகைமைகளைப் பெற்றுக்கொண்ட வாக்காளர்களை தாமதமான கோரிக்கைகளாகக் கருதி இடாப்பில் உட்சேர்ப்பதற்கான அறிவுறுத்தல்கள் மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- எரிபொருள் தட்டுப்பாடு, போக்குவரத்து சிரமங்கள், மின் துண்டிப்பு, தபால் அலுவலகங்களில் பணியாற்றும் காலப் பகுதியை மட்டுப்படுத்தல் மற்றும் தபால் பகிர்வதில் ஏற்பட்ட தாமதம், அலுவலக தினங்களை வரையறுத்தல், திறைசேரியிலிருந்து உரிய பிரகாரம் பணி முற்பணம் கிடைக்காமை போன்ற காரணங்களின் அடிப்படையில் உரிய பிரகாரம் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான விசாரணைகளை நடாத்துவதில் இடையூறுகள் ஏற்பட்டன.

- எவ்வாறாயினும், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான விசாரணைகளை நடாத்துதல் மற்றும் தாமதமான கோரிக்கைகள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் வழிநடாத்தல் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் பணியாற்றும்

அலுவலர்களின் அர்ப்பணிப்பு காரணமாக 2022.09.30 ஆம் திகதியாகும்போது அநேகமான அலுவல்களை நிறைவு செய்ய முடியுமாகியது.

- அதற்கமைய, 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பை 2022.10.31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 10. 2022 ஆம் ஆண்டிற்கான மேலதிக குறைநிரப்பு தேருநர் இடாப்பைத் தயாரித்தல்.

2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களை பதிவு செய்தல் (திருத்த) சட்டத்தின் 10 ஆம் பிரிவுக்கமைய 2021 யூன் மாதம் 01 ஆம் திகதி முதல் 2022 ஜனவரி 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் 18 வயதைப் பூர்த்தி செய்யும் ஆட்கள் உள்ளடங்கிய குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல் வேண்டும். 2022 பெப்ருவரி 01 ஆம் திகதி முதல் திருத்தப்பட்ட சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டியிருந்தபோதிலும் பிரதான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2021 திசெம்பர் மாதம் இந்த இடாப்பில் உட்சேர்க்கப்பட வேண்டிய ஆட்கள் தொடர்பான தகவல்களை சேகரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

- அதற்கமைய இந்த வயதுப் பிரிவைச் சேர்ந்த ஆட்கள் பற்றிய தகவல்களை ஆட்பதிவுத் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொண்டதன் பின்னர் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. அந்தத் தகவல்களை கிராம அலுவலர் பிரிவுகளுக்கமைய ஒதுக்கி வாக்காளர்களை கணக்கெடுப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட YC படிவங்களுடன் கிராம அலுவலர்களுக்கு அனுப்புமாறு மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- குறைநிரப்பு இடாப்பை தயாரிக்கும் முறை சம்பந்தமான ஆரம்ப அறிமுகமொன்றை அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினதும் செயலாளர்களுக்கும் எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டது. அத்தோடு இது சம்பந்தமாக கட்சி செயற்பாட்டாளர்கள் மற்றும் முகவர்களை அறிவூட்டுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. அத்தோடு கட்சி செயலாளர்களுடன் தேர்தல்கள் செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களின்போதும் தெளிவுபடுத்தப்பட்டது.
- குறைநிரப்புப் பட்டியல்களின் காட்சிப்படுத்தலை 2022.02.01 ஆம் திகதி முதல் மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவினால் திட்டமிடப்பட்டிருந்தாலும் கீழ் குறிப்பிடப்படும் விடயங்களின் காரணமாக 2022.04.20 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதற்கு 2022 ஜனவரி மாதத்தில் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

  - இந்த மேலதிக குறைநிரப்புப் பட்டியலில் உட்சேர்க்கப்படுவதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்ளுபவர்கள் 2022 பிரதான தேருநர் இடாப்பில் உட்சேர்க்கப்படுவதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்வதன் காரணமாக கணக்கெடுப்பு அலுவலர்களால் 2022 ஆம் ஆண்டில் மீளாய்வுடன் தொடர்பாக கணக்கெடுக்கும்போது அதிக எண்ணிக்கையானோரை உட்சேர்த்துக்கொள்ள முடியுமென்ற விடயத்தைக் கவனத்திற்கொள்ளல்.

- அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரின் இலக்கம்: 2262/8 மற்றும் 2022.01.10 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக உள்ளூர் அதிகார சபைகளின் பதவிக் காலத்தை 2023.03.19 ஆம் திகதி வரை நீடித்தல்.
- மாகாண சபைத் தேர்தல்களை நடாத்துவதற்காக தெளிவான சட்டமொன்று இல்லாதிருத்தல்.

- பிரதான இடாப்பைத் தயாரிக்கும்போது மேலே விபரிக்கப்பட்டிருக்கும் அனைத்து இடையூறுகளும் 2022 மேலதிக குறைநிரப்பு இடாப்பை தயாரிக்கும்போதும் அந்த விதத்திலேயே தாக்கம் செலுத்தியது. அந்த அனைத்து இடையூறுகளுக்கும் முகங்கொடுத்தவாறு 2022.06.15 ஆம் திகதி முதல் குறைநிரப்பு இடாப்புக்களை காட்சிப்படுத்தல் வேண்டுமென தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

- ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் பதிவு அலுவலர்களால் குறைநிரப்பு இடாப்புக்கள் தயாரித்து நிறைவு செய்யப்பட்டுள்ளதாக இல.: 2284/19 மற்றும் 2022.06.15 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் மற்றும் செய்திப் பத்திரிகை அறிவித்தல் ஊடாக 2022 யூன் 15 ஆம் திகதி அறிவிக்கப்பட்டதுடன் அந்தப் பட்டியல்கள் மாவட்டச் செயலகங்கள் / தேர்தல்கள் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூர் அதிகார சபை அலுவலகங்கள் மற்றும் கிராம அலுவலர் அலுவலகங்களில் குறித்த அலுவலக அதிகார எல்லைக்குரிய குறைநிரப்புப் பட்டியல்கள் 2022.06.15 ஆம் திகதி முதல் காட்சிப்படுத்தப்படுவதாக பிரசித்தப்படுத்தப்பட்டது.

- தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் உரிய குறைநிரப்பு இடாப்பில் தனது பெயர் அல்லது வேறு நபரொருவரின் பெயரை உட்சேர்த்துக்கொள்வதற்கு தகைமையைப் பெற்றுக்கொள்ளும் ஆனாலும் தனது பெயர் குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்க்கப்படாத எவரேனுமொருவர் தனது பெயர் அல்லது வேறு ஒருவரின் பெயரை குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்த்துக்கொள்வதற்கு அல்லது வைத்திருப்பதற்கு அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப தாம் அல்லது தன் சார்பில் வேறொருவர் உரிமை கோருவாராயின் அவ்வாறு உரிமை கோரினால் அவ்வாறு உரிமை கோருபவர்கள் அது பற்றி மேலே குறிப்பிடப்பட்ட தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள "அ" மற்றும் "ஆ" படிவத்திற்கிணங்க அல்லது தேருநர்களைக் கணக்கெடுப்பதற்காக அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள YC படிவத்தினூடாக அல்லது பிறப்புச் சான்றிதழின் அல்லது தேசிய அடையாள அட்டையின் பிரதியுடன் 2022 யூன் 15 ஆம் திகதி முதல் 10 நாட்களுக்குள் இதற்கான அனைத்து விண்ணப்பங்களும் வாரங்களுக்குள் ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களினதும் பதிவு அலுவலருக்கு கிடைக்கப்பெற வேண்டுமென பிரசித்தப்படுத்தப்பட்டது.

- தேர்தல் மாவட்டத்திற்குரிய குறைநிரப்பு இடாப்பில் தனது பெயர் உட்சேர்க்கப்பட்டுள்ள ஒருவருக்கு தனது பெயர் அல்லது அந்த இடாப்பில் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேறு ஒருவரின் பெயர் அந்த இடாப்பில் உட்சேர்க்கப்பட்டிருத்தல் சம்பந்தமாக ஆட்சேபனையைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. அவ்வாறு தெரிவிக்கும் ஆட்சேபனைகளை மேலுள்ள சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் "இ" படிவத்திற்கிணங்க இரண்டு பிரதிகளில் தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். குறைநிரப்பு இடாப்பில் பெயரை உட்சேர்த்தல் சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆட்சேபனைகளும் 2022 யூன் மாதம் 15 ஆம் திகதி முதல் 10 நாட்களுக்குள் பதிவு அலுவலருக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.
- உரிமைக் கோரிக்கையை முன்வைக்கும் ஒருவரின் பெயரை தேருநர் இடாப்பில் உட்சேர்த்தல் சம்பந்தமாக தெரிவிக்கப்படும் அனைத்து ஆட்சேபனைகளும் உரிமைக் கோரிக்கையை முன்வைப்பவர்களின் பெயர்ப் பட்டியல் அடங்கிய அறிவித்தல் மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்ட திகதி முதல் 07 நாட்களுக்குள் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பிரகாரம் "ஈ" படிவத்திற்கிணங்க இரண்டு பிரதிகளில் தயாரித்து பதிவு அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இந்த அறிவித்தலை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் 2022 யூலை மாதம் 01 ஆம் திகதி மற்றும் 2022 யூலை மாதம் 01 ஆம் திகதி பிரசித்தப்படுத்தப்பட்டது.
- உரிமைக் கோரிக்கைகளை முன்வைப்பதற்கான "அ" "ஆ" படிவங்கள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைப்பதற்கான "இ" "ஈ" படிவங்களை மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூர் அதிகார சபை அலுவலகங்கள் மற்றும் கிராம அலுவலர் அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டது.
- அதன் பின்னர் கிடைக்கப்பெற்ற உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்தோடு 2022 ஆம் ஆண்டின் வாக்காளர்களைக் கணக்கெடுக்கும் பணிகளை வீடு வீடாகச் சென்று மேற்கொள்ளாமையினால் ஏற்பட முடியுமான பிழைகளை சரி செய்தலை இடாப்பை அத்தாட்சிப்படுத்தல் வரை கிடைக்கப்பெறும் கோரிக்கைகள் மீது கவனம் செலுத்தி தகைமைகளைப் பெற்றுக்கொண்ட ஆட்களை குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்த்துக்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டது.
- உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான விசாரணைகளை நிறைவு செய்ததன் பின்னர் 2021.06.01 முதல் 2022.01.31 வரையான காலப் பகுதிக்குரிய மேலதிக குறைநிரப்பு இடாப்பு 2022 ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது. இது சம்பந்தமாக இலக்கம்: 2295/11 மற்றும் 202208.31 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மற்றும் செய்திப் பத்திரிகை அறிவித்தல் ஊடாக அறிவிக்கப்பட்டது. இந்தக் குறைநிரப்பு இடாப்பில் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 142,537

ஆகுமென்பதோடு ஒவ்வொரு தேர்தல் மாவட்டம் / மாவட்டத்திற்கமைய பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| **தேர்தல் மாவட்டத்தின் பெயர்** | **மேலதிக குறைநிரப்பு பெயர்ப் பட்டியலில் உட்சேர்க்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| 01 - கொழும்பு | 5,750 |
| 02 - கம்பஹா | 13,040 |
| 03 - களுத்துறை | 4,895 |
| 04 - கண்டி | 9,936 |
| 05 - மாத்தளை | 3,724 |
| 06 - நுவரெலியா | 4,528 |
| 07 - காலி | 7,375 |
| 08 - மாத்தறை | 6,905 |
| 09 - அம்பாந்தோட்டை | 4,045 |
| 10 - யாழ்ப்பாணம் | 7,644 |
| 11 - வன்னி | 3,467 |
| 12 - மட்டக்களப்பு | 6,084 |
| 13 - திகாமடுல்ல | 5,567 |
| 14 - திருகோணமலை | 3,143 |
| 15 - குருநாகல் | 14,452 |
| 16 - புத்தளம் | 5,683 |
| 17 - அனுராதபுரம் | 8,545 |
| 18 - பொலன்னறுவை | 3,739 |
| 19 - பதுளை | 4,958 |
| 20 - மொணராகலை | 3,946 |
| 21 - இரத்தினபுரி | 9,701 |
| 22 - கேகாலை | 5,410 |
| மொத்தம் | **142,537** |

- அனைத்து தேருநர் இடாப்புக்களையும் அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் நிகழ்காலத்தில் செல்லுபடியாகும் தேருநர் இடாப்பின் வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அரசியலமைப்பின் 97 மற்றும் 98 உறுப்புரைக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| **தேர்தல் மாவட்டத்தின் பெயர்** | **ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட முடியுமான உறுப்பினர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| 01 - கொழும்பு | 19 |
| 02 - கம்பஹா | 18 |
| 03 - களுத்துறை | 10 |
| 04 - கண்டி | 12 |
| 05 - மாத்தளை | 5 |
| 06 - நுவரெலியா | 8 |
| 07 - காலி | 9 |
| 08 - மாத்தறை | 7 |
| 09 - அம்பாந்தோட்டை | 7 |
| 10 - யாழ்ப்பாணம் | 7 |

| | |
|---|---|
| 11 - வன்னி | 6 |
| 12 - மட்டக்களப்பு | 5 |
| 13 - திகாமடுல்ல | 7 |
| 14 - திருகோணமலை | 4 |
| 15 - குருநாகல் | 15 |
| 16 - புத்தளம் | 8 |
| 17 - அனுராதபுரம் | 9 |
| 18 - பொலன்னறுவை | 5 |
| 19 - பதுளை | 9 |
| 20 - மொணராகலை | 6 |
| 21 - இரத்தினபுரி | 11 |
| 22 - கேகாலை | 9 |
| மொத்தம் | **196** |

## 11. 2022 (1) குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல்.

- தேருநர்களை பதிவு செய்தல் (திருத்த) சட்டத்திற்கமைய 2022 பெப்ருவரி 01 முதல் 2022 மே மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் 18 வயதைப் பூர்த்தி செய்யும் ஆட்கள் உள்ளடங்கிய குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல் வேண்டும்.
- இந்த குறைநிரப்பு இடாப்புடன் தொடர்பான கணக்கெடுப்பு அலுவல்கள் 2022.02.01 ஆம் திகதி பிரதான இடாப்பு தொடர்பான கணக்கெடுப்பு அலுவல்களுடன் இணையான வகையில் மேற்கொள்ளப்பட்டதுடன், மேலே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் கணக்கெடுப்பின்போது ஏற்பட்ட சிரமங்கள் மற்றும் அதற்காகப் பின்பற்றிய நடைமுறை இந்த இடாப்பை தயாரிப்பதற்கும் பின்பற்றப்பட்டது. குறைநிரப்பு இடாப்பை காட்சிப்படுத்தல், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை சமர்ப்பித்தல் சம்பந்தமாக இலக்கம் : 2287/11 மற்றும் 2022.07.05 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் மற்றும் செய்திப் பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன.
- மேலே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் இந்த குறைநிரப்பு இடாப்பு தயாரித்தல் திட்டமிடப்பட்ட விதம் மற்றும் 2022.09.30 ஆம் திகதியாகும்போது நடைமுறைப்படுத்திய விதம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| செயற்பாடு | செயற்படுத்திய விதம் | நடைமுறைப்படுத்திய விதம் |
|---|---|---|
| குறைநிரப்பு இடாப்பை காட்சிப்படுத்தல் | 2022.05.02 - 2022.05.11 | 2022.07.05 - 2022.07.14 |
| உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் | 2022.05.02 - 2022.05.11 | 2022.07.05 - 2022.07.14 |
| கிடைக்கப்பெற்ற உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் பட்டியலை காட்சிப்படுத்த வேண்டிய திகதி | 2022.05.17 | 2022.07.19 |
| உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான ஆட்சேபனைகளை முன்வைக்க முடியுமான இறுதித் திகதி | 2022.05.23 | 2022.07.25 |

- பல சந்தர்ப்பங்களில் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் இந்தக் காலப் பகுதியினுள் 18 வயதைப் பூர்த்தி செய்துள்ள ஆட்கள் பற்றிய விபரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், அந்த விபரங்களை மாவட்ட பிரதி / உதவி தேர்தல்கள் ஆணையாளர்களூடாக கிராம அலுவலர்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது தவிர அவ்வாறான ஒவ்வொரு ஆட்களுக்கும் தனிப்பட்ட வகையில் அவர்களுடைய வீடுகளுக்கு பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது.

- 2022.09.30 ஆம் திகதியாகும்போது அநேகமான உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன், மேற்குறிப்பிடப்பட்ட பந்தியின் அறிவித்தலுக்கமைய வாக்காளர்களை பதிவு செய்தலுடன் தொடர்பான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட வருகின்றது. இந்த குறைநிரப்பு இடாப்பை 2022.06.15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்துவதற்கு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மேலே விபரிக்கப்பட்ட சிக்கல்கள் காரணமாக மற்றும் உச்சளவு எண்ணிக்கை வாக்காளர்களை குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்த்துக்கொள்ளும் நோக்கில் 2022.11.08 ஆம் திகதி குறைநிரப்பு இடாப்பை அத்தாட்சிப்படுத்துவதற்கு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 12. 2022 (2) குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல்.

- தேருநர்களை பதிவு செய்தல் (திருத்த) சட்டத்திற்கமைய 2022 யூன் 01 முதல் 2022 செப்தெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் 18 வயதைப் பூர்த்தி செய்யும் ஆட்கள் உள்ளடங்கிய குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல் வேண்டும்.

- இந்த குறைநிரப்பு இடாப்புடன் தொடர்பான கணக்கெடுப்பு அலுவல்கள் 2022.02.01 ஆம் திகதி பிரதான இடாப்பு தொடர்பான கணக்கெடுப்பு அலுவல்களுடன் இணையான வகையில் மேற்கொள்ளப்பட்டதுடன், மேலே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் கணக்கெடுப்பின்போது ஏற்பட்ட சிரமங்கள் மற்றும் அதற்காகப் பின்பற்றிய நடைமுறை இந்த இடாப்பை தயாரிப்பதற்கும் பின்பற்றப்பட்டது. குறைநிரப்பு இடாப்பை காட்சிப்படுத்தல், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை சமர்ப்பித்தல் சம்பந்தமாக இலக்கம்: 2295/12 மற்றும் 2022.08.31 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் மற்றும் செய்திப் பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன.

- மேலே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் இந்த குறைநிரப்பு இடாப்பு தயாரித்தல் திட்டமிடப்பட்ட விதம் மற்றும் 2022.09.30 ஆம் திகதியாகும்போது நடைமுறைப்படுத்திய விதம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| செயற்பாடு | செயற்படுத்திய விதம் | நடைமுறைப்படுத்திய விதம் |
|---|---|---|
| குறைநிரப்பு இடாப்பை காட்சிப்படுத்தல் | 2022.07.05 - 2022.07.14 | 2022.08.31 - 2022.09.09 |
| உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் | 2022.07.05 - 2022.07.14 | 2022.08.31 - 2022.09.09 |
| கிடைக்கப்பெற்ற உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் பட்டியலை காட்சிப்படுத்த வேண்டிய திகதி | 2022.07.19 | 2022.09.16 |
| உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான ஆட்சேபனைகளை முன்வைக்க முடியுமான இறுதித் திகதி | 2022.07.25 | 2022.09.22 |

- பல சந்தர்ப்பங்களில் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் இந்தக் காலப் பகுதியினுள் 18 வயதைப் பூர்த்தி செய்துள்ள ஆட்கள் பற்றிய விபரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், அந்த விபரங்களை மாவட்ட பிரதி / உதவி தேர்தல்கள் ஆணையாளர்களூடாக கிராம அலுவலர்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது தவிர அவ்வாறான ஒவ்வொரு ஆட்களுக்கும் தனிப்பட்ட வகையில் அவர்களுடைய வீடுகளுக்கு பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது.

- 2022.09.30 ஆம் திகதியாகும்போது அநேகமான உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன், மேற்குறிப்பிடப்பட்ட பந்தியின் அறிவித்தலுக்கமைய வாக்காளர்களை பதிவு செய்தலுடன் தொடர்பான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட வருகின்றது. இந்த குறைநிரப்பு இடாப்பை 2022.10.01ஆம் திகதி அத்தாட்சிப்படுத்துவதற்கு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மேலே விபரிக்கப்பட்ட சிக்கல்கள் காரணமாக மற்றும் உச்சளவு எண்ணிக்கை வாக்காளர்களை குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்த்துக்கொள்ளும் நோக்கில் 2022.11.15 ஆம் திகதி குறைநிரப்பு இடாப்பை அத்தாட்சிப்படுத்துவதற்கு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 13. 2022 (3) 2023(1), 2023(2) மற்றும் 2023(3) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களை தயாரித்தல்

2022.10.01 முதல் 2023.01.30 வரையான காலப் பகுதியுடன் தொடர்பாக தயாரிக்கப்பட வேண்டிய 2022 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்பு 2023.02.01 முதல் 2023.05.31 வரையான காலப் பகுதியுடன் தொடர்பாக தயாரிக்கப்பட வேண்டிய 2023 (1) குறைநிரப்பு தேருநர் இடாப்பு 2023.06.01 முதல் 2023.09.30 வரையான காலப் பகுதியுடன் தொடர்பாக தயாரிக்கப்பட வேண்டிய 2023(2) குறைநிரப்பு தேருநர் இடாப்பு மற்றும் 2023.10.01 முதல்

2024.01.31 வரையான காலப் பகுதியுடன் தொடர்பாக தயாரிக்கப்பட வேண்டிய 2023(3) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களுக்கு தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் ஆட்கள் தொடர்பான விபரங்களை 2022 அம் ஆண்டிற்கான தேருநர் இடாப்புடன் இணையான வகையில் சேகரிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய, மேற்குறிப்பிடப்பட்ட காலப் பகுதியுடன் தொடர்புடைய வகையில் கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களை பட்டியல்படுத்தும் பணிகள் 2022.09.30 ஆம் திகதியாகும்போது மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்த குறைநிரப்பு இடாப்புக்களைக் காட்சிப்படுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

## 14. பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்.

- இலக்கம் 18 பொலன்னறுவை தேர்தல் மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. அமரகீர்த்தி அதுகோரள அவர்கள் இறப்பெய்தியமையின் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்கு திரு. எஸ்.ஜகத் சமரவிக்ரம அவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் அது சம்பந்தமாக இலக்கம்: 2280/22 மற்றும் 2022.05.17 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசித்தப்படுத்தப்பட்டது.

- ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியினால் அரசியலமைப்பின் 99 எ உறுப்புரையின் கீழ் (தேசியப் பட்டியல்) தெரிவு செய்யப்பட்ட திரு. பசில் ரோஹன ராஜபக்ஷ அவர்கள் கேட்டு விலகியமை காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்கு திரு.குலப்பு ஆரச்சிகே தொன் தம்மிக்க பெரேரா அவர்கள் தெரிவு செய்துகொள்ளப்பட்டதுடன் அது சம்பந்தமாக இலக்கம்: 2283/39 மற்றும் 2022.06.10 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசித்தப்படுத்தப்பட்டது.

- ஐக்கிய தேசியக் கட்சியினால் அரசியலமைப்பின் 99 அ உறுப்புரையின் கீழ் (தேசியப் பட்டியல்) தெரிவு செய்யப்பட்ட திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டமையின் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்கு திரு. வஜிர அபேவர்தன அவர்கள் தெரிவு செய்துகொள்ளப்பட்டதுடன் அது சம்பந்தமாக இலக்கம்: 2289/42 மற்றும் 2022.07.22 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசித்தப்படுத்தப்பட்டது.

## 15. மாகாண சபைத் தேர்தல்

தற்போது அனைத்து மாகாண சபைகளதும் பதவிக் காலம் முடிவடைந்துள்ளதுடன் இறுதியாக நடாத்தப்பட்ட ஊவா மாகாண சபையின் பதவிக் காலம் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்துடன் முடிவடைந்தது. 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளல் மற்றும் 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க (திருத்தச்) சட்டம் ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ளபோதும், வட்டார

அடிப்படையில் மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதற்காக மாகாண சபை வட்டாரங்களின் எல்லைகளை நிர்ணயித்து தயாரிக்கப்பட்ட எல்லை நிர்ணய அறிக்கை பாராளுமன்றத்தில் ஏற்றங்கீகரிக்கப்படாமை காரணமாக இவ்வாண்டிலும் இதுவரை மாகாண சபை தேர்தலை நடாத்துவதற்கான வாய்ப்பு உருவாகவில்லை.

அனைத்து மாகாண சபைகளும் ஆளுநர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குவதனால், மாகாண சபை உறுப்பினர் பதவி வெற்றிடங்கள் ஆணைக்குழுவினால் நிரப்பப்படவில்லை.

## 16. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள்

2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலின் பிரகாரம் குறித்த உள்ளூர் அதிகாரசபைகளின் பதவிக் காலம் 2022.03.20 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. 1987 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 10(2)(ஆ) பிரிவும், 1987 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 10(2)(ஆ) பிரிவும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 592)(ஆ) பிரிவும் பிரகாரம் விடயப்பொறுப்பு அமைச்சரினால் ஓராண்டு காலத்திற்கு பதவிக்காலம் நீடிக்கப்பட்டதன் காரணமாக 2023 மார்ச் மாதம் 19 ஆம் திகதி வரை இந்த உள்ளூர் அதிகாரசபை உறுப்பினர்களின் பதவிக் காலம் உள்ளது.

2010.10.11 அன்று நடைபெற்ற எல்பிட்டிய பிரதேச சபையின் பதவிக் காலம், 2023 நவம்பர் மாதம் 04 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

உள்ளூர் அதிகார சபை உறுப்பினர்கள் இறப்பெய்துதல், கேட்டு விலகுதல், கட்சி அங்கத்துவத்தை இழத்தல், வரவுசெலவுத் திட்டம் தோல்வியடைதல், பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுதல் ஆகிய காரணங்களின் பேரில் உறுப்பினர் பதவிகள் வெற்றிடமானதுடன் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான சட்ட ரீதியான செயன்முறை உள்ளூர் அதிகார சபைகள் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதற்கிணங்க, 2022 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டு முதல் 2022 மூன்றாவது காலாண்டாகும்போது 178 உள்ளூர் அதிகாரசபை உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான சட்ட ரீதியான செயன்முறை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு:

| வெற்றிடம் ஏற்படுவதற்கான காரணம் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஆளுநரினால் நீக்கப்படல் | 3 |
| அனுமதி பெறாமல் 3 மாதங்கள் சபை அமர்வுகளில் கலந்து கொள்ளாமை. | 12 |
| கேட்டு விலகுதல் | 67 |
| கட்சி அங்கத்துவம் இழக்கப்படல் | 64 |
| இறப்பெய்துதல் | 30 |


## 17. தகவல் தொழில்நுட்பப் பாவனை

தகவல் தொழில்நுட்பப் பாவனையில் நிறுவனத்தின் பணிகளை நவீனமயப்படுத்தலுக்கு உட்படுத்துவதன் மூலம் வினைத்திறனாகவும் பயன்கூர் விதத்திலும் குறித்த தரப்பினர்களுக்கு தேவைப்படும் தகவல் தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதற்கும், புதிய தகவல் தொழில்நுட்பத் தேவைகளை ஆராய்தலும் திட்டமிடலும், கருத்திட்ட

அறிக்கைகளைத் தயாரித்தலும் அனுமதித்த தகவல் தொழில்நுட்பக் கருத்திட்டங்களை நிறுவுதலும் பராமரித்தலும் உள்ளிட்ட பின்வரும் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இப்பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது:

- 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டத்தினால் 18 வயதை எய்தியவுடன் பிரசைகளை தேருநர் இடாப்பில் பதிவுசெய்வதற்கு வாய்ப்பளிப்பதற்கு இணையாக இளம் பிரஜைகளை தேருநர் இடாப்பில் பதிவுசெய்வதற்குத் தேவையான புதிய கணினிச் செய்நிரல்களை உருவாக்குவதன் மூலம் குறைநிரப்பு தேருநர் இடாப்புகளைத் தயாரிப்பதை வினைத்திறனுடன் மேற்கொள்ளலும், இளம் பிரஜைகளுக்கு மிக வசதியாகவும் எளிதாகவும் தேருநர் இடாப்பில் பதிவுசெய்வதற்காக விண்ணப்பிப்பதற்கு மிகவும் எளிதாக இயங்கலை முறையில் பயன்படுத்தக்கூடிய இ-சேவையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

  இச்செயற்பாடுகளை தேர்தல் ஆணைக்குழுவின் விசேட ஆய்வும் அறிவுறுத்தல்களும் பேரில் ஆரம்பித்து அமுல்படுத்தப்பட்டவை என்பதை குறிப்பிட வேண்டும்.




- தேர்தல் ஆணைக்குழுவின் இ-சேவை முறைமையை முன்னேற்றுவதன் மூலம் பொதுமக்கள் உள்ளிட்ட தேர்தல் ஆணைக்குழுவின் தரப்புகளுக்கு மிகவும் வசதியாக தமது சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான வசதிகள் அளிக்கப்படுவதுடன், இந்த இ-சேவை வேலைத்திட்டத்தினால் 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதளவில் சுமார் 25 இலட்சம் பேர் தமது சேவைகளை தேர்தல் அலுவலகத்திற்கு வருகை தராமலே பெற்றுக்கொண்டுள்ளனர். அதன் அடிப்படையில் தேர்தல் அலுவலகத்திற்கு வருகை தராமலே தமக்கு அவசியமான சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.
- தேருநர் இடாப்பில் பதிவுசெய்வதற்கு கிராம அலுவலர் அலுவலகங்கள், தேர்தல்கள் அலுவலகங்களுக்குச் செல்வதற்குப் பதிலாக இயங்கலை மூலம் இ-சேவையொன்றின் ஊடாக தேருநர் இடாப்பில் பதிவுசெய்வதற்காக விண்ணப்பிப்பதற்கு பொதுமக்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் முதல் தடவையாக பதிவுசெய்வதற்கு விண்ணப்பித்தல், தேருநர் இடாப்பில்

உட்படுத்தப்பட்டுள்ள தரவுகளிலுள்ள தவறுகளை சீர்செய்வதற்கு விண்ணப்பித்தல், வதிவிடத்தில் பெயர் உட்சேர்க்கப்படவில்லையெனில், அதற்கான உரிமைக் கோரிக்கையை இயங்கலை முறையில் மிகவும் வசதியாக அனுப்புவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

- பொதுமக்களுக்கு நாளாந்தப் பணிகளில் தமது வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கு தேருநர் இடாப்பின் பதிவுத் தகவல்களை கூற்றொன்றாக இயங்கலை ஊடாக பெற்று சமர்ப்பிப்பதற்கான வசதிகளை வழங்க வாய்ப்பளிக்கப்பட்டது. இக்கூற்றை சூட்டிகையான சான்றிதழொன்றாக QR குறியீட்டுடன் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், அக்கூற்றை ஒரு நிறுவனத்திற்கு சமர்ப்பித்த பின் அதன் பாவனை மற்றும் சரிபார்ப்பை எளிதில் மேற்கொள்ள முடியும்.


DOCUMENT ID : 20221117116
EC/SOER
மැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
ELECTION COMMISSION
வாக்காளர் பதிவுகளின் வெளிப்பாடு STATEMENT OF ELECTORAL REGISTRATION
வாக்காளரின் பெயர் / Name of the Elector
முகவரி / Address
NIC No
பாலினம் / Gender
ஆண்
ஆண்டு / Year
2021
Election District
3 - களுத்துறை
வாக்கெடுப்புப் பிரிவு / Polling Division
ஏ - அகலவத்தை
Polling District No
96
Serial No
தேர்தல் ஆணையாளர் நாயகம்
Commissioner General of Elections
2022/10/04
Verification Portal
https://eservices.elections.gov.lk
Election Commission, 02, Sarana Mawatha, Rajagiriya. https://www.elections.gov.lk


- பாடசாலைகள், வலய மற்றும் வட்டாரக் கல்வி அலுவலகங்கள், ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம் உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்கு தேருநர் இடாப்புக்களை சரிபார்த்தல் வசதிகளை இ-சேவையொன்றாக இயங்கலை ஊடாக வழங்குவதன் மூலம் குறித்த அரச நிறுவனங்களில் பணிகளை எளிதுபடுத்த முடிந்த, பொதுமக்கள் பெற்றுக்கொள்ளும் சூட்டிகையான தேருநர் பதிவுக் கூற்றுக்களை யாதேமோர் அரச நிறுவனத்திற்கு சமர்ப்பித்த பின்னர் அதனை சரிபார்த்துக்கொள்ளும் வசதிகள் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதுடன், தற்போது பெரும் எண்ணிக்கையான அரச நிறுவனங்கள் அவ்வசதியைப் பெற்றுக் கொண்டுள்ளன.
- தேர்தல் இ-சேவைகளை மிகவும் வசதியாக பயன்படுத்துவதற்கு வைபர், வற்ஸ்எப், இமோ, ரெலிகிறேம், சிக்னல் ஆகிய தொடர்பாடல் செயலிகள் மூலம் தொழில்நுட்பத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய சூட்டிகையான உதவிச் சேவையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் ஊடாக பொதுமக்கள் ஊடாக இ-சேவையைப் பயன்படுத்தும் நபர்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்கு வசதியாக வாய்ப்புக் கிடைக்கின்றது. பொதுமக்களின் கணினி அறிவு குறைவு இ-சேவைகளைப் பயன்படுத்துவதற்கு ஒரு பிரச்சினையாக அமைகின்றபோதும், இச்சேவையின் மூலம் தேவையான ஒதவியைப் பெற்றுக்கொண்டு எந்தவொரு கணினி அறிவும் இல்லாத நபரொருவருகும் இ-சேவைகளைப் பயன்படுத்தி தமது சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புள்ளது.

- தேர்தல் செயன்முறை பற்றி தேருநர்களதும் பிரஜைகளதும் அறிவை விருத்தி செய்வதற்கு இயங்கலை மூலமான பல்லூடக கல்வி உபகரணமொன்றாக *https://vee.elections.gov.lk* என்ற தேர்தல் கல்வி மற்றும் பங்களிப்பு இணையத்தளம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் தேர்தலுடன் சம்பந்தப்பட்ட தலைப்புக்கள் பற்றிய அறிவை விருத்திசெய்வதற்கு பொதுமக்களுக்கு வாய்ப்பு கிடைப்பதுடன், தேர்தல் பணிகள் பற்றி தமக்குள்ள அறிவையும் அனுபவங்களையும் பரிமாறிக் கொள்வதற்கும் வாய்ப்பு உருவாகின்றது.
- 2022 ஆம் ஆண்டுக்குரிய தேருநர் இடாப்பு மீளாய்வு மற்றும் குறைநிரப்புப் பட்டியல்களைத் தயாரிக்கும் அனைத்து தொழில்நுட்ப அலுவல்களையும் மேற்கொள்வதுடன், பயனர் வசதியையும் கடதாசிப் பாவனையையும் குறைப்பதற்கான புதிய பொழிப்பு வரைவு தேருநர் இடாப்புக்களைத் தயாரித்தல் போன்ற இன்றைய பொருளாதார நேருக்கடிக்கு மத்தியில் ஏற்பட்ட வளப் பற்றாக்குறைகளை தவிர்த்துக்கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இற்றைப்படுத்திய கணினிச் செய்நிரல்கள் உருவாக்கப்பட்டன.
- உள்ளுர் அதிகாரசபைகள் தேர்தல்களுக்காக பயன்படுத்துவதற்கு வேட்பு மனுக்களை முகாமைசெய்யும் புதிய கணினிச் செய்நிரல் தயாரிக்கப்பட்டது. இது தவிர தேர்தல் முடிவுகளைத் தயாரிக்கும் கணினிச் செய்நிரலை முன்னேற்றுதல், இயங்கலை மூலமான அஞ்சல் வாக்கு விண்ணப்பித்தல் இ-சேவையை முன்னேற்றுதல், மையப்படுத்திய வாக்கெடுப்பு நிலைய கண்காணிப்பு முறைமையை முன்னேற்றுதல் ஆகிய தேர்தல்களின்போது பயன்படுத்தப்படும் கணினிச் செய்நிரல்கள் விருத்தி செய்யப்பட்டன.
- கிராம அலுவலர்களுக்கான தேர்தல் ஆணைக்குழுவின் இ-சேவையை அறிமுகப்படுத்தல், பரீட்சார்த்த மட்டத்தில் அமுல்படுத்தப்பட்டது.
- தேர்தல் பணியாட்குழுக்களுக்கு புதிய தேர்தல் தொழில்நுட்ப முறைமைகள் பற்றி பயிற்சியளிக்கப்பட்டது. தேர்தல் ஆணைக்குழுவின் பதவிநிலை அலுவலர்கள், மாவட்ட பிரதி மற்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள், மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களின் தகவல் தொழில்நுட்ப உதவித் அலுவலர்கள், பிரதான பயனர் அலுவலர்கள் ஆகியோரை முக்கியமாக பயிற்றுவிப்பதுடன், அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இது தவிர அலுவலகப் பணியாளர் சேவை, பாதுகாப்பு அலுவலர்கள், சாரதி சேவை உள்ளிட்ட தேர்தல் ஆணைக்குழுவின் முழுதுமளாவிய பணியாட்குழுவினரை உள்ளடக்கும் தேர்தல் தொழில்நுட்பங்களும் இ-சேவைகளும் பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.
- கல்வி அமைச்சுடன் இணைந்து பாடசாலை மட்டத்தில் பாடசாலை மாணவர்களை தேருநர் இடாப்பில் பதிவுசெய்துகொள்வதற்கு மிகவும் வசதியான தொழில்நுட்ப முறையொன்றை அறிமுகப்படுத்தல். அதனை அமுல்படுத்துவதற்கான பூர்வாங்கப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன்மூலம் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை பாடவிதானததில் அரசியல் விஞ்ஞானம், குடியுரிமைக் கல்வி மூலம் உள்ளடக்கப்படும் பாடக் குறிப்புகளும் இயங்கலை மூலம் இ-சேவையைப் பயன்படுத்தி தேருநர் இடாப்பில் பதிவுசெய்வதற்கு வாய்ப்பு கிடைத்தமையால், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்ட்நப பாடத்தின் கீழ் கல்வி கற்கும் இ-அரச எண்ணக்கருவை சிறப்பாக அமுல்படுத்துவது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாவனை, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பிரயோகம் போன்ற பாடக் குறிப்புகளை பிரயோக ரீதியாக கற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு கிடைக்கின்றது. இதன் காரணமாக, ஜனநாயகத்தை மதிக்கும் ஒரு பிரஜையாவதற்கும், தொழில்நுட்ப அடிப்படையிலான வருங்கால உலகில் வெற்றிகரமாக உறுதிப்பாடடையும் பின்னணியை வகுத்துக்கொள்வதற்கும் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கும்.

- மையப்படுத்திய தேர்தல் கண்காணிப்பு முறைமையின் ஊடாக பெற்றுக்கொண்ட தகவல்களின் துணையுடன் தொலைபேசி சமிக்ஞைகள் இன்றி பிரதேசங்கள் பற்றிய தகவல்கள், கிராமத்திற்கு தொடர்பாடல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு பயன்படுத்த தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்த முடிந்தது. அதன் ஊடாக தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிகளில் உதவி தொலைபேசி சமிக்ஞைகள் இன்றிய பிரதேசங்களுக்கு தொலைபேசி சமிக்ஞைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உதவ முடிந்தது.



- தேர்தலொன்றின்போது வாக்கெடுப்பு நிலையத்தில் பயன்படுத்தப்படும் அச்சிட்ட தேருநர் இடாப்புக்குப் பதிலாக இலத்திரனியல் தேருநர் இடாப்பைப் பயன்படுத்துவதற்கு இ-வாக்கெடுப்புப் புத்தகத்தை (ePoll Book) தயாரிக்கும் பூர்வாங்கப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டன.




- தாபன நடவடிக்கைகளை வினைத்திறனுடையதாக மாற்றுவதற்கு தரவுகளை அடிப்படையாகக்கொண்டு தீர்மானமெடுப்பதற்கும், எதிர்கால முற்கோள்களுக்காக தரவுகளைக் கையாள்வதற்கும், செயன்முறைகளை அவதானிப்பதற்கும் வசதியான விதத்தில் தரவுப் பலகைகள் (Dash Board) தயாரிக்கப்பட்டன. அதன்மூலம் தரவு அவதானிப்பு, எதிர்கால முற்கோள் மற்றும் தரவு முகாமைத்துவம் என்பன எளிதடைந்தது. அதன்மூலம் நிறுவனத்தின் நடவடிக்கைகளை எளிதாக மேற்கொள்ள முடிந்தது.

- **தேருநர் இடாப்புச் செயன்முறைக்காக தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல்**
  முதலாம் ஆண்டில் பாடசாலை மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் செயன்முறைக்கு வலய/ வட்டார கல்வி அலுவலகங்களுக்கு இலவசமாகவும் பாடசாலைகளுக்கு உரிய கட்டணங்களை அறவிட்டும் இ-சேவையொன்றின் மூலம் வதிவிட விபரங்களை வழங்குவதற்கான சேவை அமுல்படுத்தப்பட்டது.


- **தேருநர் இடாப்பு சம்பந்தமாக தொலைபேசி உதவிச் சேவையை அமுல்படுத்தல்**
  தேருநர் இடாப்பில் பெயர்ப்பதிவை பரீட்சித்தல்/தேருநர் இடாப்பில் பெயரை உட்படுத்துவதற்கு விண்ணப்பித்தல், வேறு மீளாய்வு நடவடிக்கைகளுக்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் ஆகியவற்றுக்கான தொலைபேசி உதவிச் சேவை 2022.06.20 ஆம் திகதி முதல் 2022.07.30 ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட்டது.

- **தேருநர் இடாப்பு சம்பந்தமாக தொலைபேசி உதவிச் சேவையை அமுல்படுத்தல்**
  தேருநர் இடாப்பு மீளாய்வுப் பணி ஆரம்பிக்கப்பட்டவுடன் டயலொக், மொபிரெல், எயார்ரெல், ஹச் ஆகிய கையடக்க மற்றும் சிடிஎம்ஏ தொலைபேசிப் பாவனையாளர்களுக்கு 'Elections' என்ற தலைப்பின் கீழ் பின்வரும் குறுந் தகவல்களை பணம் அறவிடாமல் 2022.02.01 ஆம் திகதி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பெப்ரவரி 01 குறுந்தகவல்




ஜூன் 20 குறுந்தகவல்




## 18. விசேட கருத்திட்டங்கள்

அரசியலமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சர்வஜன வாக்குரிமையைப் பாதுகாப்பதற்கான செயன்முறையுடன் நேரடி மற்றும் மறைமுக தொடர்புடைய அல்லது சர்வஜன வாக்குரிமையின் அடிப்படையில் அனைவரையும் சமமாகக் கருதும் தேவை குறித்து பிரஜைகளை அறிவுறுத்துவதற்கான கருத்திட்டத்திற்கு பயன்படுத்திக் கொள்ளக்கூடிய சர்வதேச அளவில் கொண்டாடப்படும் விசேடமாக பெயர்குறிக்கப்பட்ட தினங்களைக் கொண்டாடும் 26 நிகழ்ச்சித்திட்டங்கள் கடந்த ஆண்டுகளில் இடம்பிடித்தன.

இவ்வாண்டில் இந்த 26 நிகழ்ச்சித்திட்டங்களில் நேரடியாக சர்வஜன வாக்குரிமையைப் பாதுகாக்கும் செயன்முறையுடன் சம்பந்தப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட 6 நினைவு தினங்களின் நிகழ்ச்சித்திட்டங்களை மாத்திரம் கொண்டாடுவது உகந்ததென தேர்தல் ஆணைக்குழு முடிவு செய்தது.

அதேபோல், ஆண்டில் இந்த விடயங்களுக்குரிய நிரல் அமைச்சு அல்லது திணைக்களங்கள் மூலம் மேற்குறித்த நினைவு தினங்களைக் குறிக்குமுகமாக ஒழுங்கு செய்யப்படும் வைபவங்களுக்கு அல்லது விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உதவுவதன் மூலமும், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் வளப் பங்களிப்பை வழங்கி குறித்த நோக்கங்களை அடைந்துகொள்வதற்கும் முன்மொழியப்பட்டது.

### 18.1 வாக்காளர் தின நினைவு வைபவம்

18 வயதை எய்திய இளைஞர்களுக்கு குறைநிரப்பு இடாப்பொன்றின் ஊடாக வாக்குரிமையை வழங்குதல் மற்றும் யூன் 01 ஆம் திகதி கொண்டாடப்பட்ட வாக்காளர் தினம் பெப்ரவரி 01 ஆந் திகதிக்கு மாற்றப்படல் ஆகிய விடயங்கள் காரணமாக 'உங்களது வாக்கு நாட்டின் எதிர்காலம்'' என்ற தொனிப்பொருளில் வாக்காளர் தினக் கொண்டாட்டம் அதிமேதகு ஜனாதிபதி, பிரதம அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், இளைஞர் பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள், வலிமையிழந்தோர் அமைப்புக்கள், மகளிர் அமைப்புக்கள், கண்காணிப்பு அமைப்புக்களின் பிரதிநிதிகள், தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்கள், இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட சுமார் 400 விருந்தினர்களின் பங்கேற்புடன் மார்ச் மாதம் 11 ஆம் திகதி கொழும்பு கலதாரி ஹோட்டலில் வைபவமொன்று இடம்பெற்றது. இவ்வைபவத்தில் தேர்தல் முறையில் உத்தேச திருத்தங்கள் பற்றி தேர்தல் ஆணைக்குழுவின் அபிப்பிராயம் மக்கள் முன்வைக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. பொதுமக்களின் வாக்குரிமை மீது நேரடியாக தாக்கம்செலுத்தும் விடயங்கள், மாற்றங்கள், உத்தேச திருத்தங்கள் பற்றி பரந்தளவில் மக்களின் கவனயீர்ப்பைப் பெற்றுக்கொள்ளல் ஆகியன இவ்வைபவத்தின் நோக்கங்களாகும்.



### 18.2 சர்வதேச ஜனநாயக தின நினைவு வைபவம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினது அரசியலமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மக்களின் இறைமையை மையமாகக்கொண்ட வாக்குரிமையை சுதந்திரமாகவும் நியாயமான முறையிலும் பிரயோகிப்பதற்கு வாய்ப்பளித்தல் தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பாக இருப்பதால், அது சம்பந்தமாக விழிப்புணர்வூட்டுவதற்காக 2022 ஆம் ஆண்டில் சர்வதேச ஜனநாயக தின நினைவு தினத்தை முன்னிட்டு அனைத்து பங்கீடுபாட்டாளர் குழுக்களதும் பங்கேற்புடன் அவ்விடயம் சம்பந்தமான சான்றோர் கலந்துரையாடலொன்று தேர்தல் முறைமைகள் பற்றிய சர்வதேச நிறுவனத்தினதும் (IFES) தொழில்நுட்ப ரீதியான ஒத்துழைப்புடன் 2022 செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்றது.



### 18.3 அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை ஊக்குவித்தல்/ பெண்களை வலுவூட்டுதல்

- தேர்தல் ஆணைக்குழுவின் மூலோபாயத் திட்டத்திற்கிணங்க, 2022 மார்ச் மாதம் 08 ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஜனநாயகத்தின் அடிப்படை அம்சங்கள் பற்றி மாவட்ட வாரியாக அரசியலில் ஈடுபடும் பெண்கள்/ சமுதாய அடிப்படையிலான அமைப்புகளின் அங்கத்தவர்கள்/ அரசாங்க அலுவலர்கள் பின்வருமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

| மாவட்டம் | பங்குபற்றியோரின் எண்ணிக்கை |
|---|---|
| மாத்தளை | 50 |
| வவுனியா | 30 |
| முல்லைத்தீவு | 25 |
| அம்பாறை | 55 |
| புத்தளம் | 20 |
| பொலன்னறுவை | 136 |
| கேகாலை | 30 |

- "மாற்றத்திற்கான பாதை' என்ற தொனிப்பொருளில் ஜனநாயகம் குறித்து மகளிர் சிவில் செயற்பாட்டாளர்களை அறிவுறுத்துவதற்கான இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் சிங்கள, தமிழ் மொழிகளில் நடாத்தப்பட்டன. பெண் சிவில் செயற்பாட்டாளர்கள் 66 பேரின் பங்கேற்புடன் சிங்கள மொழிமூல நிகழ்ச்சித்திட்டமொன்று 2022.07.22 ஆம் திகதியும், பெண் சிவில் செயற்பாட்டாளர்கள் 44 பேரின் பங்கேற்புடன் 2022.07.29 ஆம்

திகதி தமிழ் மொழிமூல நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடாத்தப்பட்டது. பெவ்ரல் அமைப்புடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சி தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரின் தலைமையில் தேர்தல்கள் செயலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.










**18.4 தேர்தல் செயன்முறைக்கு வலிமையிழந்த பிரஜைகளின் பங்கேற்பை பெற்றுக்கொள்ளல்**

- **இடையீட்டு தேர்தல் செயன்முறையொன்றை அடைந்துகொள்ளும் பொருட்டு தேர்தல் ஆணைக்குழு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி MyRight நிறுவனத்தின் பிரதிநிதிகளை அறிவுறுத்துதல்**

  வலிமையிழந்த ஆட்களின் ஒழுங்கமைப்புகளின் ஒன்றிணைந்த முன்னணியின் (DOJF) கோரிக்கைப்படி MyRight நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழுவுடன் இடையீட்டுத் தேர்தல் செயன்முறையொன்றுக்காக தேர்தல் ஆணைக்குழு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி அறிவுறுத்துவதற்கான ஒரு நிகழ்ச்சித்திட்டம் தலைமை அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் 202.01.19 ஆம் திகதி நடாத்தப்பட்டது. இந்நிகழ்விற்கு சுவீடன் பிரதிநிதி வரைக் மற்றும் MyRight நிறுவனத்தின் நாட்டுக்கான ஒருங்கிணைப்பாளர், வலிமையிழந்த ஆட்களின் ஒழுங்கமைப்புகளின் ஒன்றிணைந்த முன்னணியின் பிரதிநிதிகள் குழுவையும் தேர்தல் ஆணைக்குழுவையும் பிரதிநிதித்துவப்படுத்தி மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (உள்ளூராட்சி), பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் (உள்ளூராட்சி), உதவித் தேர்தல்கள் ஆணையாளர் (தேசிய தேர்தல்கள்) ஆகியோர் கலந்து கொண்டனர். தேர்தல் ஆணைக்குழுவினால் வலிமையிழந்த ஆட்களை தேர்தல் செயன்முறையில் பங்கேற்கச் செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றி வெளிநிலைத் திறத்தவர்கள் அறிவுறுத்தப்பட்டிருப்பது இதன் நோக்கமாகும்.

- **வாக்காளர் பதிவு பற்றி விழிப்புலனற்றவர்களை அறிவுறுத்தல்**

  வாக்காளர் தினம் பற்றி அறிவுறுத்துவதற்கு அச்சிட்டப்பட்ட துண்டுப் பிரசுரத்தின் 1,000 பிரதிகள் பிரெயில் மொழியில் அச்சிடப்பட்டது. அதில் 200 பிரதிகள் விழிப்புலனற்ற சிறுவர்கள் கல்வி பயிலும் 12 பாடசாலைகளுக்கு 2022.02.11 ஆம் திகதி பகிர்ந்தளிக்கப்பட்டது. வாக்காளர்களைப் பதிவுசெய்வதன் முக்கியத்துவம் பற்றி பாடசாலைச் சிறார்களை அறிவுறுத்துவது இதன் நோக்கமாகும்.

- **தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு சைகை மொழி பற்றிய ஆரம்பப் பயிற்சியளித்தல்**

  செவிப்புலனற்றவர்களுக்கு வாக்கெடுப்பு நிலையத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுடன் தொடர்பாடல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது ஏற்படும் தடைகளையும் சிரமங்களையும் குறைத்துக்கொள்வதற்காக வாக்கெடுப்பு நிலையங்களில் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு சைகை மொழி பற்றிய ஆரம்பப் பயிற்சியளிப்பதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தது.

அதன் அடிப்படையில், மாவட்டத்திற்கு சில அலுவலர்களை பயிற்றுவிப்பாளர்களாக பயிற்றுவித்து அவர்கள் மூலம் மாவட்ட வாரியாக அலுவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டது. இது சம்பந்தமான பூர்வாங்க கலந்துரையாடல் இலங்கை செவிப்புலனற்றோர் மத்திய சம்மேளனத்தின் (SLCFD) பிரதிநிதிகளுடன் 2022.02.22 ஆம் திகதி நடாத்தப்பட்டது. 25 மாவட்டங்களில் சைகை மொழி பற்றிய அடிப்படை அறிவுள்ள குறைந்தபட்சம் 50 பயிற்சி அலுவலர்களுக்கேனும் பயிற்சியளிப்பது இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

- **தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு சைகை மொழி (Sign Language) பற்றிய ஆரம்பப் பயிற்சியளித்தல்**

விழிப்புலனற்றவர்களுக்கு வாக்கெடுப்பு நிலையததில் தேர்தல் கடமையில் ஈடுபடும் அலுவலர்களுடன் தொடர்பாடலில் ஈடுபடும்போது ஏற்படக்கூடிய தடங்கல்களையும் சிரமங்களையும் குறைத்துக்கொள்வறத்கு வாக்கெடுப்பு நிலையங்களில் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு சைகைமொழி பற்றிய ஆரம்பப் பயிற்சியளிப்பதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தது.

அதன்படி, மாவட்டத்திற்கு அலுவலர்கள் சிலரை பயிற்றுவிப்பாளர்களாக பயிற்றுவித்து அவர்கள் மூலம் மாவட்ட மட்டத்தில் அலுவலர்களுக்கு ஆரம்பப் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டது. இது சம்பந்தமான பூர்வாங்க கலந்துரையாடல் இலங்கை செவிப்புலனற்றோர் மத்திய சம்மேளத்தின் பிரதிநிதிகளுடன் 2022.02.22 ஆம் திகதி நடைபெற்றது. 25 மாவட்டங்களில் சைகை மொழி பற்றிய அடிப்படை அறிவுள்ள குறைந்தபட்சம் 50 பயிற்சி அலுவலர்களுக்கேனும் பயிற்சியளிப்பது இந்நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்பட்டது.

- **வலிமையிழந்த வாக்காளர்கள் வாக்குச்சீட்டில் அடையாளமிடும்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குரிய குறுகிய கால தீர்வு யோசனைகளைத் தயாரித்தல்**

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (பெவ்ரல்) அமைப்பினால் ஒழுங்குசெய்யப்பட்ட இந்நிகழ்ச்சி, 2022.03.31 ஆம் திகதி பொரலஸ்கமுவ ஹெல்ப்-ஏஜ் நிறுவனத்தில் நடைபெற்றது. வலிமையிழந்த ஆள்களின் அமைப்பின் பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். பிரயோக ரீதியாக துரிதமாக அமுல்படுத்தக்கூடிய பிரேரணைகள் சம்பந்தமாக இங்கு கலந்தாலோசிக்கப்பட்டதுடன் பாராளுமன்ற தெரிகுழுவுக்கு இப்பிரேரணைகளைச் சமர்ப்பிக்க பெவ்ரல் அமைப்பு திட்டமிட்டுள்ளது.

- **வலிமையிழந்தோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான பிரயோக ரீதியான தீர்வுகள் குறித்த கலந்தாலோசனை**

வாக்காளர்களைப் பதிவுசெய்தல், வாக்கெடுப்பு நிலையங்களுக்கு பௌதிக ரீதியான உள்பிரவேச வசதிகள் பற்றி 2022 ஆம் ஆண்டில் தேருநர் இடாப்பு மீளாய்வின்போது வலிமையிழந்தோரை உட்படுத்திக்கொள்வதற்காக கண்காணிப்பு அமைப்புக்களை அறிவுறுத்தல், வாக்கெடுப்பு நிலையங்களில் வலிமையிழந்தோரை அடையாளம் காண்பதற்கு அட்டையொன்றை வழங்குதல் பற்றிய கலந்துரையாடல் 2022.04.06 ஆம் திகதி சிவில் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (உள்ளூராட்சி மற்றும் தேசிய தேர்தல்கள்) உடன் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சி பெப்ரல் இயக்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

- **தேர்தல் செயன்முறையின்போது வலிமையிழந்தோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் காணல்**

தேர்தல் ஆணைக்குழுவினதும் பங்களிப்புடன் கண்டி, மாத்தளை, கேகாலை, குருணாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களின் வலிமையிழந்தோர் தேர்தல் செயன்முறையின்போது

எதிர்நோக்கும் பிரச்சினைகளும் மாற்று யோசனைகளும் குறித்து கருத்தறிவதற்கும் வலிமையிழந்தோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் காணல், மாற்றுத் தீர்வுகளை அடையாளம் காண்பதற்கும் பெப்ரல் இயக்கத்தினால் திட்டமிடப்பட்ட ஒரு கலந்துரையாடல் 2022.05.05 ஆம் திகதி 25 வலிமையிழந்தோரின் பங்கேற்புடன் கண்டி சர்வோதய நிறுவனத்தில் நடைபெற்றது.

- **வலிமையிழந்தோர் சம்பந்தமாக மாவட்ட தேர்தல்கள் உதவி ஆணையாளர்களுக்கும் புதிய பணியாட்குழுக்குவும் உணர்திறனூட்டல்**

  தேர்தல் ஆணைக்குழுவினாலும் தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச மன்றத்தினாலும் (IFES) தேர்தல் ஆணைக்குழுவின் புதிய பணியாட்குழுவினர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் வலிமையிழந்தோர் வாக்கெடுப்பு நிலையத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக உணர்திறனூட்டுவதற்காக வாக்கெடுப்பு நிலையமொன்றின் மாதிரியமைப்பைத் தயாரித்து அதன் அனுபவங்களை வழங்குதலும் தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட்குழுவினர் வலிமையிழந்தோரின் பொதுவான பிரச்சினைகள் சமபந்தமாக உணர்திறனூட்டலும் குறித்த பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான தலையீடுகளை மேற்கொள்ளலும் சம்பந்தமான ஒரு கலந்துரையாடல், 2022.05.26 ஆம் திகதி மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுடனும் ஏனைய புதிய பணியாட்குழு அலுவலர்களுடனும் வெள்ளவத்தை சினமன் கிரேண்ட் ஹோட்டலில் நடைபெற்றது.

- **தேர்தல் செயன்முறைக்கு வலிமையிழந்தோரின் பங்கேற்பைப் பெற்றுக்கொள்ளும்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளை நிவர்த்திசெய்வதற்கு அரசியல் கட்சிப் பிரதிநிதிகளின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல்**

  தேர்தல் செயன்முறைக்கு வலிமையிழந்தோரின் நேரடிப் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல் சம்பந்தமாகவும், அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுக்கும் சிவில் அமைப்புகளின் செயற்பாட்டாளர்களுக்கும் உணர்திறனூட்டல், அவர்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் கட்சிகளின் ஊடாக வாய்ப்பளித்தல் பற்றி அறிவுறுத்தல், தற்போது பதிவுசெய்யப்பட்டுள்ள அரசியல் கட்சிகளின் ஊடாக தேர்தல் செயன்முறையின்போது வலிமையிழந்தோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நிவர்த்திசெய்வதற்குத் தேவைப்படும் உணர்திறனூட்டலை மேற்கொள்ளல் ஆகியன சம்பந்தமான ஒரு கலந்துரையாடல் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர், ஆணையாளர் நாயகம், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் வலிமையிழந்தோர் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் 2022.06.17 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவில் நடைபெற்றது.

- **வலிமையிழந்தோர் அமைப்புக்களின் ஒன்றிணைந்த முன்னணியின் பிரதிநிதிகளின் பிரேரணைகள் குறித்த கலந்தாலோசனை**

  தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட அதன் அனைத்து உறுப்பினர்களுக்கும் வலிமையிழந்தோர் அமைப்புகளின் ஒன்றிணைந்த முன்னணியின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான ஒரு சந்திப்பு 2022.08.08 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவில் நடைபெற்றது. தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட விடயப் பொறுப்பு அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர். வலிமையிழந்தோர் அமைப்புக்களின் பிரதிநிதிகளின் பிரேரணைகளும் கருத்துக்களும் மீதான விசேட கவனத்துடன் எதிர்கால வேலைத்திட்டம் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. வலிமையிழந்த ஆட்களின் அமைப்புகளின் பிரதிநிதிகளின் பிரேரணைகளும் கருத்துக்களும் மீதான ஆணைக்குழுவின் கவனத்தைச் செலுத்துவது இதன் நோக்கமாகும். வலிமையிழந்தோர் அமைப்புக்களின் ஒன்றிணைந்த முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 7 பேர் இதில் கலந்துகொண்டனர்.

- **இலங்கை வலிமையிழந்தோர் சமூகத்தை தேர்தல் செயன்முறையில் பங்கீடுபாட்டாளர்களாக முனைப்பாக்குவதற்காக ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதுடன் சம்பந்தப்பட்ட சவால்கள் குறித்த உசாவுதலும் விதப்புரைகளை முன்வைத்தலும்.**

  தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், வலிமையிழந்தோர் அமைப்புக்களின் ஒன்றிணைந்த முன்னணியின் பிரதிநிதிகளதும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் பிரதிநிதிகளதும் பங்கேற்புடன் 2022.08.18 ஆம் திகதி கொள்ளுப்பிட்டி மன்டரினா ஹோட்டலில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது. இக்கலந்துரையாடலின்போது அச்செயன்முறையில் இணைவதிலுள்ள தடங்கல்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அறிக்கை வெளியிடப்பட்டது. இதற்கு பெவ்ரல் இயக்கம் பூரண அனுசரணை வழங்கியது. வலிமையிழந்தோர் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து தேர்தல் ஆணைக்குழுவின் கவனத்தைச் செலுத்துவதற்கும் அதற்காக இனிவரும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைப்பதற்கும் முன்மொழியப்பட்டது.

- **வாக்குச்சீட்டுக்கு வழிகாட்டும் ஸ்ரென்சில் சட்டகத்தை மேம்படுத்துவதற்காக விழிப்புலனற்றோரின் பிரேரணைகளையும் கருத்துக்களையும் பெற்றுக்கொள்ளலும் ஜனநாயகமும் சர்வஜன வாக்குரிமையும் சம்பந்தமாக அறிவுறுத்தலும்**

  கிழக்கு மாகாணம் (மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை) மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டத்தைச் சேர்ந்த விழிப்புலனற்றோரின் பங்கேற்புடன் வாக்குச்சீட்டுக்கு வழிகாட்டும் ஸ்ரென்சில் சட்டகத்தைப் பயன்படுத்தி வாக்கு அடையாளமிடுவதற்கான ஒத்திகைச் செயற்பாடுகளை மேற்கொள்ளல் சம்பந்தமான ஒரு நிகழ்ச்சி, 2022.08.30 ஆம் திகதி பாசிக்குடா 'அனந்தய ஹோட்டலில்' விழிப்புலனற்ற 54 பேரின் பங்கேற்புடனும், தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்களதும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்களதும், இலங்கையில் இடையீட்டு தேர்தல் செயன்முறையொன்றுக்கான தொழில்நுட்பக் குழுக்களின் ஏற்பாட்டாளருக்கும் தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச மன்றத்தின் பிரதிநிதிகளின் பங்கேற்புடனும் வளப் பங்களிப்புடனும் நடைபெற்றது. வாக்குச்சீட்டுக்கு வழிகாட்டும் ஸ்ரென்சில் பணிச்சட்டகத்தை முன்னேற்றுவதற்கான பிரேரணைகளையும் கருத்துக்களையும் பெற்றுக்கொள்வதற்கும் ஜனநாயகமும் சர்வஜன வாக்குரிமையும் பற்றி அறிவுறுத்தப்பட்டிருத்தலும் இதன் நோக்கங்களாகும்.

- **தேர்தல் செயன்முறையில் வலிமையிழந்தோருக்கு உகந்ததோர் ஊடக பாவனைக்காக வெகுஜன ஊடகவியலாளர்களுக்கு உணர்திறனூட்டல்**

  தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச மன்றம், இலங்கை இடையீட்டு தேர்தல் செயன்முறையொன்றுக்கான சர்வதேச மன்றம், தேர்தல் ஆணைக்குழு ஆகியன இணைந்து வெகுஜன ஊடகவியலாளர்கள், வலிமையிழந்தோருக்கான உணர்திறனூட்டும் ஒரு நிகழ்ச்சியை 2022.09.16 ம் திகதி கொள்ளுப்பிட்டி ரூவன்பீக் ஹோட்டலில் 25 வெகுஜன ஊடகவியலாளர்களின் பங்கேற்புடன் ஒழுங்குசெய்தது. இதற்கு மாதிரி வாக்கெடுப்பு நிலையமொன்றின் உதவியுடன் வாக்கெடுப்பு நிலையத்தில் வலிமையிழந்தோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்த அனுபவம் ஊடகவியலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது.



## 19. சட்ட அலுவல்கள்

2022 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர், அதன் உறுப்பினர்கள், தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்களை எதிராளிகளாக பெயர்குறித்து புதிதாக தாக்கல்செய்யப்பட்ட 42 வழக்குகள் சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறியக் கிடைத்துள்ளது.

- **உயர்நீதிமன்றம்**
  உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட 14 வழக்குகள் உள்ளன. உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட வழக்குகளில் பாராளுமன்ற உறுப்பினர் பதவி சம்பந்தமான 09 வழக்குகளும் (வழக்கிலக்கம் SC/FR/203/2022, SC/FR/207/2022, SC/Writ/04/2022, SC/FR/210/2022, SC/FR/206/2022, SC/FR/216/2022, SC/FR/217/2022, SC/FR/211/2022, SC/FR/215/2022), கட்சி அங்கத்துவத்தை முடிவுறுத்துதல் சம்பந்தமான 03 வழக்குகளும் (வழக்கிலக்கம் SC/Exp/01/2022, SC/Exp/02/2022, SC/Exp/03/2022), உள்ளூர் அதிகாரசபை தலைவர் பதவி சம்பந்தமான 01 வழக்கும் (வழக்கிலக்கம் SC/Writ/02/2022), அரசியல் கட்சிகளின் பதிவு சம்பந்தமான 01 வழக்கும் (வழக்கு இல. SC/FR/247/2021) கோப்பிடப்பட்டுள்ளது.

- **மேன்முறையீட்டு நீதிமன்றம்**
  மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட 05 வழக்குகளில் உள்ளூர் அதிகாரசபைகளின் தலைவர் பதவி சம்பந்தமான 04 வழக்குகளும் (வழக்கிலக்கம் CA/Writ/52/2022, CA/Writ/24/2022, CA/Writ/11/2022, CA/Writ/182/2022), தேருநர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்படாமை சம்பந்தமான 01 வழக்கும் (வழக்கிலக்கம் CA/Writ/255/2022), கோப்பிடப்பட்டுள்து.

- **மேல் நீதிமன்றம்**
  மேல் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட 09 வழக்குகளில் 07 வழக்குகளும் (வழக்கிலக்கம் WP/HCCA/COL/LA/04/2022, WP/HCCA/COL/LA/05/2022, HC/NE/Writ/02/2022, WP/HCCA/COL/LA/127/2022, WP/HCCA/COLOMBO/175/22/LA, HC/NE/Writ/13/2022, WP/HCCA/Mt./54/2021/LA), கட்சி அங்கத்துவத்தை முடிவுறுத்தல் சம்பந்தமான வழக்குகளும் காணப்படுகின்றன. 02 வழக்குகள் (வழக்கிலக்கம் HC/NE/Writ/04/2022, HCW/04/2022) உள்ளூர் அதிகாரசபைத் தலைவர் பதவி சம்பந்தமானவையாகும்.

- **மாவட்ட நீதிமன்றம்**
  மாவட்ட நீதிமன்றத்தில் 14 வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டுள்ளன. அவை யாவும் (வழக்கிலக்கம் DSP/10/2022 – கொழும்பு, DSP/11/2022 – கொழும்பு, DSP/25/2022 – கொழும்பு, SPL/31/2022 – யாழ்ப்பாணம், SPL/373/2022 – மொறட்டுவை, DSP/161/2022 – கொழும்பு, DSP/162/2022 – கொழும்பு, DSP/156/2022 – கொழும்பு, DSP/147/2022 – கொழும்பு, DSP/436/2021 – கொழும்பு, DSP/441/2021 – கொழும்பு, DSP/107/2021 – கொழும்பு, DSP/442/2021 – கொழும்பு, DSP/435/2021 – கொழும்பு) கட்சி அங்கத்துவத்தை முடிவுறுத்தல் சம்பந்தமானவையாகும்.

இதற்கு முந்திய ஆண்டுகளில் தாக்கல்செய்யப்பட்ட மனுக்களுக்குரிய திருத்திய 01 மனுவும், தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்கூறிய அனைத்து வழக்குகளும் திருத்திய மனுக்களும் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரும் அதன் உறுப்பினர்களும் தெரிவத்தாட்சி அலுவலர்களும் கையொப்பமிட்ட பதிலிப் பத்திரங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதேபோல்,

மேற்கூறிய வழக்குகள் தொடர்பான தேர்தல் ஆணைக்குழுவின் அவதானிப்புகளும் 32 வழக்குகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்ட மீறல்கள் சம்பந்தமாக மாத்தறை பொலிஸாரினால் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட 47057 ஆம் இலக்க வழக்கிற்கு சட்டமா அதிபர் திணைக்களம் ஆஜராவதால்,, ஆணைக்குழு சார்பாக சாட்சிகளை நெறிப்படுத்துவதற்கு மாத்தறை பிரத்தியேக சட்டத்தரணி ஒருவரின் உதவி பெறப்பட்டது.

2022 ஆம் ஆண்டில் தாக்கல்செய்யப்பட்ட வழக்குகளில் 07 வழக்குகள் (வழக்கிலக்கம்: SC/FR/203/2022, SC/FR/207/2022, SC/Writ/04/2022, SC/FR/210/2022, SC/FR/206/2022, WP/HCCA/COL/LA/04/2022, WP/HCCA/COL/LA/05/2022) தற்போது முடிவடைந்திருப்பதாகவும், முந்திய ஆண்டுகளுக்குரிய 14 வழக்குகள் (வழக்கிலக்கம் SC/Exp/03/2019, SC/FR/200/2021, DSP/05/2021, MIS/168/2018, MIS/167/2018, CA/Exp/01/2019, CA/Writ/242/2021, DSP/13/2020, CA/Exp/01/2020, DSP/88/2021, SC/Writ/09/2022, SC/FR/440/2019, SC/Writ/03/2021, DSP/07/2021) முடிவடைந்திருப்பதாகவும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

- **விசாரணைகளும் சட்ட ஆலோசனைகளை வழங்குதலும்**

இது தவிர, பல்வேறு சட்ட நிலைமைகள் குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரி 04 வினவல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அதேபோல், தேருநர் இடாப்பு மீளாய்வுக்குரிய தேசிய தேர்தல்கள் பிரிவிலிருந்தும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்தும் கிடைக்கும் கடிதங்களுக்குரிய சட்ட ஆலோசனையும் வழங்கப்பட்டது. அவ்வாறான சுமார் 40 சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. மனித உரிமைகள் ஆணைக்குழுவிலிருந்து கிடைக்கப்பெற்ற 03 முறைப்பாடுகளுக்குரிய தரப்பினர்களிடமிருந்து தகவல் கோரி தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்குரிய 02 விசாரணைகளுக்கு தேவைப்படும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த தேர்தல்களுக்குரிய பதிவேடுகளைப் புறத்தொதுக்குதல், பி.சி. படிவங்களைப் புறத்தொதுக்குதல் தொடர்பான ஆலோசனை கோரி கிடைக்கப் பெறும் அவ்வாறான சுமார் 13 ஆலோசனை கோரல் கடிதங்களுக்குரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டன. அதேபோல் மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் நீதவான் நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டுவரும் வழக்குகளுக்கான சாட்சியளிப்பது சம்பந்தமாக 14 அழைப்பாணைகளை உரிய மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களுக்கு அனுப்புவதற்கும் ஆலோசனைகளை வழங்குவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- **தேர்தல் செலவுகளை ஒழுங்குறுத்துவதற்கான சட்டமூலம்**

தேர்தல்களின்போது கட்சிகளின்/வேட்பாளர்களின் தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டமூலம் கௌரவ சட்டமா அதிபரின் அவதானிப்பையடுத்து சட்ட வரையுநர் திணைக்களத்தினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதனை அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்வறத்காக மேதகு அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து அச்சட்டமூலம் மும்மொழிகளிலும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

- **தேர்தல் சட்டத் திருத்தங்களை மக்கள் முன்வைத்தல்**

தேர்தல் சட்ட மறுசீரமைப்புக்கான விசேட பாராளுமன்ற தெரிகுழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் சட்ட மறுசீரமைப்புக்கான பிரேரணைகளை துரிதமாக சட்டவாக்கப்படுத்துவதற்கு தேவைப்படும் சமூக பின்புலத்தை அமைப்பதற்கும், அது பற்றி சமூகத்தை அறிவுறுத்துவதற்கும் ஜனநாயக மறுசீரமைப்புகள் மற்றும் தேர்தல் கற்கை நிறுவகம் (IRES) தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச மன்றம் (IFES) ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் கருத்தரங்குகள் ஒழுங்குசெய்யப்படவுள்ளது. ஏலவே ஒழுங்குசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விபரம் கீழ் தரப்பட்டுள்ளது. இவ்வாண்டு நவம்பர் மாதத்திற்கு முன்னர் எஞ்சிய அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது:-

| **பங்குபற்றுநர்களின் அமைப்பு** | **பங்கு-பற்றியோரின் எண்ணிக்கை** | **செயலமர்வு நடைபெற்ற மாவட்டம்** | **திகதி** |
|---|---|---|---|
| சிவில் அமைப்புக்கள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள், இளைஞர்/ மகளிர்/வலிமையிழந்தோர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச அலுவலர்கள், ஊடகவியலாளர்கள், பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்ப மாணவர், மீனவ/ விவசாய/ தொழிலாளர் சமூகம் | 167 | அம்பாந்தோட்டை | 2022.08.22 |
| சிவில் அமைப்புக்கள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள், இளைஞர்/ மகளிர்/வலிமையிழந்தோர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச அலுவலர்கள், ஊடகவியலாளர்கள், பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்ப மாணவர், மீனவ/ விவசாய/ தொழிலாளர் சமூகம் | 162 | திருகோணமலை | 2022.09.08 |
| சிவில் அமைப்புக்கள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள், இளைஞர்/ மகளிர்/வலிமையிழந்தோர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச அலுவலர்கள், ஊடகவியலாளர்கள், பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்ப மாணவர், மீனவ/ விவசாய/ தொழிலாளர் சமூகம் | 169 | பொலன்னறுவை | 2022.09.09 |
| சிவில் அமைப்புக்கள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள், இளைஞர்/ மகளிர்/வலிமையிழந்தோர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச அலுவலர்கள், ஊடகவியலாளர்கள், பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்ப மாணவர், மீனவ/ விவசாய/ தொழிலாளர் சமூகம் | 90 | களுத்துறை | 2022.09.14 |
| சிவில் அமைப்புக்கள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள், இளைஞர்/ மகளிர்/வலிமையிழந்தோர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச அலுவலர்கள், ஊடகவியலாளர்கள், பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்ப மாணவர், மீனவ/ விவசாய/ தொழிலாளர் சமூகம் | 88 | மாத்தறை | 2022.09.16 |

| பங்குபற்றுநர்களின் அமைப்பு | பங்கு-பற்றியோரின் எண்ணிக்கை | செயலமர்வு நடைபெற்ற மாவட்டம் | திகதி |
|---|---|---|---|
| சிவில் அமைப்புக்கள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள், இளைஞர்/ மகளிர்/வலிமையிழந்தோர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச அலுவலர்கள், ஊடகவியலாளர்கள், பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்ப மாணவர், மீனவ/ விவசாய/ தொழிலாளர் சமூகம் | 97 | யாழ்ப்பாணம் | 2022.09.20 |
| சிவில் அமைப்புக்கள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள், இளைஞர்/ மகளிர்/வலிமையிழந்தோர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச அலுவலர்கள், ஊடகவியலாளர்கள், பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்ப மாணவர், மீனவ/ விவசாய/ தொழிலாளர் சமூகம் | 87 | கிளிநொச்சி | 2022.09.21 |
| சிவில் அமைப்புக்கள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள், இளைஞர்/ மகளிர்/வலிமையிழந்தோர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச அலுவலர்கள், ஊடகவியலாளர்கள், பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்ப மாணவர், மீனவ/ விவசாய/ தொழிலாளர் சமூகம் | 61 | மன்னார் | 2022.09.22 |



## 20. தேர்தல் பிணக்குத் தீர்வு

தேர்தல் பிணக்குத் தீர்வு முறைமைகள் மற்றும் எதிர்வரும் தேர்தல்களின்போது தேர்தல் சட்டங்களின் அமுலாக்கல் பற்றிய தேர்தல் பிணக்கு முகாமைத்துவப் பிரிவுகளுக்கு இணைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட சிவில் அதிகாரிகள், அரசாங்க அறிவித்தல் கொடுக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் அதிகாரிகளுக்கு 15 பயிற்சிச் செயலமர்வுகள் பின்வருமாறு ஒழுங்குசெய்யப்பட்டன. தேர்தல் வன்செயல் கண்காணிப்பு நிலையம் (CMEV), தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச மன்றம் (IFES), சுதந்திரமானதும்


நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) ஆகிய நிறுவனங்கள் இச்செயலமர்வுகளை ஒழுங்குசெய்வதற்கு அனுசரணை வழங்கின. இது தவிர, களுத்துறை, கொழும்பு ஆகிய மாவட்டங்களின் செயலமர்வுகளையும் இவ்வாண்டு இறுதிக்குள் நடாத்த எதிர்பார்க்கப்படுகிறது.

| | **பங்குபற்றிய அலுவலர்கள்** | **பங்குபற்றியோர் எண்ணிக்கை** | **செயலமர்வு நடைபெற்ற இடம்** | **திகதி** |
|---|---|---|---|---|
| 01. | நுவரெலியா மாவட்டம் | 150 | மாவட்டச் செயலகம் | 2022.01.05 |
| 02. | பதுளை மாவட்டம் | 135 | ரிவர்சைட் ஹோட்டல் | 2022.01.06 |
| 03. | மொணராகலை மாவட்டம் | 100 | மாவட்டச் செயலகம் | 2022.01.12 |
| 04. | அம்பாறை மாவட்டம் | 100 | பிரதேச செயலகம் | 2022.01.13 |
| 05. | வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் | 160 | வவுனியா மாவட்டச் செயலகம் | 2022.01.20 |
| 06. | அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்கள் | 227 | கிறிஸ்ரன் பார்க் ஹோட்டல் | 2022.01.21 |
| 07. | மட்டக்களப்பு மாவட்டம் | 55 | சன்னி ∴பிஷ் ஹோட்டல் அன்ட் ரெஸ்டுரன்ட் | 2022.01.26 |
| 08. | திருகோணமலை மாவட்டம் | 60 | மாவட்டச் செயலகம் | 2022.01.27 |
| 09. | மாத்தளை மாவட்டம் | 55 | புதிய மாவட்டச் செயலக கேட்போர்கூடம் | 2022.02.17 |
| 10. | கண்டி மாவட்டம் | 120 | ரத்னசிறி விக்ரமநாயக்க தேசிய பயிற்சி நிலையம் | 2022.02.18 |
| 11. | இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்கள் | 150 | கேத்துமதீ விழா மண்டபம் | 2022.03.14 |
| 12. | புத்தளம் மாவட்டம் | 80 | இசுர விழா மண்டபம் | 2022.03.22 |
| 13. | குருணாகல் மாவட்டம் | 150 | புளு ஸ்கை கிரேண்ட் ஹோட்டல | 2022.03.23 |
| 14. | காலி மாவட்டம் | 100 | வக்வெல்ல முகாமைத்துவப் பயிற்சி நிறுவனம் | 2022.03.29 |
| 15. | கம்பஹா மாவட்டம் | 210 | ஜயசிங்க சிற்றி சென்றர் | 2022.08.24 |





## 21. நிதிசார் கட்டுப்பாடு

2022 ஆம் ஆண்டிற்கான செலவுகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் 928.24 மில்லியன் ரூபா நிதியேற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், மீண்டெழும் செலவுகளை மேற்கொள்வதற்கான 867.24 மில்லியன் ரூபாவும் மூலதனச் செலவுகளை மேற்கொள்வதற்கான 61 மில்லியன் ரூபாவும் இதிலடங்கும்.




மீண்டெழும் செலவுகளை மேற்கொள்வதற்கான நிதியேற்பாட்டில் 2022.09.30 ஆம் திகதி வரை 582.26 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. மூலதனச் செலவுகளை மேற்கொள்வதற்கான நிதியேற்பாட்டில் 2022.09.30 ஆம் திகதி வரை 8.04 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல. 03/2022 இற்கமைய செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக மூலதனச் செலவுகளை மேற்கொள்வதற்கு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு மீதமாகியுள்ளது.




ஆணைக்குழுவின் பணியாட்குழுவுக்கு கடன் வசதியளிப்பதற்காக அரசாங்க அலுவலர்களின் முற்பண 'பி' கணக்கின் கீழ் 26 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2022.09.30 ஆம் திகதியளவில் இத்தொகையில் 15 மில்லியன் ரூபா பணியாட்குழுவுக்கு கடன் முற்பணமாக வழங்கப்பட்டுள்ளது.

## 22. கணக்காய்வுத் தகவல்கள்

தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலகள் சம்பந்தமான தற்போதைய உள்ளக கட்டுப்பாட்டு முறையின் கீழ் குறைபாடுகளையும் பலவீனங்களையும் கண்டுபிடிப்பதற்கு உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் 2022 செப்டம்பர் 30 ஆம் திகதி வரை 11 மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களின் கணக்காய்வு அலுவல்களை மேற்கொண்டு 07 கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்தி அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அதேபோல், கணக்காய்வு ஐயவினாக்களை குறைத்துக்கொள்ளும் பொருட்டு சிறந்த நிதிசார் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கு ஆணைக்குழுவினதும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களினதும் அலுவலர்களை அறிவுறுத்துவதற்கும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நடவடிக்கை எடுத்தது.

## 23. கட்டுமானங்களும் புதுப்பித்தல்களும் (செலவு விடயம் 2001)

தேர்தல் ஆணைக்குழுவின் பெறுகைப் பிரிவுக்கு சுவர் இறாக்கைகளைப் பொருத்திணைத்தல், தேர்தல்கள் செயலகத்தினதும் வடக்கு முனைக் கட்டிடத்தினதும் நீர் வழங்கலுக்கான பம்பு நிலையங்களில் மின்வழங்கலை வழமைநிலைக்குக் கொண்டுவருதல், பிரதான கூட்ட மண்டபத்தின் பெயர்ப்பலகையை நவீனமயப்படுத்தல் என்பவற்றுடன் கண்டி பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் உத்தியோகபூர்வ இல்லத்தின் அவசர புதுப்பித்தலும் வவுனியா உதவித் தேத்தல்கள் ஆணையாளரின் உத்தியோகபூர்வ இல்லத்திலும் அவசர புதுப்பித்தலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2022.04.26 ஆம் திகதிய தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றிக்கை இல. 03/2022 இற்கமைய ஏனைய புதுப்பித்தல் வேலைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

செலவு விடயம் 2104 (கட்டிடங்களும் கட்டுமானங்களும் (புதிய) மற்றும் 2105 (காணிகளும் காணி மேம்படுத்தல்களும்) தொடர்பிலும் மேற்படி சுற்றிக்கைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 24. வாகனங்களின் பாவனையும் பராமரிப்பும்

தேர்தல் ஆணைக்குழு, வாகனங்களின் பாவனையும் பராமரிப்பும் சம்பந்தமாக கணினிப் பிரிவுடன் இணைந்து வாகன முகாமைத்துவ முறைமையொன்றைத் தயாரித்தது. அக்கணினிச் செய்நிரல் தலைமை அலுவலகத்திலும் தெரிவுசெய்யப்பட்ட சில மாவட்டங்களிலும் ஒரு முன்னோடிக் கருத்திட்டமாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிலிருந்து அச்செய்நிரல் அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்கும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

செயற்பாட்டுக் குத்தகை முறையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவுக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 03 வாகனங்கள் அரச செலவுகளைக் குறைப்பதற்காக மீண்டும் உரிய நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 25. 2022 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் பயிற்சிகள்

2022 ஆம் ஆண்டின் முதல் 03 காலாண்டுகளினுள் தேர்தல்கள் செயலகத்திலும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களிலும் பணிபுரியும் அலுவலர்கள் பின்வருமாறு பயிற்சிகளில்/ செயலமர்வுகளில் பங்குபற்றினர்.

- **உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் பற்றிய நிகழ்ச்சித்திட்டம்**

2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல், கலப்பு விகிதாசார முறைப்படி நடைபெற்ற முதலாவது தேர்தலாகும். இதன்மூலம் தேர்தல் முறையில்

பரிந்துரைகளை முன்வைக்க நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிகுழுவுக்கு ஜனாதிபதித் தேர்தல் தவிர்ந்த ஏனைய தேர்தல்களின் முறைமை கலப்பு விகிதாசாரமாக இருக்க வேண்டுமென தேர்தல் ஆணைக்குழு முன்மொழிந்துள்ளது.

அதற்கமைய விரைவில் நடைபெறவுள்ள உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தலுக்கான முன் ஆயத்தமாக கலப்பு விகிதாசார முறையின் கீழ் தேர்தலொன்றை நடாத்துதல் பற்றிய பிரயோக ரீதியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று மாவட்ட பிரதி மற்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்காக ஒழுங்குசெய்வது பொருத்தமானதென முன்மொழியப்பட்டதற்கு அமைய பயிற்சி நிகழ்சித்திட்டமொன்றை ஒழுங்கு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில், 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தலை அடிப்படையாகக்கொண்டு அதனை நடாத்திய விதம், பெற்றுக்கொண்ட அனுபவங்கள், தவறுகள் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் அவற்றை சீர்செய்து முன்னேற்றிய விதம் முதலியன குறித்த அனுபவங்களையும் பரிசீலிப்பதற்கு திட்டமிடப்படுவது. குறிப்பாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அண்மைக்காலத்தில் இணைந்த மாவட்ட பிரதி மற்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அதன்மூலம் மிகத் தெளிவான அறிவை வழங்குவது அதன் முக்கிய நோக்கமாகும்.

அதற்கமைய, தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச மன்றத்தின் (IFES) அனுசரணையுடன் 2022 ஜூன் மாதம் 26, 27, 28, 29 ஆகிய தினங்களில் இந்த வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்றது.



- **வருடாந்த பொருள் கணக்கெடுப்பு பற்றிய பயிற்சி**

2022.01.13 ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்ற வருடாந்த பொருள் கணக்கெடுப்பு பற்றிய தமிழ்மொழி மூலமான பயிற்சியில் 20 அலுவலர்கள் பங்குபற்றினர். அதேபோல், 2022.01.18 ஆம் திகதி நடைபெற்ற பயிற்சியில் 40 அலுவலர்களும், 2022.01.19 ஆம் திகதி களுத்துறையில் நடைபெற்ற பயிற்சியில் 39 அலுவலர்களும் பங்குபற்றினர்.

- **அலுவலக முறைகள்/ முகாமைத்துவம் பற்றிய பயிற்சி**

  - 2022.04.07 ஆம் திகதி தேர்தல்கள் செயலகத்தில் நடைபெற்ற அலுவலக முறைகளும் தாபன விதிக்கோவையும் பற்றிய பயிற்சியில் தேர்தல்கள் செயலகத்தின் முகாமைத்துவ சேவை அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள், ஆவண உதவியாளர்கள் 68 பேர் பங்குபற்றினர்.





  - IFES நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் 2022.05.26, 27 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்ற தேர்தல் முகாமைத்துவம் பற்றிய பயிற்சியில் 18 அலுவலர்கள் பங்குபற்றினர்.
  - தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் அரச வாகனங்களின் பராமரிப்பு பற்றிய 2022.07.19 ஆம் திகதி நடைபெற்ற இயங்கலை (online) மூலமான பயிற்சியில் போக்குவரத்துப் பிரிவின் அலுவலரொருவர் பங்குபற்றினார்.
  - 2022.08.25, 26 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்ற தகவல் தொழில்நுட்பத்தில் நவீனத்துவம் மற்றும் சைபர் பாதுகாப்பு பற்றிய பயிற்சிநெறியில் 33 அலுவலர்கள் பங்குபற்றினர்.
  - அரசாங்க நிருவாக அமைச்சினால் 2022.09.28, 29 ஆம் திகதிகளில் இயங்கலை முறையில் நடாத்தப்பட்ட தாபனவிதிக் கோவை பற்றிய பயிற்சிநெறியில் 92 அலுவலர்கள் பங்குபற்றினர்.

- **மொழிப் பயிற்சி**

  - இரண்டாம் மொழி (தமிழ்) 200 மணித்தியால பயிற்சிநெறியில் பதவிநிலை அலுவலரொருவர் பங்குபற்றினார்.
  - அபிவிருத்தி அலுவலர்களுக்கும் முகாமைத்துவ சேவை அலுவலர்களுக்கும் இரண்டாம் மொழி (தமிழ்) 150 மணித்தியால பயிற்சிநெறியொன்று தேர்தல்கள் செயலகத்தில் நடைபெற்றது.

## 26. வெளிநாட்டுப் பயிற்சிகள்

  - 2022 பெப்ரவரி மாதம் 13 முதல் 2022 பெப்ரவரி மாதம் 18 வரை இந்தியாவில் நடைபெற்ற தேருநர்களை அறிவுறுத்துதல் பற்றிய இயல்திறன் விருத்தி பயிற்சியில் (Capacity Building in Voter Education)மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (நிருவாகம்) திரு. பி.எம்.பீ.ஜீ.பீ.வி.பண்டார, கண்டி மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. எச்.டி.என்.சம்பத் பர்னாந்து, உதவித் தேர்தல்கள் ஆணையாளர் (தேசிய தேர்தல்கள்) திரு. எஸ்.எச். ஶ்ரீன் யாப்பா பொரலெஸ்ஸ, மன்னார் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. கே.விமலரூபன் ஆகியோர் பங்குபற்றினர்.
  - 2022 மார்ச் மாதம் 19 ஆம் திகதி முதல் 2022 மார்ச் மாதம் 26 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெற்ற தேருநர்களைப் பதிவுசெய்தல் பற்றிய இயல்திறன் விருத்திப்

பயிற்சியில் (Capacity Building in Voter Education மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (உள்ளூராட்சி) திரு. கே.எச்.ஜீ.எஸ்.நாலக்க களுவெவ, குருணாகல் மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. ஆர்.எம்.எச்.பி.ரத்நாயக்க, களுத்துறை மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. டப்.டப்.கே.ஜயவீர பர்னாந்து, நுவரெலியா மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. கே.எல்.ஏ.களுகம்பிட்டிய ஆகியோர் பங்குபற்றினர்.

- 2022 செப்டம்பர் மாதம் 19 ஆம் திகதியிலிருந்து 2022 அக்டோபர் மாதம் 23 ஆம் திகதி வரை UNESCO, UNDP மற்றும் அமெரிக்க Knight Centre நிறுவனத்தினால் இயங்கலை மூலம் நடாத்தப்பட்ட A free global Massive Open Onlin Course (MOOC) on Information and Elections in the Digital Era பற்றிய சான்றிதழ் கற்கைநெறியில் கம்பஹா மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் திரு.கே.ஜே.எஸ்.மாதவ, தேர்தல்கள் செயலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் (நிருவாகம்) திரு. பி.எம்.ஐ.எஸ்.எல். பண்டார, கேகாலை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. கே.எச்.எஸ்.எஸ்.பீ.கஸ்துரிசிங்க, அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. கசுன் ஸ்ரீநாத் அத்தநாயக்க, வவுனியா மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. ஜே.ஜெனிட்டன் ஆகியோர் பங்குபற்றினர்.

## 27. செயலாற்றுகை அறிக்கை

தேர்தல் ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை, 2022.06.17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## 28. இடமாற்றல்கள்

2022 ஆம் ஆண்டில் தேர்தல் ஆணைக்குழுவில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு இடமாற்றம் பெற்று வர விருப்பம் தெரிவித்திருந்த வேறு அரசாங்க திணைக்களங்களில் பணிபுரிந்த பின்வரும் சேவைகளைச் சேர்ந்த அலுவலர்கள் தேர்தல் ஆணைக்குழுவில் பணிபுரிவதற்கான தகுதியின் அடிப்படையில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்து தேர்தல் ஆணைக்குழுவுக்கு இடமாற்றலைப் பெறவும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வெளியே இடமாற்றல்களைக் கோரிய அலுவலர்களை அவ்விடங்களுக்கு விடுவிப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

| **பதவி** | **இடமாற்றல் பெற்று வருகைதந்த அலுவலர்களின் எண்ணிக்கை** | **வெளி இடங்களுக்கு இடமாற்றல் பெற்றுச் சென்ற அலுவலர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| பதவிநிலை அலுவலர்கள் | 06 | 04 |
| முகாமைத்துவ சேவை அலுவலர் சேவை | 13 | 07 |
| அபிவிருத்தி அலுவலர் சேவை | 02 | 01 |
| சாரதி சேவை | 05 | 01 |
| அலுவலகப் பணியாளர் சேவை | - | 01 |

## 29. ஓய்வுறுத்தல்கள்

2022 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் 02 முகாமைத்துவ சேவை அலுவலர்களும், 01 அலுவலகப் பணியாளர் சேவை ஊழியரும், 01 சாரதி சேவை ஊழியரும் சேவையிலிருந்து ஓய்வு பெற்றனர்.

2022 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் 06 முகாமைத்துவ சேவை அலுவலர்களும், 03 சாரதிகளும், 01 வாகன சுத்திகரிப்பாளரும் 60 வயது பூர்த்தியடைந்தமையால் ஓய்வுபெற்றுச் செல்லவுள்ளனர். அவ்வனைத்து அலுவலர்களதும் ஓய்வூதிய கோப்புக்களை உரிய முறையில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் 09 முகாமைத்துவ சேவை அலுவலர்களும், 01 சாரதியும், 02 அலுவலகப் பணியாளர்களும், 60 வயது பூர்த்தியடைந்ததன் பேதில் ஓய்வுபெறவுள்ளனர். அவ்வனைத்து அலுவலர்களதும் ஓய்வூதிய கோப்புக்கள் உரிய முறையில் தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 30. தகவல் முகாமைத்துவ முறைமைகள்

- தலைமை அலுலவகத்திற்கு லீவு முகாமைத்துவ முறைமை (leave Management System) அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த லீவு முறைமையின் ஊடாக லீவுகளை அனுமதிப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- நாளாந்த தபாலுக்கும் கணினிச் செய்நிரலொன்று தற்போது விருத்திசெய்யப்பட்டு வருகிறது. 2023 ஆம் ஆண்டில் அதனை அமுலுக்குக் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது.
- தேர்தல் பிணக்குகளை அவதானிப்பதற்கும் மூலோபாயத் திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக்கும் தகவல் தொழில்நுட்ப முறைமைகளின் தொகுதியொன்றை தயாரித்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

## 31. பணிகளும் கடமைகளும் பற்றிய வேலை ஆய்வு

தேர்தல் ஆணைக்குழுவின் பணிகளும் கடமைகளும் பற்றிய வேலை ஆய்வொன்று இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்துள்ளது. அதன் பூர்வாங்க நடவடிக்கைகள் தற்போது முடுக்கிவிடப்பட்டுள்ளன. இந்த ஆய்வை 02 மாதங்களில் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

## 32. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம் தொடர்பான அலுவல்கள்

2022.01.01 ஆம் திகதியிலிருந்து 2022.09.30 ஆம் திகதி வரையான காலத்தில் தகவலுக்கான உரிமைச்சட்டம் தொடர்பாக வினவப்பட்ட 39 தகவல் கோரிக்கைகளில் 38க்குரிய தகவல் வழங்கப்பட்டுள்ளதுடன், 01 தகவல் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

## 33. ஊடக ஒருங்கிணைப்பு அலுவல்கள்

- 18 வயதை எய்தியவுடன் இளைஞர் யுவதிகளுக்கு தேருநர் இடாப்பில் பெயரைப் பதிவுசெய்து கொள்ளக்கூடியவாறு நிறைவேற்றப்பட்ட புதிய சட்டத் திருத்தத்தின் அடிப்படையில் “உங்களின் வாக்கு நாட்டின் எதிர்காலம்” என்று 2022.02.01 ஆம் திகதி கொழும்பு மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் ஒழுங்குசெய்த வருடாந்த வாக்காளர் தின வைபவத்திற்கு பரந்ததொரு பரப்புரையை வழங்குமுகமாக அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனத் தலைவர்கள்/ தலைமை ஆசிரியர்கள்/ செய்தி ஆசிரியர்கள் உள்ளிட்ட ஊடகவியலாளர்கள் பங்கேற்கச் செய்யப்பட்டனர்.
- தேர்தல் ஆணைக்குழுவினால் ஒழுங்குசெய்யப்பட்ட 2022 வருடாந்த வாக்காளர் தின வைபவம் குறித்தும் 2022.08.12 ஆம் திகதி கொண்டாடப்பட்ட சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டும், தேர்தல் ஆணைக்குழுவினால் அண்மையில் நிறைவேற்றப்பட்ட 18 வயதை எய்தியவுடன் தேருநர் இடாப்பில் பெயரைப் பதிவுசெய்துகொள்வதற்கு வாய்ப்பளிக்கும் சட்டமும் அதன் முக்கியத்துவமும் குறித்து பொதுமக்களை அறிவுறுத்தும் பொருட்டு ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட அலுவலர்களுடன் நேர்காணல்களை நடாத்துவதற்கு அரச மற்றும் தனியார் இலத்திரனியல் அலைவரிசைகளதும் அச்சு ஊடக நிறுவனங்களதும் ஒத்துழைப்பு பெறப்பட்டது.
- நாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்து தேர்தல் ஆணைக்குழு கொண்டுள்ள கருத்துக்களும் அது சம்பந்தமாக முன்வைக்கப்படும் பிரேரணைகளும் நடவடிக்கைகளும் குறித்தும் அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களின் ஊடகவியலாளர்களையும் அறிவுறுத்துவதற்கான ஊடகவியலாளர் மாநாடொன்று 2022.06.09 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவில் ஒழுங்கு செய்யப்பட்டது.




- தேர்தல் ஆணைக்குழுவினால் குறித்த காலப்பகுதியினுள் ஆணைக்குழுவின் முடிவுகளும் பணிகளும் குறித்து பொதுமக்களை அறிவுறுத்துவதற்கான 17 ஊடக அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

## 34. ஆவணக் காப்பகம்

- தேர்தல் ஆணைக்குழுவின் ஆவணக் காப்பகத்தின் பணிகளை புதியதொரு வளவில் நிறுவி மிகவும் ஒழுங்கமைந்த முறையில் பராமரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதிலுள்ள ஆவணங்களை மிகவும் பாதுகாப்பான முறையில் காத்தல், அவற்றுக்கு அவசியமானவாறு எந்தவொரு தரப்பிற்கும் எளிதில் பயன்படுத்துவதற்காக உரியவாறு களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதற்கான ஒரு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
- இநோக்கத்திற்காக முழுநேர அடிப்படையில் அலுவலரொருவர் இணைக்கப்பட்டுள்ளார். ஆவணக் காப்பகத்தின் நடவடிக்கைகள் குறித்து தேசிய சுவடிக்கூட திணைக்களத்தினால் குறித்த அலுவலருக்கு முறையான ஒரு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் ஆவணக் காப்பகத்தின் சேவைகளை மிகவும் திறம்பட நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 35. அறிவு முகாமைத்துவ அலகும் அரும்பொருட் காட்சியகமும்

தேர்தல் ஆணைக்குழுவின் பணிகளும் கடமைகளும் குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்ளல், அதற்குக் கிடைக்கும் கோரிக்கைகளின் அளவு நாளாந்தம் அதிகரித்து வருகிறது. இவ்விடயம் குறித்த ஆய்வுப் பணிகளில் ஈடுபடும் மாணரவ்கள், ஆராய்ச்சியாளர்கள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் அவற்றில் முக்கியமானவையாகும். ஆகையால், இத்தகைய தகவல் தகவல் தேநரு:களின் பணிகளை மிகவும் வினைத்திறாகவும் பயனுறுதிவாய்ந்த விதத்திலும் நிறைவேற்றும் பொருட்டு தேர்தல் ஆணைக்குழுவினால் அறிமுக முகாமைத்துவ அலகொன்று தாபிக்கப்பட்டது. அதற்கு காணப்படும் தேர்ல் சட்டதிட்டங்கள், சட்டங்கள், அறிக்கைகள் மற்றும் ஆவணங்களை களஞ்சியப்படுத்துவதற்கும் பயன்படுத்துவதை எளிதுபடுத்துவதற்கும் முறையான ஒரு பொறிமுறை நிறுவப்பட்டுள்ளது. இது தவிர தேர்தல் செயன்முறையுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் தகவல்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இப்பணிகளை மிகவம் வசதிப்படுத்துவதற்கு முறையான ஒரு பொறமுறை நிறுவப்பட்டுள்ளது. இது தவித தேர்தல் செயன்முறையுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் தகவல்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இப்பணிகளை மிகவும் வசதிப்படுத்துவதற்காக வருகைதரும் பயனர்களுக்கு இருக்கக்4டிய இடங்கள், கணினி மற்றும் பல்லூடக வசதிகள், இ-தகவல்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளல் வரையான வசதிகளை வழங்குவதற்கு ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது.



## 36. தேர்தல் ஆணைக்குழுவின் வெளியீடுகள்

- 2002 – 2025 பங்கேற்பு மூலோபாயத் திட்டம்




- தேர்தல் ஆணைக்குழுவின் 2017 – 2020 வரையான நான்காண்டு கால பங்கேற்பு மூலோபாயத் திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட கவனயீர்ப்புப் பகுதிகின் கீழ் ஆணைக்குழுவின் பணிகளையும் கடமைகளையும் ஒட்டிய காலாண்டு அடிப்படையில் 'புள்ளிடியின் பலம்' என்ற பெயரில் செய்திமடலொன்று வெளியிடப்பட்டது. அச்செய்திமடலின் *தொகுதி 5, இதழ் 3* செப்டம்பர் – டிசம்பர், 2021) மற்றும் *தொகுதி 6, இதழ் 01* ஜனவரி – ஏப்ரல், 2022) அச்சிடப்பட்டுள்ளது. *தொகுதி 6 இதழ் 2 (மே-ஆகஸ்ட், 2022)* அச்சிடுவதற்காக அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



- 2022.03.11 ஆம் திகதி நடைபெற்ற 2022 ஆம் ஆண்டின் வாக்காளர் தின தேசிய நினைவு வைபவத்தை முன்னிட்டு சர்வஜன வாக்குரிமை, மக்கள் இறைமை, ஜனநாயகம் ஆகியன குறித்து மக்கள் மத்தியில் பரந்ததொரு விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களதும் குறித்த விடயம் பற்றிய தொழில்வாண்மையினரதும் ஆக்கங்கள் அடங்கிய "2022 வாக்காளர் தின தேசிய நினைவு வைபவம்" என்ற பெயரில் கட்டுரைத் தொகுப்பொன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.



- 2020.08.05 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் பற்றிய தேர்தல் ஆணைக்குழுவின் அறிக்கை மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டது. அவ்வறிக்கை, 2022.05.04 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.




- 2019.11.16 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதித் தேர்தல் பற்றிய தேர்தல் ஆணைக்குழுவின் அறிக்கை மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டுள்ளது. அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.




- 2014 சனாதிபதித் தேர்தல், 2015 பாராளுமன்றத் தேர்தல் ஆகியவற்றுக்காக தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட வர்த்தமானிகளை இரு வேறு புத்தகங்களாக தொகுத்து அச்சிடுவதற்கு அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission



මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

(+94)112868441-42-43 (+94)112868426 info@elections.gov.lk www.elections.gov.lk
elecomsl SriLankaElectionCommission Election Commission of Sri Lanka Election Commission of Sri Lanka



මැතිවරණ කොමිෂන් සභාවේ ප්‍රකාශනයකි
தேர்தல் ஆணைக்குழுவின் வெளியீடு
**PUBLISH BY ELECTION COMMISSION**